ரிஜிஸ்டர் நெ. M. 2992. தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஹு மார்கழி-மீ 17-உ (31—12—1933) | மலர் 6.

காந்தியத்தை ஒழிப்பது வர்ணாச்சிரமத்தை ஒழிப்பதாகும்.

காந்தியார் பணக்காரக் கூட்டத்தார்.

காந்தியார் பார்ப்பனரின் கையாள்.

## ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்ற சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனிதசமூகம் பொருளாதாரத்தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன் ஏழை என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக தோழமை வேண்டும் என்ற சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி, முதலாளி என்பது போன்ற பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்க வேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6. அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத்தும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப்போராடுகின்றது.

"ஹரிஜன" சேவை வர்ணாச்சிரமத்தின் வேறு வேஷம்.

கதர் பொருளாதார புரட்சிக்கு முட்டுக்கட்டை.

தேசீயம் [illegible] முதலாளிகளின் சூழ்ச்சி.

# கத்தோலிக்கர்களின் வீண்கூச்சல்.

இந்நூலில் கத்தோலிக்க மதப்பிரசாரத்தின் மடமையையும், மேனுட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான நிலையையும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார போப்பிற்கு எழுதியுள்ள ஓர் கடிதமும் போப்வி?த்த அறிக்கையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை 0—0—6.

நூறு புத்தகங்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் தபாற் செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செலவுடன் ரூ. 5—0—0.

விலாசம்:—

குடி அரசுப்பதிப்பகம், ஈரோடு.



## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடினவேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.





உயர்ந்த முறையில் தயாரித்தவை. பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவரென்றும், சமஸ்தானவைத்திய நிபுணரென்றும் பழனியில் கியாதி வாய்ந்திருப்பதை நீங்கள் அறியீர்களா? எமது மருந்துகளில் ஒப்புயர்வற்றது.

## மகா வீரிய
# தங்கபஸ்பம்.

வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும்.

அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10.

## சர்வபடை நிவாரணி.

சகல மேகபடை, ஊரல், படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்ந்துவிடும். புட்டி 1க்கு 0—8—0.

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.



## விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு மாதா சையிலும், சீர்திருத்தக்காரர் சமதர்மி கையிலும் இன்றியமையாமல் இருக்க வேண்டியது. "'விவாக விடுதலை' என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை" என்பது எவ்வாறென அறிய விரும்பின் இந்நூலை ஒருமுறை படித்தல் வேண்டும்.

விலை அணா 4.

கிடைக்கும் இடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

எஸ். தங்கவேலு,
கீழ ஆண்டார் வீதி, தெப்பக்குளம், திருச்சி.



## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

# நாகரீகமென்றால் என்ன?

## ஈ. வெ. இராமசாமி சொற்பொழிவு.

ஈரோடு London Missionary Society யின் போதனாமுறை பாடசாலையில் நிகழ்ந்த Library Association கூட்டத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் "இந்தியாவில் காணப்படும் இன்றையநாகரீகம்" என்ற பொருள்பற்றி தர்க்கவாதம் நிகழ்வுற்றது. விவாத முடிவில் தலைவர் ஈ. வெ. ராமசாமி அவர்கள்நிகழ்த்திய முடிவுரையின் சாராம்சம் வருமாறு:—

தோழர்களே! இனி அடுத்தபடியாக நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டுள்ள விஷயம். அக்கிராசனர் முடிவுரை எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அனேககேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லுவேன் என்று எனக்கு முன்பு பேசிய நண்பர் கூறினார். நான் எப்பொழுதும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆனால் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான—முடிவான பதில் சொல்லக் கூடிய சகலகலாவல்லவனென்று எண்ணிவிடாதீர்கள். நான் சொல்லும் அபிப்பிராயம்தான் முடிவானதென்றோ, அதுவே முடிந்த ஆராய்ச்சியின் சரியான கருத்து என்றோ, நீங்கள் கருதக் கூடாது.

விவகாரம், நியாயம் என்றஇரண்டு வார்த்தைகளையும் உபயோகப்படுத்தும் விதத்தை சரியாக உணர்ந்துகொள்ளும்படி கோருகிறேன். நியாயம் வேறு—விவகாரம் என்பதும் வேறு. விவகா ம் என்பது வலுத்தவன் ஆதிக்கத்தையும், தந்திர சூக்ஷிகளையும், பணச் செல்வாக்கையும பொருத்து முடிவு பெற்றுவிடும். ஒருவன் தன்னிடம் சக்தி இல்லாத காரணத்தால்—பேசும் திறமை, எடுத்துக்காட்டும் அனுபோகம் ஆகியவை இல்லாதகாரணத்தால்— ஒரு விஷயத்தைப்பற்றி வாதித்துத் தோல்வியுற்று விட்டால் அது நியாயம் கண்டு பிடித்ததாகிவிடுமா? அது போல் உங்கள் வாய் அடங்கும்படி நான் பதில் சொல்லி விட்டதாலேயே நான் சொன்னது சரி என்று சொல்லிவிட முடியாது. உங்களுக்கு எடுத்துச் சொல்லி மெய்ப்பிக்க முடியாததாலேயே நான் சொன்னது தப்பு என்றும் சொல்லிவிட முடியாது- ஆதலால் எனக்குத் தெரிந்த பதில் சொல்லுகிறேன். அதை ஆராய்ச்சி செய்து பிறகு ஒரு தக்க முடிவுக்கு வாருங்கள்.

இன்றையதினம் இங்கு பேச எடுததுக்கொண்ட விஷயம் "இந்தியாவின் தற்கால நாகரீகம்" என்பதாகும். இது ஒரு கூடாத விஷயமல்ல. மிக்க ருசிகரமானதும் விரிந்த பொருள்களைக் கொண்டதுமான நல்ல விஷயத்தையே நீங்கள் இங்கு பேச எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

"நாகரீகம்" என்கின்ற வார்த்தைக்குப் பொருளே பிடியில் சிக்காத ஒரு விஷயமாகும். ஒவ்வொருவரும் 'நாகரீகம்' என்பதற்கு ஒரு தனிப்பொருள் கூறி வருகிறார்கள். கண்ணோட்டம் என்கிற தலைப்பின் கீழ் குறளில் நாகரீகம் என்கிற வார்த்தை வள்ளுவரால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதாக நான் 10, 20 வருஷங்களுக்குமுன்பு பார்த்ததாக ஞாபகம். அது தாக்ஷண்ணியம், அடிமை என்கிற பொருளில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எனக்கு ஞாபகம்.

நாகரீகம் என்கிற வார்த்தைக்கு எந்தக்கருத்தை வைத்துக்கொண்டு பேசினாலும் மக்கள் சமூகம், நடை, உடை, ஆகாரம் மற்றும் எல்லா பாவனைகளிலும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தினால் தான் இவைகள்வேறுபட்டிருக்கிறதென்று கூறமுடியாது. எப்படியோ எல்லாம் மாறுதலில் தான் போய்க்கொண்டிருக்கிறது. நம்முடைய பெண்கள் முன்பு முழங்கைக்குக் கீழும் இரவிக்கை அணிந்து வந்தார்கள். பின்புமேலேறியது. மறுபடிகீழே இறங்கியது. இப்பொழுது மறுபடியும் மேலேயே போய்க்கொண்டிருக்கிறது.மேல்நாட்டுஸ்திரிகளும்-தெருக்களில் தெருக் கூட்டுவது போன்ற ஆடைகளை முன்பு அணிந்து வந்தார்கள். அந்த காலத்தில் துணிகளைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள பணம் படைத்தவர்கள் ஆள்களை நியமித்துக்கொண்டிருந்தார்கள். அது அக்கால நாகரீகம். இப்பொழுதோ என்றால் ஆடை விஷயத்தில் மேல் நாட்டுப் பெண்களும் எல்லாம் சுருக்கிக் கொண்டு விட்டார்கள். அதை நாம் இப்பொழுது நாகரீகமென்று தான் கருதுகிறோம்.

நாம் இவைகளைப்பற்றி எல்லாம் பேசும் பொழுதும் யோசிக்கும் பொழுதும் எந்தவித பற்றுதலும் இல்லாமல் அதாவது ஜாதி, மதம், தேசம் என்பன போன்ற பற்றுகளை விட்டு விட்டு (Free யாக) சுயேச்சையாக சீர்தூக்கிப் பார்த்தால் தான் விஷயங்கள் நன்றாகத்தெரிந்து கொள்ளலாம். அதன் உண்மையும் அப்பொழுது நான் விளங்கும்.

ஒரு காலத்தில் சாம்பலைப் பூசிக்கொண்டு சிவ சிவா என்று ஜெபிப்பது தான் யோக்கியமாகக் கருதப்பட்டது. இன்றைய கால தேச வர்த்தமானங்கள் மேல் சொன்ன விஷயத்தை கேலி செய்கிறது.

புருஷன் பெண்ஜாதி என்கிற இரு சாரர்களை எடுத்துக்கொண்டாலும், முன்பு கல் என்றாலும்கணவன் புல் என்றாலும் புருஷன் என்று மதித்து அடிப்பூதுவதே ஒரே கடமையென்று நடந்து வந்த பெண்களைப் பற்றி பெரிதும் மதித்து வந்தார்கள். ஆனால் இன்றோ புருஷனிடம் மனைவியானவள் நான் உனக்கு வேலைக்காரியா? அடிமைப்பட்ட மாடா? ஜாக்கிரதையாயிருந்தால் சரி, இல்லாவிட்டால் எனக்கும் சம அந்தஸ்தும் சம உரிமையும் சர்வ சுதந்திரமும் உண்டு என்று கர்ஜனை செய்யும் பெண்களையே நாகரீகம் வாய்ந்தவர்களென்று கருதுகிறோம்.

முன்பு புராணத்தைப்பற்றியும்மதத்தைப்பற்றியும் பேசுவதுதான்வித்வத்தன்மையாக இருந்தது. ஆனால் அது இன்று குப்பையாகி பரிகசிக்கத்தக்கதாக ஆகி விட்டது. புத்திக்கும் அறிவிற்கும் பொருத்தமில்லாத முரட்டுப் பிடிவாதத்தில் முன்பு நம்பிக்கையிருந்ததை சிலாகித்துப் பேசினோம். ஆனால் இன்றையதினம் பிரத்தியக்ஷமாக எதையும் எடுத்துக் காட்டித் தெளிவுபடுத்துவதையும்-விஞ்ஞானம் போன்றதான அறிவியக்க நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுணர்களையுமே நாம் பெரிதும் மதித்துவருகின்றோம்.

நாகரீகம் என்பது நிலைமைக்கும் தேசத்திற்கும்-காலப் போக்கிற்கும் தக்கவாறு விளங்குகிறது. காலதேச வர்த்தமான-வழக்கத்தையே யொட்டி "நாகரீகம்" காணப்படுகிறது.

காலப்போக்கானது எந்ததேக்கத்தையும் உண்டாக்குவதில்லை- ஒன்றிலிருந்துமற்றொன்றுதோன்றவும்-புரட்சி ஏற்படவும் செய்கிறது.

மீசை, தலைமயிர் இவைகளைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டுப் பேசினீர்கள். எது நாகரீகமென்று கருதுகின்றோமோ அது பெருத்த அஜீர்ணத்துக்குவந்துவிடுகிறது. மீண்டும் அந்த நிலைமையானது மாறிக்கொண்டு போகத்தான்செய்கின்றது.

ஒரு விஷயமானது வாய் சாமர்த்தியத்தினால் செலாவணியாகிவிடும். அது மெய்யோ-பெய்யோ சரியோ-தப்போ எப்படியும் இருக்கலாம்.

நாம் என் எதற்காக உழைத்துப் பாடுபடவேண்டும்? பகுத்தறிவுபடைத்த நாம் பாடுபட்டுத்தான்ஆகவேணடுமா?நாகரீகம் என்பது சதா உழைத்துத்தான்உண்ணவேண்டுமா? என்கிறகேள்விகள் எழுந்து மக்கள் சமூகம் கஷ்டம் தியாகமின்றி- நலம்பெற முயற்சிக்கலாம். இது நாகரீகமாக கருதப்பட்டு பயன் அடைந்தாலும் அடையலாம்.

இன்றைய அரசியல் விஷயத்தில் இராட்டை சம்பந்தப்பட்டிருக்கிறது. இது ஆயிர வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டு நாகரீகமாக பாவிக்கப்பட்டிருந்தது. பின்பு குப்பையில் தள்ளப்பட்டது பிறகு மீண்டும் அது வெளிப்படுத்தப்பட்டு அதற்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப்பட்டு இராட்டை சுற்றுவதும்-தக்ளி நூல் நூற்பதும் நாகரீகமாகக் கருதப்பட்டது. ஆனாலும் அதவும் ஒழிந்து போயிற்று என்றே சொல்லலாம். இவைகளையெல்லாம் எந்தவிதமான (தேசம், மதம், ஜாதி) பற்றுதலுமில்லாத பொதுமனிதன், பொதுநோக்கோடு கவனித்தால் உண்மை விளங்காமல்போகாது.

நாம் ஓர்காலத்தில் தேசம், தேசியம்-தேசப்பற்று என்பதை நாகரீகமாகக் கருதி வந்திருக்கிறோம். ஆனால் இன்றோ அவைகளையெல்லாம் உதறித்தள்ளி மனித ஜீவகாருண்யம் உலக சகோதரத்துவம் மக்கள் அபிமானம் (Citizen of the World) என்று கருதுவதையே பெரிதும் நாகரீக மாகக் கருத முன்வந்துவிட்டோம்.

ஒருகாலத்தில் நாகரீகமாக கருதி வந்ததை இன்று நாம் பரிகசித்து வருகிறோம். ஒரு மனிதன் தான் நாயக்கன், முதலி, வைணவன், சைவன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்போராடிக்கொண்டு ஒவ்வொருவரும் தாங்கள் அதிக மேல் சாதிக்காரனாவதற்குச்சைவவைணவப் போக்கைப்பற்றிக்கொண்டு பூணூலையும் நாமத்தையும் போட்டுத் தங்கள் மதத்தையும் சிலாகித்துப் பிதற்றிக்கொண்டும் வந்தான்.ஆனால் இன்றையதினம் இதைகளையெல்லாம் புத்திகெட்டதனமென்றும், முற்போக்குக்கு முரணானதென்றும்கூறி வெகுவாகக் கண்டனம் செய்துவருகிறோம். ஒருகாலத்தில் தனித் தனித்தத்துவம் நாகரீகமாகக் கருதப்பட்டது. உதாரணமாக ஒரு தனித்தனி ஜாதி நன்மையும்-தேச நன்மையும் சிலாக்கியமாகக் கருதப்பட்டது. ஆனால் ஒரு ஜாதியின் அனுகூலம் பிற ஜாதியானுக்குப் பாதகம் என்பதையும் ஒருதேச நன்மை மற்றொரு தேசத்திற்கு பொல்லாங்கு என்பதையும் நாம் இன்று நன்கு உணர ஆரம்பித்துவிட்டோம்.

தோழர்களே! நான் குறிப்பாக ஒரு விஷயத்தைப்பற்றி வற்புறுத்தி இங்கு கூற விரும்புகிறேன். அதாவது நாம் அனுபவ முதிர்ச்சியால் அறிவு ஆராய்ச்சியால் நாம் முற்போக்காகிக்கொண்டு வருகிறோம் என்பதேயாம். நாம் எல்லாமனிதர்களையும் அறிவின் உணர்ச்சியால் ஆழ்ந்து கவனிக்கிறோம. உதாரணமாக வியாபாரிகளை - மக்கள் சமூகத்தின் நலனைக் கொடுத்து லாபமடையும் கோஷ்டியைச்சேர்ந்தவர்களென்றும், வேலைதேவிக்காரர்களை-மனிதசமூக நாசகர்த்தாக்களென்றும் மத ஆதிக்கங்கொண்டவர்க்கத் தினர்களையும்—மனித சமூக விரோதிகளென்றும் கண்டிக்கின்றோம்.

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

# சோவியத் ரஷ்யாவில் நீதிமுறை.

## சிறைச்சாலைகளும் கைதிகளும்.

சென்ற வாரத்தொடர்ச்சி

சிறைச் சாலைகளும் கைதிகளும்·

அபராதம், சிறைவாசம், கண்டிப்பான எச்சரிக்கை, தற்காலீகமான போலீஸ் மேற்பார்வை, கட்டாயவேலை முதலிய தண்டனைகள் ரஷியாவில் குற்றவாளிகளுக்கு விதிக்கப்படுகின்றன.

கட்டாய வேலைத்தண்டனைபெற்ற குற்றவாளிகள் தங்களுடைய வழக்கமான வேலைகளைத்தான் செய்யவேண்டும். ஆனால் அந்த வேலையினால் கிடைக்கும் சம்பாத்தியத்தில் பெரும்பாகத்தைச் சர்க்கார் பறிமுதல்செய்துகொள்ளுவார்கள். இதுதான்கட்டாய வேலைத் தண்டனை. சாதாரண ஆட்களுக்குச் சொற்பகால சிறைத் தண்டனை கொடுக்கப்படுகிறது.

சிறைச்சாலைகளில் பலவிதம் உண்டு. சில சிறைச்சாலைகள் பழையமாதிரி மதில்கள் உள்ளதாய் இருக்கின்றன. திறந்த தோட்டச் சுவர்கள் உள்ள சிறைச்சாலைகளும், கைதிகள் குடியேறி வாழுகிற இடங்களும் இருக்கின்றன. இந்த இரண்டுவிதமான சிறைச்சாலைகளிலும் குற்றவாளிகள் ஓர் அளவுக்கு உட்பட்ட சுயாதீனத்துடன் வாழ்க்கை நடத்துகின்றனர்.

அபாயகரமான குற்றவாளிகளுக்கு நமது நாட்டில் இருப்பது போன்ற சிறைச்சாலைகளும் இன்னும் இருக்கின்றன. ஆனால் சீக்கிரமே அவைகள் எல்லாம் மாறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூடுமானவரையில் ஜெயில் நிர்வாகம் சுயஆட்சி முறையிலேயே நடத்தப்பட்டு வருகின்றது. அடிப்படையான விதிகளைத்தவிர, மற்ற விஷயங்களெல்லாம் கைதிகளுடைய நிர்வாகத்திலேயே விடப்பட்டிருக்கின்றன. நாள்தோறும் கைதிகள இன்னின்ன வேலைகள் செய்ய வேணடும் என்று அவர்களே ஏற்பாடு செய்துவருகின்றனர். சில சமயங்களில் சிறு குற்றங்களுக்காகத் தங்களோடு வேலை செய்யும் கைதிகளுக்கு தண்டனையும் விதிக்கிறார்கள். கைதிகளை சட்டத்திற்கு அடங்கி நல்வாழ்க்கை நடத்தும் குடிகளாக சீர்திருத்துவதற்காகவே ரஷியாவில் உண்மையான முயற்சி செய்யப்படுகிறது.

### சீர்திருத்த வசதிகள்.

சாதாரணமாக கைதிகள் சிறைச்சாலை தொழிற்சாலையிலே வழக்கமாக ஏழு அல்லது எட்டு மணிநேரம் வேலை செய்கிறார்கள். மறு நேரத்தில் புத்தகங்கள வாசிப்பது, பிரசங்கங்கள்-ரேடியோ பாடல்கள் கேட்பது, ஆட்டங்கள் ஆடுவது, தேகாப்பியாசம் செய்வது, நாடகம் பார்ப்பது, சிறைச்சாலையில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளில் ஆசிரியர் வேலை செய்வது, அந்தப்பத்திரிகைகளை படிப்பது ஆகிய வேலைகளிலே கைதிகள் தங்கள் காலத்தை செலவிடுகின்றனர். கைதிகள் சிறைக் காவலாளிகளுடனும், மற்றக் கைதிகளுடனும் தடையின்றிப் பேசுவதற்கு இடம் கொடுக்கப்படுகிறது. சிநேகிதரும், உறவினரும் வந்து பார்ப்பதற்கும் கடிதப் போக்கு வரவு செய்வதற்கும் சிறைச்சாலை விதிகள் தாராளமாக இடம் கொடுக்கின்றன. வெயில் காலத்தில் கைதிகளுக்கு இரண்டு வாரம் ரஜாக் கொடுக்கப்படுகிறது. வாரக்கடைசி நாட்களில்கூட ரஜா பெறுவதற்கு இடமிருக்கிறது. கைதிகள் அலுத்துப் போகத்தக்கதாக அவர்களுக்கு அளவுமீறி கடினவேலை கொடுக்கப்படுவதில்லை. தனி அறையில் அடைத்து வைத்து ஒரு வேலையும் இல்லாமையால் மனம் நலிந்து அவர்கள் வாழ்க்கையே சீர்குலையும்படி செய்யப்படுவதில்லை. ரஷிய சிறைச்சாலை, தண்டனை அனுபவிக்கிற இடமல்ல. அதை சமூக சீர்திருத்த வீடு என்றுதான் சொல்ல வேண்டும். கைதிகள் சிறைச்சாலையிலிருந்து விடுதலைபாகும்பொழுது குற்றவாளி என்ற அடையாளத்துடனே அவர்கள் வெளிப்படுகிறதில்லை. ஏனெனில் அவர்கள் விடுதலையானதும், அவர்களை தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களாகக் கருதி தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு வேலைகொடுக்கப்படுகிறது. அப்படி அவர்கள் வேலையில் அமர்ந்த பின்னும், சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களுடன் பழக்கம் வைத்திருந்து, அவர்களுக்கு தக்க சம்பளமும், நல்ல வேலையும் கிடைக்கும்படி தங்கள் செல்வாக்கைஉபயோகிக்கின்றனர் சுற்றிலும் மதில்கள் உள்ள பழைய மாதிரி சிறைச்சாலைகளுக்குப் பதிலாக முழுதும் திறந்த அல்லது பூரண அடைப்பில்லாத இடங்களிலே கைதிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### சிறைச்சாலை குடியிருப்புகள்.

சில இடங்களிலே சோவியத் சர்க்கார் புதிய முறையில் தொழிலாளர் குடியிருப்புகள் ஏற்படுத்தி பரீட்சை பார்க்கின்றனர். அதாவது மற்ற சுயாதீன மக்களைப்போலவே தண்டனைக்குட்பட்ட கைதிகளையும் பெரியகிராமங்களில் குடியேறி வேலை செய்து வாழ்க்கை நடத்தும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் தண்டனைக்குட்படாத மற்ற சுயாதீன குடிகளுக்கும் வித்தியாசம் என்னவெனில், அவர்கள் இரவு 11 மணிக்கு முன் வீடுகளுக்கு திரும்பி வந்துவிட வேண்டும். அவர்கள் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமாயின் அவர்களை மேற்பார்வை செய்கிற போர்டாரிடமிருந்து உத்தரவு பெறவேண்டும். சாதாரண குடிகளுக்குள்ள உரிமைகள் அவர்களுக்கு கிடையா. அவர்கள் தொழிற் சங்கங்களில் அங்கத்தினர் ஆகமுடியாது. இந்தக் குடியிருப்புகளையும், மேற்கண்ட சிறைச்சாலைகளையும் பார்வையிட்டு கைதிகள் கூறும் முறையீடுகளைக் கேட்டு அதற்கு தக்க பரிகாரம் செய்வது புரோக்கியூரேட்டர்களின் வேலையாகும். இத்தகைய முறைகளை கையாளுவதனால் சோவியத் சிறைச்சாலைக்கு போன கைதிகள் சமூகத்துக்கு தீங்கை விளைக்கத்தக்க கொடிய குற்றவாளிகளாக வெளிவருவதில்லை. அதற்கு மாறாக, சிறையிலுள்ள சீர்திருத்த சாலைகளில் கிடைக்கும் பயிற்சியின் பலனாக அவர்கள் பொதுமக்களுக்கு நலன் செய்யத்தக்க உபயோகமுள்ள ஆட்களாகிவிடுகின்றனர்.

இவ்விதமாக குற்றவாளிகளை சிறையில் வைப்பது அவர்களை சீர்திருத்துவதற்கேயன்றி, அவர்களிடம் பழி வாங்குவதற்காக அல்ல என்று ரஷியர் முதன் முதலாக உலகத்துககு எடுத்துக் காட்டிருக்கிறார்கள்.

இந்த விஷயத்திலாவது, ரஷியசிறை நிர்வாக முறைகளை ஆராய்ச்சி செய்து ரஷியக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுவது பெரிதும் பயன் தருவதாகும். இந்த நாட்டிலே சிறைச்சாலை சீர்திருத்த விஷயமாக பெரும் முயற்சி செய்யப்படவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். குற்றவாளிகள் விடுதலையான பிறகு, சட்டத்துக் கட்டுப்பட்டு நேரிய வாழ்க்கை நடத்துமாறு அவர்களை சீர்திருத்துவதற்கு நமது நாட்டுச் சிறைச்சாலைகளிலே எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்க வில்லை.

### அரசாங்க ஆதிக்கம்.

இங்கிலிஷ் நீதி முறையில் அனுபவமுள்ள ஒருவர் சோவியத் நீதி இலாக்காவைப்பற்றி பின் வருமாறு ஒரு ஆட்சேபனை கூறலாம். ஆதாவது, ரஷிய நீதிபதிகள் அரசாங்க ஆதிக்கத்துக்கு உள்பட்டவர்கள். அவர்களை வேலையில் நியமிப்பதும், வேலையிலிருந்து நீக்கிவிடுவதும் அரசாங்க நீதி இலாக்காவின் இஷ்டத்தைபொருத்தது. ஆகையால் அவர்கள் அரசாங்கத்தின் உத்திரவுக்கு கட்டுப்பட்டு வேலை செய்ய வேண்டியதாகும். அவர்கள் செய்யும் தீர்ப்புகள் அரசாங்கத்தை நிர்வகிக்கும் கட்சியாரின் கொள்கைகளுக்கு சாதகமாக இருக்க வேண்டியதாகும் என்று ஆட்சேபனை கிளப்படலாம்.

ஆனால் ரஷியா தைரியமாக ஒரு புதிய முறையை பரீட்சித்து வருகிறது, என்பதையும், பொதுவுடமைக் கட்சியார் தங்கள் திட்டத்தை பூர்த்தி செய்துகொள்வதற்காகவும் எதிர்ப்புகளை அடக்கியாள்வதற்காகவும், தங்கள் வல்லமையெல்லாம் ஒன்று திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கவனிக்கும் பொழுது நீதி இலாக்கா அரசாங்க அதிகாரத்துக்கு உட்பட்டிருப்பது தீமையே யாயினும் அந்த அவசியமான தீமை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

சிலநாடுகளிலே நீதிஸ்தலங்களுக்கு பூரண சுயாதீனம் இருப்பதாகவும், சுயாதீனமே அவைகளின் முக்கிய சிறப்பு என்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளப் படுகிறது. ஆனால் அந்த நீதிஸ்தலங்களின் சுயாதீனமும் சுயாதீனமின்மையும் நடைமுறையில அந்த நாடுகளில் அரசு செலுத்தும் கட்சியாருடையவும் எதிர்க் கட்சியாருடையவும் பலாபலத்தைப் பொருத்ததேயன்றி வேறல்ல. எந்த

தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.

# கிராம வாழ்க்கையின் சீர்திருத்தம்.

(தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.)

இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்து விட்டால் நம் தேசத்தின் துயர்கள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும் என்பது பலரின் அபிப்பிராயம். அப்படி நினைப்பவர்கள் கிராம வாழ்க்கையை சற்றும் ஊன்றிக்கவனித்தவர்களல்ல. நம் ஏழை ஜனங்களின் துயர்களில் பல, 5000 மைலுக்கப்பாலிருக்கும் இந்தியா செக்ரடரியும், அவரை சுற்றியிருக்கும் இந்தியா கௌன்ஸில் மெம்பர்களால் இழைக்கப்பட்டதல்ல. நம் சகோதரர்களென்று சொல்லிக்கொண்டு நம்மோடு சேர்ந்து அன்னியகவர்ன்மெண்டை கண்டனம் செய்துகொண்டு திரியும் சுதேசிகள் இழைக்கும் தீங்குகள் பல.

கிராம வாழ்க்கையை சீர்படுத்த கவர்ன்மெண்டார் அனேக சீர்திருத்தங்களை ஏற்படுத்தி இருக்கின்றனர். நாம் அதை ஒப்புக்கொள்வதால் இந்த அன்னிய கவர்னமெண்டைபுகழ்ந்ததாக எண்ணவேண்டியதில்லை. எல்லா தேசங்களிலும் பொதுஜன வாழ்வு மேம்பட வேண்டுமென்ற பரபரப்பே இச் சட்டங்களுக்கு காரணம். ஆனால் இச் சட்டங்கள் நம் தேசத்தில் ஏற்பட்டும் இந்த சீர்திருத்தங்களால் உண்டாகக் கூடிய நன்மை சற்றும் பயக்க வில்லை.

### கூட்டுறவு

உதாரணமாக கூட்டுறவை எடுத்துக்கொள்வோம். கூட்டுறவின்முக்ய தத்வம் என்ன? ஏழைகள், கடன் வாங்குவதற்கு யோக்கியதையற்ற ஏழைகள் பலரை ஒரு மிக்க சேர்த்து அவர்களுக்குக் கடன் வாங்கயோக்கியதை ஏற்படுத்துவதே ஆகும். ஏழை தனியாக கந்துக்கடைக்காரனிடம் போனால் 100க்கு 2வட்டி 3 வட்டியோ கொடுப்பது சகஜம். கூட்டுறவால் அனேக ஏழைகள் ஒன்று சேர்ந்து அர்பன் பாங்கியில் 3 வட்டிக்கு கடன் வாங்க கூடும். கூட்டுறவு கடன் வாங்குவதில் மட்டிலுமல்லாமல் விவசாயிக்கு வேண்டிய சாமான்களை சேர்ந்து வாங்குவதிலும் விற்க வேண்டிய சாமான்களை சேர்ந்து விற்பதிலும், சௌகர்யங்களை கொடுக்கின்றது. ஆகையால் கோவாபரேடிவ் சொசைடிகள் ஏழை ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்றால் ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சும் கந்துககடைக்காரனோடும் லேவா தேவிக் காரனோடும் ஆறு மாதக் கடன்காரனோடும் இடைவிடாமல் சண்டை செய்ய வேண்டும்.

ஆனால் அனேக சொசைடிகள் இந்த காரியத்தை சாதிக்க முடியவில்லை. கந்துக்கடைக்காரனுக்கு போட்டியாக ஸ்தாபிக்கபட்ட இந்த கோவாபரேடிவ் சொசைடி கந்துக்கடைக்காரர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு அவர்களுக்கு தாங்கள் பாக்கிகளை வசூலிக்க ஓர் நல்ல கருவியாக ஆகிவிட்டது. சில சொசைடிகளில் கந்து கடைக்காரனும் அவனைச்சேர்ந்தவர்களும் பஞ்சாயத்தார்களாக இருந்து வருகின்றனர். கந்துக்கடைக்காரன் கோவாபரேடிவ் சொசைடியில் பஞ்சாயத்தாக இருந்தால் தனக்கு வரவேண்டிய கடனை கோவாபரேடிவ் சொசைடியின் மூலம் வசூலிப்பது சகஜம். திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் கந்துக்கடைக்காரர்கள் இப்படி கோவாபரேடிவ் சொசைடிகளை பிடித்துக்கொண்டு தாங்கள், விலை வாசிகள் உயர்ந்திருக்கும்பொழுது வாரி எறிந்த பணங்களை எல்லாம் வசூலித்தார்கள். கடன்களை வசூலிப்பதற்காகவே சில கோவாபரேடிவ் சொசைடிகள் ஸ்தாபிக்கபட்டன. மற்றொரு தாலூகாவில் சமுதாய நிலங்களை கோவாப ரேடிவ் சொசைடிகளில் கடன் கொடுத்து வாங்கச் செய்து இப்பொழுது சில சொசைடிகள் சீர்கேடான நிலமையில்இருக்கின்றன. மற்றொரு தாலூகாவில் இன்னும் சில வேடிக்கையான சம்பவங்கள் நடக்கின்றன. கந்துக்கடை வைத்திருக்கும் பிரசிடெண்ட் கோவாபரேடிவ் சொசைடியில் கடன் கேட்பவனை யூனியனில் சாங்கிஷன் ஆகவில்லை. சொசைடியில்ரொம்பதவணை கடந்த கடன் களிருக்கின்றன. சொசைடி பஞ்சாயத்துக்கு கோரமில்லை என்று சாக்கு சொல்லி கடன் கேட்பவனுக்கு தான் ஏதோ மிக கருணை கூர்ந்து கடன் கேட்க வரும் விவசாயிக்கு உதவி செய்வதுபோல் அபினயித்து 6 காசு வட்டிக்கு தன் சொந்த பணத்தை இரண்டு மாதத்திற்கு கடன் கொடுப்பது வழக்கமாய் போயிற்று. அந்த இரண்டு மாதங்களுக்கு பிறகு சொசைடியிலிருந்து மறுபடியும் கடன் கொடுத்து தாங்கள் கொடுத்த வட்டியும் முதலும் எடுத்துக்கொள்வது வழக்கம். அதே மாதிரி தவணை கடந்த கடன்களுக்கெல்லாம் இரண்டு, மூன்று மாதங்களுக்கு பணத்தை அதிக வட்டிக்கு கொடுத்து திருப்பி சொசைடி பணத்தை திரும்பி கடன் கொடுப்பதும் உண்டு. இம் மாதிரி விவசாயியை கந்துக் கடைக்கும் சொசைடிக்கும் டெனிஸ் ஆட்டத்தில் இரு கக்ஷிக்காரர்களும் பந்தை இப்படியும் அப்படியும் அடிப்பதுபோல் திண்டாட அடித்து அவன் சொத்தை பிடுங்கிக்கொள்ளுகிறார்கள்.

இதைஎப்படிநிறுத்துவது? தைரியமும் தேச சேவையுமேகுறிப்பாகக்கண்ட சிறுவர்கள் இந்த சொசைடிகளில் சேர்ந்து அவைகளில் நடக்கும் அநியாயத்தை ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி கந்து கடைக்காரனை விரட்டி யடிக்க வேண்டும்.

கிராமக் கூட்டுறவு சங்கங்கள்தானிப்படி யென்றால் கிராம பஞ்சாயத்துகளுமப்படியே சீர்கேடான நிலமையிலிருக்கின்றன. கிராம பஞ்சாயத்துகளுக்கு அவ்வூர் கிராம நிலவரியில் ரூபாய்க்கு காலணா கொடுக்கப்படுகிறது. கிராம பஞ்சாயத்துக்கு இந்தசொற்பபணம்சற்றும்போதாது. சர்வ சாதாரணமாக சௌகரியங்களுக்குக்கூட இந்த வருமானம்போதாது கிராம பஞ்சாயத்துக்கு தேர்ந்தெடுக்கபடுபவர்கள் கிராமத்தின் பெரிய மனிதர்களும், கந்து கடைக்காரர்களும் அதிகாரிகளுமே. பெரும்பான்மையான ஏழை ஜனங்களுக்கும் தீண்டப்படாதோருக்கும் பிரதிநிதிகள் கிடையாது. இந்த பெரிய மனிதர்களும் பணக்காரர்களும் லேவாதேவிக்காரர்களுமடங்கிய பஞ்சாயத்து, வரி போட்டால் யார்மேல் வரி போடுவார்கள்? காலை யிலிருந்து மாலை வரையில் கஷ்டப்பட்டு பில் பிடுங்கும் பெண்பிள்ளைகள் தெருவோரத்தில் தோசை சுட்டு விற்று ஜீவனம் செய்யும் ஆப்பக்கார கிழவி தண்ணீரிலும் முள்ளிலும் வாத்தை ஓட்டிக்கொண்டு கஷ்டப்படும் வாத்துக்காரன், வயிற்று பிணிக்காக துர்நாற்றமும், அசௌகரியமும் நிரம்பிய வேலையை செய்து வரும் பன்றிக்குறவன்—இவர்களின் பேரில் வரி போடுவார்கள். தெருத்திண்ணையை விட்டு இறங்காமல் இருபது ஆள் வைத்து பண்ணையைப்பார்க்கும் எஜமானுக்கு வரி கிடையாது. அவரைபோலவே சௌகர்யமாக பணத்தை கொழிக்கும் கந்து வட்டிக்காரன் மேலும் வரி கிடையாது.

வரிபோடுவதில் தானிப்படி சுயநலத்தை பாராட்டுகிறார்களென்றால் பணத்தை சிலவிடுவதிலும் கூட சுயநலத்தை பாராட்டுகிறார்கள். ஊரில் விளக்குகள் போட்டால் சீக்குக்கிடமாகவும் நெருக்கமாகவு மிருக்குமிடங்களில் விளக்குகள் போடப்படமாட்டா. குடியானவர்கள் குடிசைகளிடையே விளக்குகள் போடப்படமாட்டா. கிராம முன்சீப் வீட்டு வாயலில், பணக்காரர்கள் குடியிருக்கும் தெரு, கந்துக்கடைக்கு அருகாமையில்—இவ்விடங்களில் தான் விளக்குகள் போடப்படும். ஊருக்கு ஓட்டன், கூட்ட நியமிக்கப்பட்டால் ஜனங்கள் புழுக்கள்போல் நெளியும் சேரிகளை அவன் கூட்டச் சொல்லப் பட மாட்டான். சுகாதாரம் தெரிந்த பணக்காரர்கள், அக்கிரகார வாசிகளிருக்கு மிடங்களைத்தான்அவன் கூட்டவேண்டுமென்பதை மறந்துவிடுவார்கள்.

இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டி பொது ஜனங்களுக்கு தங்கள் உரிமைகளை செவ்வனே எடுத்துச் சொல்வது கிராம வீரர்களால் தான் கூடும். பொதுநலசேவையில்ஈடுபட்ட சிறுவர்கள் இக்காரியங்களுக்கு கிராமந்தோறும் வேண்டும்.

வரிவசூலிக்கும் பஞ்சாயத்தின் அக்கிரமமிப்படி யென்றால்,ஊர்கிராம முன்சீப் கணக்கு பிள்ளை இவர்களில் கதையே வேறு. கிராம முன்சீப் சாதாரணமாக கிராமத்தின் அரசன். எவ்வளவு கொலை, களவுகள், சச்சரவுகளை கிராம முன்சீப்புகள் வெளிப்படாது மறைத்திருக்கின்றனர். மற்றும் சிலர் கிராம முனிசீப்புகள் ஊரில் சண்டைகளை மூட்டிவிட்டுக்கொண்டு அச்சண்டைகளுக்கு நடுவே குரங்கு மத்யஸ்தம் செய்து ஜீவிக்கின்றனர். கணக்குப்பிள்ளையைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை. பொய் தஸ்தவேஜு தயாரிப்பது சிக்கார்டுகளை மாற்றுவது-இதுவே சில கணக்குப்பிள்ளைகளுக்கு வேலை.

ஜாதி பஞ்சாயத்துகள் செய்யும் அக்கிரமங்கள் ஒரு புறம். சிலரைஜாதியைவிட்டு விலகுவது அவர்களுடைய உறவினரை விலக்கினவர்களுடன் உறவாடாது தடுப்பது, பறையர்கள் சக்கிலியர்களை அவர்களுக்கு தொண்டுசெய்யாமலிருக்கும்படி தூண்டுவது, இம்மாதிரி துன்பப்படுத்துவது நம் தேசத்திலுண்டு. மகாத்மா காந்தியுடன் சேர்ந்து தீண்டப்படாதோர்களை இந்த சமூகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணியவர்கள் சென்ற இரண்டு வருஷங்களாக மிகவும் கஷ்டப்பட்டுவருகிறார்களென்று தெரிந்த விஷயம். குழித்தலைதாலூகாவில் புது உணர்ச்சியடைந்த பள்ளர் பறையர்கள் படும் கஷ்டங்கள் பல.

இவையெல்லாம் யார் எடுத்துக்காட்டுவது? ஸ்வராஜ்யம் வந்தாலும் இவ்வநியாயங்கள் நடக்காதா? ஸ்வராஜ்யம் வந்தால் நம் தேசத்திலிருந்து நம் கண்காண கொள்ளையடிக்கப்படும். பொருள் இங்கேயே யிருக்குமென்பதில் ஐயமில்லை. ஸ்வராஜ்பத்திற்கு சண்டை போட வேண்டியதுதான் ஆனால் இந்த சண்டைக்கும் அந்த சண்டைக்கும் சற்று வித்தியாசமுண்டு. ஐயாயிரம் மைலுக்கப்பாலிருந்து நம்மைத்துன்புறுத்தும் வெள்ளையரோடு சண்டை பிடிப்பதில் ஒரு ஜாப்பு இருக்கிறது. நம் அண்டைவீட்டுபணக்காரனும் எதிர் வீட்டு புரோகனும் கரகோஷம் செய்து கண்ணும் கண்ணீருமாக நின்று ஜயிலுக்குஅனுப்ப தயாராயிருக்கின்றனர். நம்மை ஜயிலுக்குகூட்டிப்போகும் போலீஸ்காரன் கூட ஒருவரும் பார்க்காமலிருக்கும் பொழுது, சாண் வயிற்றுக்காகதான் தடியால் அடிக்கவேண்ண்டியிருப்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க,

## தமிழ் அன்பர் மகாநாட்டின்
# அலங்கோலம்.

தமிழன்பர்கள் மகாநாட்டு நடவடிக்கைகளைப்பற்றி 27-12-33-ந்தேதி வெளிவந்த "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகை தனது தலையங்கத்திலே பின் வருமாறு எழுதுகிறது:—

மகா நாட்டில் கலந்துகொண்டு உழைக்கப் பெரும்பான்மையான தமிழ் மக்களைச் சேர்க்காது அலக்ஷியம் செய்துவிட்டது பெரிதும் வருந்தத்தக்க விஷயமாகும். ஒரு குறிப்பிட்ட வகுப்புக்கே அதிகச் சலுகை காட்டி மற்றத் தமிழ்ப்போறிஞர்களையும் பெரியார்களையும் இவர்கள் புறக்கணித்து விட்டது மிகுந்த ஐயத்திற்கு இடமுண்டாகிவிட்டது. எனவே, பலர் இம் மகாநாட்டு முயற்சியை ஒரு சூழ்ச்சியாகக் கருத நேரிட்டது. இம் மகாநாடு சாதாரணத் தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்காகக் கூட்டப்பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். பிரதிநிதித்துவம் அதற்கேற்றபடி யன்றோ இருந்திருக்க வேண்டும்? எனவே நாட்டில் பெரும்பான்மையோராகவுள்ள தொழிலாளர் தோழர்களும் தீவிர சமூக விடுதலை வாதிகளும் அம் மகாட்டில் கலந்துகொள்ள மிகுந்த ஆர்வங் காட்டியது இயற்கையேயாகும். உண்மையை உணர்ந்த மகாநாட்டு நிர்வாகிகள், கடைசி நிமிஷத்திலேனும் அவர்களோடு ஒத்துழைப்பதாக ஒப்புக்கொண்டது ஒரு வகையில் பாராட்டத்தக்கதே. தொழிலாளர் தோழர்களும், தீவிர சமூக விடுதலை வாதிகளும் தங்கட்கு இம் மாகாட்டு நடவடிக்கைகளில் அதிகப்பங்கு இல்லாவிட்டாலும் சம பங்கேனும் கொடுக்கப்பட வேண்டும் என்று வாதித்தனர். அவர்கள் விரும்பியவாறே சம உரிமை பெற்றுக்கொண்டனர். இவர்கள் கலந்துகொண்டதினலேயே மகாநாட்டு நடவடிக்கைகளும் தீர்மானங்களும் உயிருடன் விளங்கின என்னும் உண்மையை மகாநாட்டுத் தலைவரே பாராட்டிருக்கிறார். கடைசி நிமிஷத்தில் இந்த மகாநாட்டில் கலந்துகொண்ட தோழர்களைப் பற்றி நாட்டில் ஒரு சிலர் தப்பெண்ணம் கொண்டிருப்பதை நாம் அறிவோம். இவர்கள் படிப்பற்றவர்கள் என்றும், கலகக்காரர்கள் என்றும், மரியாதையற்றவர்கள் என்றும் ஒரு சில பண்டிதர்களும் மற்றவர்களும் திரிபாக எண்ணிக்கொண்டிருந்தனர். இந்தத் தமிழன்பர் மகாநாட்டில் அவர்கள் பேசிய அறிவுரைகளையும், விரிவுரைகளையும் அவர்கள் காட்டிய ஒழுங்கு முறையையும், கட்டுப்பாட்டையும் கண்டவர்கள் அவர்களைப் பற்றிய தங்கள் தப்பெண்ணங்களை மாற்றிக்கொண்டிருப்பார்கள் என்றே நம்புகின்றோம் மிகுந்த அழகாகவும், பொறுப்பாகவும் இந்த வாலிப நண்பர்கள் நடந்துகொண்டார்கள்.

இம் மகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை அமலுக்குக் கொண்டுவரத் "தமிழன்பர் சங்கம் ஒன்று ஸ்தாபிப்பதாக ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய விதிகளும் தயாரிக்கப்பட்டிருந்தன. முதல் நாள் விஷயாலோசனைக் கமிட்டியிலும் இந்தச்சங்க ஸ்தாபன விஷயம் ஒப்புக்கொள்ளப்பட்டுப் பகிரங்க மகாநாட்டிற்கு வருவதாக இருந்தது. மறுநாள் அந்த விஷயம் எக்காரணத்தாலோ நழுவ விடப்பட்டது. இது வாலிபத்தமிழ்த்தோழர்கட்கு மிகுந்த ஆத்திரத்தைக்கிளப்பியது என்பதில் சந்தேகம் இல்லை. எனினும் அவர்கள் கடைசிவரை பொறுமை காட்டினர். மகாநாட்டு முடிவில் வந்தனோபசாரம் கூறும்போது விஷயாலோசனைக் கமிட்டியில் ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழன்பர் சங்கஸ்தாபன விஷயம் நழுவ விடப்பட்டது ஒரு பெருங்குறை என்றும், இது பெரும் சந்தேகத்திற்கு இடடுக்கிறதென்றும், இம்மாதிரி இதை நழுவவிடவேண்டிய அவசியமே இல்லை என்றும், இவ்விஷயத்தில் மற்றத் தமிழர்கட்கு இடங்கொடுக்கக் கூடாது என்று நிர்வாகிகள் கருதிவிட்டது தவறு என்றும் முறையீடு செய்யப்பட்டது. இதற்கு நிர்வாகிகள் சார்பில் ஏதோ சாக்குப் போக்குகள் சொல்லப்பட்டாலும் முக்கியமான சங்கஸ்தாபன விஷயம் நழுவவிடப்பட்டது மகாநாட்டின் நோக்கத்தையே சத்தற்றதாக்கி விட்டது என்பதில் ஐயம் இல்லை. இனிமேல் தனியாக இம் மகாநாட்டின் பேரால் ஒரு சிலர் சேர்ந்து கொண்டு சங்கம் ஸ்தாபித்தால் அது தகுந்த பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்காது என்பதே நமது அபிப்பிராயமாகும். தனியாக மற்றவர்களும் சங்கம் நிறுவிக்கொள்ளலாம் என்று மகாநாட்டுத் தலைவர் குறிப்பிட்டார். அது வேறு விஷயம் இந்த மகாநாட்டின் பேரால் ரகஸியமாகவோ, யாரோ சிலரைச் சேர்த்துக்கொண்டதாகக் காட்டியோ "தமிழன்பர் சங்கம், ஏற்படுத்தப்பட்டால் வாலிபத் தோழர்கள் கொண்ட ஐயம் உறுதியாகிவிடும் என்றே அஞ்சுகின்றோம். கல்வி யறிவு வாய்ந்த மகாநாட்டு நிர்வாகிகள் மற்றத் தமிழர்களையும் தழுவுவதின் மூலம் சரியான வழியைப் பின்பற்ற வேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம்.

மகாநாட்டு முடிவில் தோழர் அலர்மேல்மங்கைத்தாயார் அம்மையார் எம். எல். ஸி, அவர்கள் பெண்கள் சார்பாக குறிப்பிட்ட சில குறைகளும் முக்கியமாகக் கவனிக்கத்தக்கவை. தமிழ்நாட்டில் எத்தனையோ தமிழறிவுள்ள பெண்மணிகளும், பொதுநலத் தொண்டாற்றும் பெண்மணிகளும் இருக்கிறார்கள் என்றும், இவர்கள் எல்லோரையும் மகாநாட்டு நிர்வாகிகள் சேர்க்காமல் அலக்ஷியம் செய்துவிட்டார்கள் என்றும், முப்பதாண்டுகளாகத்தாம் தமிழ்த்தொண்டும், சமூகத் தொண்டு ஆற்றி வருவதாகவும், தாம் தோழர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களிடம் நேரில் இரண்டு தடவை சென்று தெரிவித்துக்கொண்டும் தம்மைஅலக்ஷியம் செய்துவிட்டதாகவும், இது பெண்ணுலகையே அலக்ஷியம் செய்ததாகும் என்றும் தெரிவித்துக் கொண்டார்கள். உண்மையில் தகுந்த தமிழறியுள்ள பெண்மணிகட்குப் பிரதிநிதித்துவம் வழங்காதது பெருங்குறை என்பதில் சந்தேகம் இல்லை. இத்துடன் இன்னொரு குறிப்பிடத்தக்க விஷயத்தையும் நாம் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் இப்பொழுது இந்தியாவெங்கும் பேசப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களில் ஸ்வாமி ஸகஜானந்தம் போன்ற எத்தனையோ தமிழறிஞர்களும் புலவர்களும் இருக்கின்றார்கள். இவர்கட்குத் தமிழன்பர் மகாநாட்டில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. இது பெரிதும் வருந்தத்தக்க செய்தி என்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமா?

# இயக்கங்களின் இயல்பு

(உடுமலை தோழர் கனகராஜன்.)

பொதுவாக மக்கள் ஒரு இயக்கம் என்பதிலுள்ள தத்துவம் என்னவென்பதாவது, அதனுடைய பொருள் என்னவென்பதையும் அறியாமலிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். மற்றபடி காங்கிரஸ் இயக்கமானது, மக்கள் இயக்கத்தின் அடிப்படையான விஷயத்தை உணர முடியாமல் நுனிப்புல் மேய்வது போல இயக்கத்தின் ஆர்வத்தை ஜே கோஷத்தில் முடித்துவிட்டது. பொதுஜன அபிப்பிராயத்தில் இயக்கம் என்றால் நான்குவாயாடிகள் பேசுவதும்கைகொட்டுவதும் என்ற அளவிலிருக்கிறது. மக்கள் ஒரு இயக்கத்தின் இயற்கையான அம்சத்தை அறிய வேண்டியும், எதிர்ப்புகள் அதை அசைக்க முடியாது என்ற உண்மையை உணரட்டும் என்ற நோக்கத்துடனும் யாவரும் எளிதில் அறியும் வண்ணம் சாதாரண உதாரணங்களோடு இக்கட்டுரை எழுதத் தீர்மானித்தேன்.

ஒரு இயக்கம் தோன்றுவதற்கு தேவை ஒன்று வேண்டும். எவ்வாறுஒரு தேவையை முன்னிட்டு எவ்விதமாக ஒரு இயக்கம் தோன்றி, எப்படி மறைகிறது என்பதை விளக்குவோம்.

உதாரணமாக, உஷ்ணமாகவும், காற்றில்லாமல் வியர்வை அதிகம் உண்டாகிக்கொண்டும், கொடுமையான வெயிலடித்துக் கொண்டு மிருந்தால், பொதுவாக எல்லோரும் "இன்றைக்கு மழை கண்டிப்பாய் வரும்" என்று சொல்லுவதுபோல மழையும் பெய்கிறது. இப்பொழுது சொன்ன கொடுமையான வெய்யிலை ஜன சமூகத்திலுள்ள ஒரு கொடுமையென்று வைத்துக்கொள்ளுவோம். பின் என்ன ஏற்படுகிறது. வெய்யில் அதிகமாயிருந்து மெதுவாகக் காற்று அடித்து பெருங்காற்றுடன் மேகங்கள் கூடுகிறது. இதற்கு ஒப்பாக கொடுமை சகியாத மக்களிடையே கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டு பின் வானத்தில் மேகங்கள் கூடுவது போல கூட்டங்கூட்டமாக மக்கள் கூடுகிறார்கள். பிறகு மேகங்கள் இடி முழக்கம் செய்வது போல் ஜனங்கள் தங்களுடைய கஷ்டங்களைப் பற்றி ஆத்திரத்துடன் ஆரவாரம் செய்யத்துடங்கிறார்கள். பின்னர் மின்னல்கள் தோன்றுவதைப்போல் பல சச்சரவுகள் ஏற்பட்டு கடைசியில் மக்களினுடைய கொடுமை தணிவதற்கு மார்க்கம் ஏற்படுவதற்கொப்ப, மழை பெய்து அவ்வெப்பத்தைத்தணிக்கிறது. அவ்வெப்பம் தணியும் வரை காற்று, இடி, மின்னல், மழை ஏற்படுவது போல, மக்களுக்கு ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் தீரும் வரை இயக்கமும் பல உருவாக இருந்துதான் தீரும்.

இரண்டாவதாக, ஒரு இயக்கம் என்பதை உணர்ச்சி வெள்ளம் என்று சொல்லலாம். அதாவது ஒவ்வொரு தனிதனி மனிதனின் உணர்ச்சியானது ஒவ்வொரு நீர்த்துளியாகவும் இப்படிப் பல மக்களின் உணர்ச்சிகள் யாவும் ஒருங்கே சேர்ந்து பல துளி பெருவெள்ளம் என்பது போல காட்டு வெள்ளமென கரைபுரண்டோடும் மனிதன் உணர்ச்சியே ஒரு இயக்கமெனப்படும். இவ்வுணர்ச்சி வெள்ளத்தை யாராலும் தடுக்கவியலாது என்பது உலக அனுபவம். அநேகவிடங்களில் அறியாமையால் இவ்வெள்ளத்தை தடுக்க அணைகள் போட்டுப் பார்த்துவிட்டார்கள். வெள்ளமானது அணையை உடைத்துக்கொண்டோ அல்லது அணையை மீறி அதன் மீது வழிந்துகொண்டோ போய்விடுகிறது. என்பதை யாவரும் அறிவார்கள். ஆகையால் ஒரு உண்மையான, இயற்கையாக ஏற்பட்ட தேவையை நோக்கி இயங்கும் இயக்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க,

# சென்னை மாகாண நாஸ்திகர் மகாநாடு.

## தலைவர் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமைப்பேருரை.

31—12—33ந் தேதி சென்னையில் நடைபெறும்நாஸ்திகர் மகாநாட்டுத் தலைவர் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை உரை வருமாறு:—

### Introduction—பாயிரம்.

தோழர்களே! இன்று நாம் கூடி இருக்கும் நாஸ்திகர் மகாநாடு நமது நாட்டில் முதன்மை என்று கருதுகிறேன். இந்தியா தேச முழுமைக்கும், இந்த மகாநாடு முதல் மகாநாடென்று சொல்லலாம். இந்த மகாநாட்டால் நமது இந்திய தேசத்திற்கு நன்மை உண்டாகுமேயல்லாமல் கெடுதி யாதொன்றும் விளையாது. இந்தத்தீர்மானத்தைத் துணிவாக எடுத்துக் கூறலாம். ஆனல் அறியாதார் சிறுபிள்ளைத்தனமாக இம்மகாநாட்டை பரிகாசம் செய்வார்கள். மதஸ்தர்கள் துவேஷங்கொள்ளுவார்கள். அதிகாரிகள் அடக்குமுறையைக் கையாளலாம். ஆனல் எந்த நல் இயக்கம் முதலில் பரிகசிக்கப்படவில்லை? ஏளனம் செய்யப்படவில்லை? அடக்கப்படவில்லை?

மூட உலகம், நன்மை பயக்கும் இயக்கங்களை முதலில் பழித்தே வந்திருக்கின்றது. பழிப்பதோடு நிற்காமல் இம்சித்தும் வந்திருக்கிறது. விஷய ஞானத்தையே (Knowledge of things) தடுத்து வந்திருக்கின்றது. நாஸ்திக போதகரான இங்கர்ஸாலை (Ingersoll) அமெரிக்கநாடு முழுமையும் பழித்தது. இன்று அவர் நூறும் ஆண்டு பெருநாளைக் கொண்டாடுகின்றது! ஐம்பது வருஷத்திற்கு முந்தி ஆங்கில நாஸ்திகரான ப்ராட்லாவை (Braudlaugh) ஆங்கில நாடு சிறையிலிட்டது. இன்று அவருடை ஜூபிலியை (Jubilee) கொண்டாடுகின்றது! இன்று நாஸ்திகர்களாகியவர்கள் பழிக்கப்படுவார்; இம்சிக்கப்படுவார், ஆனல் இந்த மகாநாட்டைப் போன்ற அரிய பெரிய நாஸ்திக மகாநாடுகள் தேச முழுமையுமே நாஸ்திகத்தைப் பரவச் செய்யும். காலப்போக்கில், இந்த மகாநாட்டை உண்டாக்கியவர்களை உலகம் மறந்துவிடும். ஆனல் அவர்கள் நாஸ்திக விஷயமாகக்கொண்ட Ideas, எண்ணங்கள் மக்களை மூடநம்பிக்கைகளிலிருந்து விடுவித்து சுகப்படுத்துமென்பதற்குத் தடை இல்லை.

### நாஸ்திக வரலாறு.

உலகில் நாஸ்திகம் ஓர் பழமையான சித்தாந்தம் (Doctrine) ஆஸ்திகம் உண்டான போதே நாஸ்திகமும் உண்டாயது. "கடவுள்" உண்டென்ற சொல் கிளம்பியதும், கடவுள் இல்லையென்ற சொல்லும் கிளம்பியது. ஆதி மனிதன் பேசுவதற்கு முந்தி ஆஸ்திகமென்பதே அறியான். பேசத் தெரிந்த பிறகே, "கடவுள்" "தெய்வம்", "பேய்", "பிசாசு", "உயிர்", "ஜீவன்", "ஆத்மா" என்ற சொற்களை உச்சரிக்க ஆரம்பித்தான். ஆதியிலிருந்தே இந்த சொற்களை மறுத்தவர்கள் உலகில் இருந்திருக்கிறார்கள். காட்டுமிராண்டிகளில் சிலர் "கடவுள்" என்ற சொல்லே தங்களுக்குத் தெரியாதென்று தெரிவித்திருக்கிறார்கள்! சில பாதிரிமார்கள் அன்னோரை கடவுளைப்பற்றிக் கேட்ட போது அந்தச்சொல்லே தங்கள்பாஷையில் இல்லை என்றார்களாம்! இவர்களை ஆதிநாஸ்திகர்கள் (Primitive Atheists) என்று எண்ணலாம்.

மதஸ்தர்களே எதிர் மதஸ்தர்களை நாஸ்திகர் என்று கூறுகின்றார்கள். சரித்திர காலத்தில் தோன்றிய சில மதங்கள், மற்றுஞ் சில ஏனைய மதங்களுக்கு நாஸ்திகமாகவே கருதப்படுகின்றது. சாங்கியர்களை (இதுவோர் தர்சனம் Philosophy). நிரீஸ்வரவாதிகளென்று, அதாவது நாஸ்திகர்களென்றே வழங்குகின்றார்கள். புத்தர்களையும் நாஸ்திகர் என்று சமையவாதிகள் கூறுகின்றார்கள். ஓர் மதஸ்தன் ஏனைய மதஸ்தனை நம்பாதவன் (Heretic or Unbeliever) அதாவது நாஸ்திகனென்றே கருதுகின்றான். ஆதலின் நாஸ்திகன் என்ற பெயர் கண்ணியமான (Respectable) பெயர் என்பதற்கு என்ன ஆட்சேபனை? ஒரு மதஸ்தனே இன்னொரு மதஸ்தனை நாஸ்திகன் என்ற போது "கடவுள்" இருப்பதை நம்பாதவனை நாஸ்திகன் என்றால் என்னகுறைவு?

### நாஸ்திகமென்றால் என்ன?

சாதாரணமாக "நாஸ்தி" என்றால் இல்லை என்று பொருள். "நாஸ்தி" என்பது வடமொழி. நாஸ்திகன் என்றால் இல்லை என்பவனைக் குறிக்கும். ஆனல் பழக்கத்தில் கடவுளை இல்லை என்பானை நாஸ்திகன் என்று அழைக்கின்றார்கள். இவனை (Atheist) என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். கடவுள் உண்டென்பானை ஆஸ்திகன் (Theist) என்று வழங்கப்படுகின்றன. ஆனல் வைதீகர்கள் (The Orthodox) தங்கள் மதத்தை நம்பாத மதஸ்தர்களை நாஸ்திகர் என்று சொல்லுகின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாஸ்திகன் என்றால் (Heretic) அதாவது நம்பாதவனென்று பொருள். ஆதலின் ஒரு மதக் கடவுளை நம்பாத மதஸ்தனுயினும், எந்த மதத்தையும் நம்பாத நாஸ்திகனுயினும் ஒருவருக்கொருவர் நாஸ்திகனே. சைவன், விஷ்ணுவை நம்புவதில்லை. வைணவன் சிவனை நம்புவதில்லை. இவர்களில் ஒருவருக்கொருவர் நாஸ்திகனே. இவ்விருவர் கூறும் சிவனையும், விஷ்ணுவையும் சேர்த்து இரண்டையும் நம்பாதவனும் நாஸ்திகனே. எனவே ஞாயமுறையில் நாஸ்திகன் என்ற பதத்தில் யாதொரு இழிவுமில்லை. ஆனல் மதஸ்தர்கள் தங்கள் மூட வைராக்கியத்தாலும் (Bigotry) மூட துவேஷத்தாலும் (Hatred) நாஸ்திகர்களை இகழ்ந்தும், இம்சித்தும் வந்திருக்கின்றனர்.

### ஆஸ்திக வரலாறு.

"கடவுள்" என்ற சொல் ஓர் புராதனச் சொல். இந்தச் சொல்லுக்குரிய பொருளை யாரும் கண்டிலர். இந்த சொல்லால் குறிக்கப்படும் பொருளை மெய், வாய், கண், மூக்கு, செவிகள் மூலமாகவாவது அல்லது எந்தவிதக் கருவிகளாலாவது பரீட்சித்து அறிந்தார் உலகில் யாருமில்லை. மதப் புத்தகங்களில் கடவுள் நெருப்புவடிவமாகப் புதரில் தோன்றினர். மான்மழுவேந்திஜடைமுடியுடன் தோன்றினர். ரிஷப வாகனருடராய் தோன்றினர். காற்று வடிவமாகத் தோன்றினர். ஜலமயமாகத் தோன்றினர் என்று எழுதப்பட்ட கதைகளுண்டு. இதனைச் சிறுவர்களும் நம்பார். ஆனல் இந்தக் "கடவுள்" என்ற சொல்லுக்குண்டாகிய மதிப்பும், மரியாதையும், பெருமையும், பயமும் இவ்வுலகில் எந்த மனிதனும் அடைந்ததில்லை, எண்ணத் தொலையாத வேதபுராணங்களும், வியாக்கியானங்களும், கோவில்களும், சொத்துசம்பத்துகளும் இந்த வொருசொல்லுக்கு ஏற்பட்டுள, கோடானகோடி மக்கள் பிரதிதினம் இச் சொல்லை உச்சரிக்கின்றார்கள். இச் சொல்லுக்குத் தாழ் பணிந்து, தண்டனிட்டு, வாழ்த்தி வணங்குகின்றார்கள். இச் சொல்லால் தாங்கள் செய்யும் பாவங்கள் மன்னிக்கப்படுமென்றும், புண்ணியங்கள் நற்பலனைத் தருமென்றும் கருதுகின்றார்கள். இச் சொல்லுக்குப் போடாத சண்டையில்லை. இம்சிக்கப்படாத மனிதனில்லை. கொல்லப்படாத உயிரில்லை. ஆனல் இந்த சொல்லுக்குரிய பொருள் இன்னதென்று ஒருவருக்கும் தெரியாது. இது எவ்விதமான பொருளென்றும் தெரிந்துசொல்வார் உலகில் யாருமில்லை. அப்படி இருப்பார், இப்படி இருக்கமாட்டார் என்று பிதற்றுகின்றார்களேயொழிய அதனை உண்மையாகத் தெரிந்துரைப்பார் இவ்வுலகில் யாருமில்லை. மதஸ்தர்களும், தத்துவஞானிகளும் இருட்டறையில் இல்லாத கருப்புப் பூனையை இரண்டு குருடர்கள் தேடுவதைப் போல் இச் சொல்லைக் குறித்த வேதாந்தம் பேசுகின்றார்களேயொழிய இந்தச் சொல்லை மனிதன் சொல்ல ஆரம்பித்த முதல் யாரும் தெரிந்துகொண்டபாடில்லை. இந்த அறியாமையால்தான் "கடவுள்" என்றால் மறைபொருள் என்று அர்த்தமிட்டார்போலும்! ஆனல் உலகில் பெரும்பான்மை மக்கள் இச் சொல்லுக்குரிய பொருள் வேறு உண்டென்று நம்பிவருகின்றார்கள். இந்த நம்பிக்கைக்குத்தான் ஆஸ்திகம் என்று பெயர். இந்த நம்பிக்கைக்கு ஆதாரமில்லை என்பதற்கு நாஸ்திகமென்று பெயர். இந்தச் சொல்லின் உற்பவத்தை அறிந்தால் இந்தச் சொல்லுக்கு வெறும் சொல் கற்பனையே யொழிய மற்ற எந்தவித பொருள் ஆதாரமும் கிடையாதென விளங்கும்.

### "கடவுள்" உற்பவம்.

ஒருகாலத்தில் மனிதன் பல்லாயிர வருஷங்களாகப் பேசத் தெரியாதவனுக இருந்தான். அந்தக் காலத்தில் "கடவுள்" என்ற சொல் உலகில் வழங்காதிருந்தது. அதனை யாரும் பேசுவாரில்லை. யாரும் சொல்வாரில்லை. இது பத்துலட்சம் வருஷங்களுக்கு முந்தியிருக்கலாம். ஆனல் உலகில் உயிர் முளைத்து நூறுகோடி வருஷமிருக்கும். இந்தக் காலங்களில் வாழ்ந்து மடிந்த உயிர்கள் கோடிகோடி, கோடானகோடி. இவ்வுயிர்கள் இந்தச் சொல்லை சொல்லத் தெரியா. இந்த கற்பகாலங்களாக எந்த உயிரும் இச் சொல்லை சொல்லவுமில்லை. எந்த உயிரும், கேட்டதுமில்லை, மனிதன் மிருகத்திலிருந்து மாறிவந்த பிறகே, பேசஆரம்பித்தான், இவன் பேசின பிறகும், வெகுகாலம் இச் சொல்லைஉச்சரியாதிருந்தான். மனித பாஷை அபிவிருத்தி அடைந்த பிறகே "கடவுள்" என்ற சொல்லை, கற்பிக்கத்தொடங்கினன். இதன்

விபரத்தை பூர்வமனித நூலாசிரியர் பிரேசர் (Frazer) இயற்றிய The Golden Bough என்ற நூலில் காணலாம். எனவே கடவுள் என்றசொல் மனிதன் உலகில் தோன்றியபிறகேஉற்பத்தியாயிற்று. எது போலெனில் "ஐந்து கண்ணன்" "பத்துத்தலை ராவணன்" "ஆயிரந் தலைப்பாம்பு" "ஆப்ரகடாப்ரா" (Abrakadabra) "காடலெப்ரா" (Kadalabra) என்ற சொற்கள் போலென அறிக. ஆனால், இன்றைக்கும் இந்த கொள்கைகளுக்குறிய பொருள்களை யாரும் காணவிடினும் இந்த சொற்களைக்கேட்டு நடுங்கும் குழந்தைகள் பலகோடி! அழும் குழந்தைகள் பலகோடி! கும்பிடும் குழந்தைகள் பலகோடி! இந்தச்சொற்களைப்போலவே "கடவுள்" என்றசொல்லும் பலகோடிமக்களை அழச்செய்கின்றது! தொழச்செய்கிறது! நடுங்கச் செய்கின்றது! இந்தக்கற்பனைச் சொல்லின் மகத்துவமே, மகத்துவம்!! இந்த மகத்துவத்தின் ஆதாரமென்ன? இதனைக்கண்டறிவாம்.

### கற்பனைச்சொல்லுக்கு வந்த மகத்துவம்.

ஆதியில் மிருகத்தினின்று பெறப்பட்ட மனிதன், மிருகங்களைப்போலவே இயற்கை சமபவங்களைக்கண்டு பயந்துவந்தான். இருளைக் கண்டு பயந்தான், இடிகளைகண்டு பயந்தான், பெரும் மழையைக்கண்டு பயந்தான், பெரும் புயலைக்கண்டு பயந்தான். பேசத்தலைப்படவும் இந்த பயங்களை சைகையாலும் சொற்களாலும் ஒருவனுக்கொருவன் தெரிவித்துக் கொண்டான். இத்தியாதி பயந்தரும் இயற்கை சம்பவங்களுக்கு தன்னைப்போல் பதின்மடங்கு பெரிதான கர்த்தா இருக்கவேண்டுமென்று கற்பித்துக்கொண்டான். அந்த கற்பனைக் கர்த்தாக்களுக்கு பெயரிட்டு தெய்வங்களென்றும் கடவுளர் என்றும், பேய் பூதங்களென்றும், ஐந்து கண்ணனென்றும். சிவன், விஷ்ணு, பிரமனென்றும் அதற்குமேல் சர்வசக்தனென்றும், சர்வவியாபி என்றும், சத்து சித்து ஆனந்தமென்றும் பாஷை பெருகப் பெருக பலவேறு கற்பனை சொற்களை அதிகப்படுத்திக்கொண்டு சென்றான். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையைப்போல் இன்னும் இந்த சொற்களை அனந்த கோடிமக்கள்,கற்றோரும் கல்லாதோரும் பரம்பரை பழக்கத்தால், சொல்லிக்கொண்டு வருகின்றார்கள்.

இவ்விதமாக தன்னால் கற்பிக்கப்பட்ட சொற்களுக்கு தான் வாழும் வீடுகளைப்போல், கோயில்களையும், மண்டபங்களையும் அமைத்தான். தனக்கும் பெரியவனுடைய கோபத்தை தணிக்கவாவது, அருளைப்பெறுவதற்காவது தான் வணங்கி நடப்பதைபோல் இக்கற்பனை சொற்களுக்கு, தூப தீப நிவேதனங்கள் ஆடல், பாடல், சங்கீதம், மேள தாளவேடிக்கையும் அமைத்தான், இவ்விதமாக "கடவுளென்ற" பதமும் கூட கோபுரங்களும் கிரியை சரியைகளும் ஆடையாபாரணங்களும் உண்டாயின.

### மத குருமார் வருகை.

அந்த காலங்களில் வேட்டையாடி பிழைக்கவும், உழுது பயிரிட்டு வாழவும் மனமில்லாத சில சோம்பேரிகள், இந்த கற்பனைச்சொற்களுக்கு விக்கிரகங்களென்றும் சிலுவை (Cross) என்றும் பிறை (Crescent) என்றும் கற்பனை உருவங்களை உண்டாக்கி அவைகளுக்கு வேதங்களென்றும், புராணங்களென்றும், பைபிளென்றும், கொரான் என்றும் கற்பித நூல்களை உண்டாக்கி இன்னும் பயத்தை அதிகரிக்க நரகமென்றும், மோக்ஷமென்றும் கற்பித்து அத்துடன் நிற்காமல் மறு ஜனனமென்றும், உயிர்த்தெழுதலென்றும் கட்டுக் கதைகளைக் கட்டி அதனால் கற்பிக்கப்பட்ட பயத்தைப் போக விதிவிலக்குகளையும், மந்திர தந்திரங்களையும், பூசை சடங்குகளையும் சேர்த்துப் பாமரமக்களை மூடப் பழக்க வழக்கங்களில் ஆழ்த்தி, அதனால் தங்கள் ஜீவனத்தையும் நடத்திக்கொள்ள ஏற்பட்டனர். இவ்விதமாகத்தான் உலகில் இருக்கும் பாதிரிகளும், பார்ப்பனரும், மௌலானாக்களும் மந்திரிதந்திர குருக்களும் தோன்றினரென அறிக. (Around this Single fiction of a word God, arose the whole of the world's religion and phylosophical systems with their stupendous worship, rituals and prayers) இந்தவொரு கற்பனைச் சொல்லாகிய "கடவுள்" என்ற வார்த்தையின்மேல்தான் எழுந்தன. எல்லா உலக மதங்களும், தத்துவங்களும், சரியை கிரியைகளும், பக்தியும்முத்தியுமென அறிக. (Has there been a greater illusion anywhere else than this?) இதனைவிட மாபெரும் மாய்கை வேறெங்குளது?

### இந்தச்சொல்லால் உலகு அடைந்த கதி என்ன?

மனிதன் உலகில் தோன்றிய முதல் நாளதுவரை நடந்த போர்கள் இந்தச் சொல்லால் நின்றனவா? உலகில் நடந்த பெரும்பான்மை போர்கள் யாவும் "கடவுள்" பெயரால் புரியப்பட்டன. கொலை, களவுகள், காமம் முதலிய பஞ்சமாபாதகங்கள் குறைந்தனவா? கடவுளுக்கு கள்ளரும், கொலையாளிகளும், தங்கள் கொலைக்கும், களவுக்கும் "கடவுள்" அருளை நாடுகின்றார்கள். இந்த சொல்லுக்காக இட்ட பலிகள் எத்தனை? வியர்த்தங்கள் எத்தனை? மோசநாசவேஷமெத்தனை? சில கடவுளரே, மோசம் செய்ததாகவும் அக்கிரமங்களைச் செய்ததாகவும் புராணங்கள் ஏற்பட்டுள இத்தியாதி அகோர காரியங்களைப் பதிவு செய்துள்ள புராணங்களெத்தனை? இவைகளெல்லாம் ஈனச் சுருதிகளென்றால் ஏன் இவைகளை கொளுத்திப் சாம்பலாக்கலாகாது.

### உலக துயரத்திற்கு யார் ஜவாப்தாரி?

உலகில் உயிர்கள் படுந் துயரத்திற்கு யார் ஜவாப்தாரி? பசுவை புலி பிடித்துத் தின்னவும், தேரையை பாம்பு பிடித்துத் தின்னவும், இவைகளை மனிதன் பிடித்துத்திண்ணவும் யார் கட்டளையிட்டனர்? இந்தக்கொரேக் காட்சியைவிடவா வேறுஉளது? நோய், வறுமை, பஞ்சம் புயல், வெள்ளம் முதலிய இயற்கைச் சம்பவங்களால் மாந்தருக்கு எவ்வளவு இம்சை? இந்த இம்சைக்கு யார் காரணம்? பேய்கணங்கள் [Devils] இவைகளுக்குக் காரணமென்பாங் சிலர். ஆனால் பேய்கணங்களை யார் சிருஷ்டித்தது? பசுவை சிருஷ்டித்தபோது புலியையும் சிருஷ்டித்தது போல் மனிதனைச் சிருஷ்டித்தபோது பேயையும் சிருஷ்டித்தார் போலும்? உலகில் துன்பம் தோன்றிய காரணம் தெரியாதென்பார் சிலர். ஆனால் சுகம் தோன்றியது யாரால் என்று வினா எழுமன்றோ?

கடவுளை தயாபரன், சர்வரக்ஷகன், ஆபத்பாந்தவன், அன்பன், என்ற மாத்திரத்தில், இந்தக்கொடுமைகளை மறக்க முடியுமா? 60,000 சமணர்களைக் கழுவில் ஏற்றினது கடவுள் பெயரால் அன்றோ? கோடான கோடி பிசாசு பிடித்தவர்களென்று பெண் மக்களை அடித்துக் கொன்றது "கடவுள்" பெயரால் அன்றோ? கிறிஸ்தவரும், மகமதியரும் கோடி கோடியாக 500 வருஷ காலம் Crusades என்ற கொடும் போரில் மாண்டது "சாமி" பெயரால் அன்றோ? "சாமி" பெயரால் எத்தனை கோயில்கள் கட்டிடங்கள் இடிந்தன? எத்தனை நாடுகள், நகரங்கள் நாசமாயின? அவரவர்கள் 'சாமி' க்காக இன்றைக்கும் நமது நாட்டில் எத்தனை தலைகள் உருளுகின்றன? "Religious Persecutions" என்ற சிறு புத்தகத்தை வாசியுங்கள். அதனைப்படித்து அழாத குழந்தைகள் உண்டா? ஆண் உண்டா? பெண் உண்டா? Massacre of St. Barthalomew என்ற கொடுமையால் "கடவுள்" பெயரால் கொல்லப்பட்ட குழந்தைகளையும், ஆண் மக்களையும், பெண் மக்களையும் சிந்திக்க, சிந்திக்க, இந்தப் பாத நிகழ்ச்சிகளுக்கா, இக்கொடும் பாதக கடவுளென்ற கற்பனைச் சொல் தோன்றியது என்று கேட்கவேண்டி வருகிறது? இந்த ஒரு சொல்லால், உலகில் விளைந்த தீமைகளுக்கு கணக்கே இல்லை. இந்த ஒரு சொல்லால் மனித பூண்டே தற்கொலை புரிந்து கொள்ளும் போலும்!

வேறு எந்த நன்மையாகிலும் கடவுளால் விளைந்ததா? ஒரு "நன்மை" தான் கண்காட்சியாகப் பார்க்கின்றோம். அதாவது மக்களில் சிலரே கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு உலக சுகபோகங்களை அனுபவிக்கின்றார்கள். இன்னுஞ் சிலர் கடவுள் பெயரால பெரும்பான்மை மக்களை மூட பக்தியில் ஆழ்ந்து கிடக்கச் செய்து அதனால் ஜீவித்து வருகின்றார்கள். இச்சிறுபான்மையோரைத் தவிர மற்ற பெரும்பான்மை போரில் யார் இன்புற்று சுகித்து வாழ்கின்றனர்?

இந்த குற்றச் சாட்டுக்கு பக்தர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? கடவுள் என்ற பயம் இல்லாவிடில் கொலை, களவு முதலிய சமூகத் தீமைகள் அதிகரிக்குமாம்! ஒன்று. உலகில் தான தருமம் இல்லாமற் போகுமாம்! இரண்டு. உலகில் அழகு (Beauty) கோரிக்கை (Hope) மதிப்பு (Value) நன்மை (Goodness) இல்லாமற் போகுமாம்! மூன்று; மக்களுக்குள் அன்பே (Love) குறைவு படுமாம்! நான்கு. நீதியும் நெறியும் மதிப்பற்றுப் போகுமாம்! ஐந்து. இந்த வாதத்தில் எவ்வளவு உண்மை உண்டென்பதை ஆராய்வோம்.

ஒன்று. உலகில் "கடவுள்" எண்ணம் இல்லாவிடில் கொலை களவு அதிகப்படுமாம்! இந்த சமூக குற்றங்களை (Social crimes) தற்போது யார் மிகுதியாகச் செய்து வருகின்றனர்? ஜெயிலில் (Jails) அடைபட்டுக்கிடக்கின்றவர்களில்மிகுதியும் ஆஸ்திகரா, அல்லது நாஸ்திகரா? மதங்கள் தழைத்தோங்கி இருந்த காலத்தில் கொலையும், களவும் அதிகரித்திருப்பானேன்? சமூக குற்றங்களை அந்தக் காலங்களில் மிகக் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டதேன்? இது நிற்க கண்ணுக்கு அகப்படாத கொலையும், களவும், மோசமும் மிகுதியாக யார் செய்கின்றனர்? கடவுளை வணங்குவோரா? அல்லது கடவுளை நிந்திப்போரா? யாதொரு தொழிலும் புரியாமல், ஏழைத்தொழிலாளரின் கூலியை வஞ்சிப்போர் யார்? போரில் கொலை செய்வோர் யார்? கொள்ளை அடிப்போர் யார்? வர்த்தகத்தில் பொய்யும் மோசமும் அதிகமாகச் செய்வோர் யார்? பெரும்பான்மை கொலையாலும், கொள்ளையாலும் மோசத்தாலும் சேமிக்கப்பட்டசொத்திலிருந்தன்றோ "சாமி" கோவில்களுக்கும் திருவிழாக்களுக்கும், தூப தீப நிவேதனங்களுக்கும், வேதியருக்கும், வேந்தர்களுக்கும் செலவிடப்படுகின்றன? பல கோடி பல்லாயிரம் பேர் உழைப்பை அபகரித்த [Exploited wealth] செல்வததிலிருந்தன்றோ, சோம்பேறி மடங்களும், அன்னச்சத்திரங்களும், சாவடிகளும் கட்டப்படுகின்றன? எந்தவிதத்தில் செல்வம் வந்தாலும் பார்ப்பானுக்கு பலதானமிட்டால் எல்லாப் பாவங்களும் தொலையுமென்ற பித்தலாட்டம் ஆஸ்திகர்களாலன்றோ செய்யப்பட்டு வருகின்றது?

உண்மை எதுவெனில், சமூகப் பழக்க வழக்கங்களே, கொலைகளும், களவுக்கும் மற்ற குற்றங்களுக்கும் காரணம். அதே சமூகக்கட்டுப்பாட்டால், கொலையும், களவும் தடைபடுகின்றனவே யொழிய கடவுளாலு

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மல்ல. கோவில்களாலுமல்ல, பக்தியாலுமல்ல, முக்தியாலுமல்ல. இன்றைய தினமே, சேவகரும் சிப்பந்திகளும், சட்டதிட்டங்களும் ஒரு க்ஷணப்பொழுது விலகி நிற்கட்டும்! நமது சமூகம் காட்டு மிராண்டி தன்மைக்கும் கேவல நிலைமையில் போகுமென்பதற்குத் தடையில்லை. மனிதர் செய்யும் சட்ட திட்டங்களாலும், விதி விலக்குகளாலும், பழக்க வழக்கங்களாலும், சமூகத்தில் கொலை களவு தடைபட்டு வருகின்றனவே ஒழிய கடவுள் பயபக்தியாலுமல்ல. நரக மோட்சத்தாலுமல்ல. "கடவுள்" என்ற சொல் இந்த நிமிஷமே உலக பாஷைகளினின்று நீக்கப்பட்டாலும், உலகம் இன்றைக்கு இருந்தவாறே நாளைக்கும் அதற்கு அப்பாலும் இருக்கும். கடவுள் பக்தி நெறியும் கடவுள் முக்தி நெறியும் கேட்டறியாத மிருக உயிர்கள் தத்தம் இனங்களை கொலை, களவு செய்யாதக் காட்சியே, ஆஸ்திகர் கூறும் மூட வாதத்தை மறுக்கப் போதும்.

தன் இனத்தைக் கொன்று, களவாடும் மிருகங்களைப் பார்த்துமறியோம். கேட்டுமறியோம். ஆனால், கடவுள் பக்தர்களிடமே இச்சமூகக் குற்றங்களைப் பார்க்கின்றோம். கடவுள் ஆணையாலா, நமது ஜன சமூகம் விஷமுண்டு சாகாமல் இருக்கின்றது? அல்லது விஷமுண்டால், சமூகம் அழிந்து போகுமென்ற பயத்தாலா? வாழ்வின் பேரில் வைத்துள்ள ஆசையால், மனித கூட்டம் கொலை களவு அதிகமாகச் செய்யாமல் வாழ்ந்து வருகின்றது. இதுவுமன்றியும், விஷமுண்ட சமூகம் நசித்து விடுவதைப் போல், கொலை களவு, செய்யும் சமூகம், நசித்து விடுமாகையால் சமூகங்கள் நாசமடையாமலிருக்க, கொலை களவு செய்யாமலிருக்கின்றன. கடவுள் ஆணையால் அல்ல.

இரண்டாவது. நரக பயமும், மோட்ச ஆசையும் இல்லாவிடின், உலகில் மனிதர் தான தருமம் செய்யாமற் போவார்களாம். இதற்கு நாஸ்திகர் விடை என்னவெனில் தான தருமமே உலகில் செய்யப்படாது. தான தருமம் மக்களை சோம்பேறிகளாக்கி விடுகிறது. மக்களுடைய சுயமரியாதையையும் கெடுத்து விடுகின்றது. Charity Demoralises both the giver and the taker தருமம் கொடுப்போனையும் வாங்குவோனையும் இழிவு படுத்துகிறது என்றார் ஓர் ஆங்கிலப் பெரியார். "ஏற்பது இகழ்ச்சி" என்றார் நமது பெரியவரும்.

தானத்திற்குக் காரணம் வறுமை. வறுமைக்குக் காரணம் பொருளாதாரக் குறைவு. இந்த பொருளாதாரத்தாழ்வை நீக்காமல் ஏழைத்தொழிலாளரை கொள்ளை கொண்ட செல்வத்தைக் கொண்டு அந்த ஏழைத் தொழிலாளிகளுக்கே தானமிடுவதென்றால் இதனைவிட வஞ்சகம் எங்குளது? தருமம் தலைகாக்கும் என்ற அதர்மச் சொல்லும், குருமார் பிழைக்க வேண்டி கற்பிக்கப்பட்டதென அறிக.

மூன்றாவது. அழகான பொருள்களையும் நல்ல கோரிக்கைகளையும், மதிப்பும், நன்மையும் உலகில் தோன்றாதாம், கடவுள் இல்லாவிடில்! இதற்கு நாஸ்திகர் ஒரு ஆக்ஷேபணை கூறுகின்றனர். உருவமற்ற கடவுளுக்கு அழகிய உருவம் எப்படித்தோன்றும்? கடவுளால் தான் அழகைக் கண்டு ஆநந்திக்கின்றோம் என்றால் அகோரத்தைக் கண்டு யாரால் வெறுக்கின்றோம்? ஒரு சமூகம் எந்த அழகை மதிக்கின்றதோ அதையே மற்றோர் சமூகம் வெறுக்கின்றது. தேளுக்குத் தேள் அழகானால் நமக்கு ஏன் அது அகோரமாகத்தோன்றுகின்றது? இதற்கு நாஸ்திகர் விடை யாதெனில் அழகும் அகோரமும் [Beauty and Ugliness] அவரவர் பழக்கத்தை அனுசரித்தவை. எந்த சமூகத்தில், எந்த வஸ்து அழகென பழக்கத்தில் கருதப்படுகின்றதோ அந்த சமூகத்திற்கு அதுதான் அழகு. அதனையே வேறோர் சமூகம் அகோரமென்று வழங்கினால் அது அந்த சமூகத்திற்கு அதுவே அகோரம். ஒரு பொருளை ஒரு சமூகத்திற்கு அழகாகவும் அதனையே மற்றோர் சமூகத்திற்கு அகோரமாகவும் தோன்ற "கடவுள்" செய்தார் என்றால் அது நகைப்புக்கிடமாகும்!

இது நிற்க, கடவுள் பெயரைக் கேட்டறியாத மிருகம், பட்சி, புழுப்பூச்சிகளும் அழகை அனுபவிப்பதாக யூகிக்கப்படுகின்றது. உயிர் நூலாசிரியராகிய டார்வின் இதனை விரிவாக எடுத்துரைத்திருக்கின்றார். அழகும் அகோரமும் கடவுளால் ஏற்பாடு செய்யப்பட்டவைகள் அல்ல. இயற்கையாகவே மனிதருக்கும் மிருகங்களுக்கும் உண்டான கிளர்ச்சி. அழகைக் கண்டு ஆநந்திப்பதும் அகோரத்தைக்கண்டு அருவருப்படைவதும், கடவுளால் அல்ல. Natural Selection என்ற இயற்கை தேருதலால் உண்டானவை. இதனை Descent of Man என்ற அவருடைய அரிய நூலில் நிரூபித்திருப்பதைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். டார்வின் முழு நாஸ்திகர் அல்ல. இந்த ஞாயங்கள் மனித கோரிக்கைக்கும் மதிப்புக்கும் பொருந்தும். கோரிக்கையும் மதிப்பும் அந்தந்த நாகரீகத்தை அடுத்தது. வேட்டைக்காரனுக்கு வேட்டை மேல் கோரிக்கையும், மதிப்பும், எவ்வளவு தந்திரமாக மிருகங்களைக்கொல்லலாம் என்பது அவனது கோரிக்கை. ஆனால் கவிஞனுக்கோ எவ்விதமாக சொற்களை அடுக்கலாமென்பது இவனுடைய கோரிக்கை. இதில் எது உயர்ந்தது? எது தாழ்ந்தது? கோரிக்கை ஒன்றல்ல. பல. அவை கால தேச வர்த்தமானங்களுக்குட்பட்டவை. கடவுளால் அமைக்கப்பட்டவை அல்லவேயல்ல.

நான்காவது, கடவுள் எண்ணம் மனிதர் உள்ளத்தில் தோன்றாவிடில் அன்பு [Love] காருண்யம் [Kindness] தயை [Charitableness] மனிதனுக்குத்தோன்றாதாம்! நாஸ்திகன் விடை பின்வருமாறு:— இந்த நன்னடக்கைகள், மனிதர் உள்ளத்தில் தோன்றியிருப்பதோடு, கடவுள் என்ற வார்த்தையை அறியாத மிருகாதிகளிடத்தும் தோன்றின. ஒன்றுக் கொன்று உதவி, அன்பு, ஈகை, ஒற்றுமை, புரிந்து நடப்பதை மிருகங்கள் வாழும் இயற்கை இடங்களில் பார்க்கலாம். நன்றியுள்ள நாய்கள் பல. துணைவியை விட்டுப் பிரியாத பட்சிகள் பல. மனிதனுக்குத்தான் இந் நடவடிக்கைகள் உரித்து என்று சொல்வதெல்லாம், அறியாமையாலும் [Ignorance] மனிதன் உயர்ந்தவன் என்ற ஆணவத்தாலும் [Human conceit] பிறக்கும் வார்த்தைகள். "Mutual Aid by Prince Kropotkin" என்ற புத்தகத்தை வாசித்து ஆஸ்திகர் தங்கள் மருளைப் போக்கிக்கொள்வார்களென நம்புகின்றோம்.

நன்னடத்தைக்கு ஆதாரம்.

நடத்தை [Behaviour] எல்லா உயிர்களுக்குமுண்டு. அது நல் நடத்தையாக இருக்கலாம். ஆனால் நல்லதென்பதும், கெட்டதென்பதும், அனுபவத்தில் தான தெரிந்து கொள்ள முடியும். பொதுவாக, எந்த நடத்தை ஜீவனை வாழவைக்கின்றதோ, அது அந்த ஜீவனுக்கு நல்ல நடத்தையாகும். எந்த நடத்தை ஜீவனை நாசமாக்குகின்றதோ அது தூர் நடத்தையாகும். இது தான் நடத்தைகளுக்குள்ள வித்தியாசம். எந்த ஜீவராசிகளில் அன்பு, ஈகை, தயை, காருண்யம் அதிகமாக விளங்குகிறதோ, அந்த ஜீவர் ஜீவித்து வாழ்ந்தும் இந்த நடத்தைகள் இல்லாத ஜீவராசிகள் நாசமடைவதும், கண்காட்சி. எது போலெனில் பள்ளத்தில் நின்ற ஜலம் பள்ளத்தில் தங்குவதும், மேட்டில் பட்ட ஜலம் ஓடிப்போவதும், ஜலத்தின் நடவடிக்கையால் உண்டாகின்றது. அது போலவே சில நடத்தைகளால் அழிவுறுகின்றார்கள். அதுவும் இயற்கை. எதற்கும் கடவுளும் வேண்டாம், கடவுள் அருளும் வேண்டாம்.

கோடான கோடி வருஷங்களாகக் கோடான கோடி மிருக ஜீவர்கள் கடவுளென்ற பெயரைத் தெரியாமலே வாழ்ந்து வந்திருக்க இன்று முதல் அந்தப் பெயர் மக்களுக்குத் தெரியாமற் போனால் என்ன? இன்றும் மனிதனுக்குத் தாழ்ந்துள்ள உயிர்கள் கடவுள் பதத்தைக் கேட்காமலே சுகதுக்கத்தோடு வாழ்ந்து வருகின்றன. மனிதனும் இந்த சொல்லை மறந்தும் உயிர் வாழ்வதற்கு என்ன தடை? கடவுளென்ற சொல் இல்லாமலே பலஆயிரம் வருஷம் வாழ்ந்து வந்த மனிதன் நாளைக்கும் வாழலாம். அந்த சொல்லை மறந்து விட்டாலும் கைத்தான பிரளயத்தால் மக்கள் அடித்துக்கொண்டு போகப்போவதில்லை. உலகில் மக்களுக்குள் காணும் நன்மையும் தின்மையும், அன்பும், ஆசையும் நன்றியும் விசுவாசமும் ஓடிப்போகப்போவதில்லை. கை, கால் முதலிய அவயவங்களுடன் வாழ்ந்து வருவதைப் போல் சாந்தத்துடன், சமாதானத்துடனும், மனிதன் வாழ்ந்து வருவான். சிற்சில காலங்களில் புயலும், வெள்ளமும் மக்களை வருத்துவதைப் போல் சண்டையும் போரும் சிற்சில சமயங்களில் மக்களை வருத்தும். ஆனால் வெளிச்சமும் குளிர்ச்சியும் மற்ற காலங்களில் உலகில் நிலவிவருவதைப் போல், ஈகையும், தயாளமும் மக்களிடத்து நிலவியே வரும். அதற்கும் கடவுள் வேண்டாம், இதற்கும் கடவுள்வேண்டாம்.

எத்தனையோ மூடநம்பிக்கைகள் மக்களிடத்து தோன்றி மறைந்தன. உலகப்போக்கில் அநேக மூடநம்பிக்கைகள் குறைந்து வருவதைப்போல் "கடவுள்" நம்பிக்கையும் ஒரு காலத்தில் மக்களை விட்டுப் போகும். இந்த நாட்களில் எந்த நாகரீக மடைந்துள்ள மனிதன், மழை இந்திரனாலும், காற்று வருணபகவானாலும், இடியும் மின்னலும் இடி மன்னனாலும் உண்டாகின்றதாக நம்புகின்றான்? அம்மையும், நோயும், பிளேக்கும், காச்சலும், மாரியாத்தாளாலும் மகாமாரியாலும் உண்டாவதாக எந்த அறிஞன் நினைக்கிறான்? கோயில்களுக்கும் குளங்களுக்கும் முன் போல் யார் போகின்றார்கள். சந்தியாவந்தனம் செய்யும் பிராமணனும், கோயில்களுக்குப் போகும் பக்தர்களும் குறைந்தே வருகின்றனர். டீன் இஞ்ஜெ [Dean Inge] என்ற பிரபல பாதிரி, கிறிஸ்து நாட்டில் நாஸ்திகம் பரவிவருவதைப் பார்த்து, வருந்துகின்றார். ஆனால் நாஸ்திகம் பரவிவருவதால் நமது உலகம் ஒரு பெருத்த மாய்கையினின்று மீண்டு தெளிவுபெறும் என்பது நிச்சயம். அதனால் யாதொரு கெடுதியும் உலகிற்கு நேரிடாது.

நேற்று நடந்த புயல்காற்றால் நமது தமிழ்நாட்டுக்குப் பெருத்த உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் நேரிட்டது. அதற்காக யாரும் கடவுளைக் கட்டிக்கொண்டு அழவுமில்லை துதித்து வணங்கவுமில்லை. கஷ்டநஷ்டப்பட்டோருக்கு எவ்விதம் உதவி செய்யலாம என்ற முயற்சிதான் மேலிட்டுவருகிறது. புயல் உண்டானதற்கும் கடவுள் வேண்டியதில்லை. அதன் வேகத்தால் நேர்ந்த கஷ்டங்களை நிவர்த்திக்கவும் "கடவுள்" வேண்டுவதில்லை. நமது முயற்சியே வேண்டும். தெய்வத்தால் ஆகாதெனினும்மெய்வருந்தக் கூலி தருமென்றார், நமது தமிழ்நாட்டுக் கவிஞர். இதனால் நமது முயற்சி தெய்வத்திற்கும் மேற்பட்டதெனப் பெறப்பட்டது நமது முயற்சிக்கு தெய்வம் இருந்தாலென்ன? [illegible]

தொடர்ச்சி 13-ம் பக்கம் [illegible]

ரோஜா முத்தையா

# புரட்சி

ஈரோடு 1933-டிசம்பர்-மீ 31-உ

## தமிழன்பர் மகாநாடு.

—:0:—

(ஈ. வெ. கி.)

சென்னையில் இம்மாதம் 23, 24-உகளில்கூடிய தமிழன்பர் மகாநாடு ஒரு சுயநலக் கூட்டத்தார்களால் கூட்டப்பட்டு அதன் பலன்களை அச்சுயநலக் கூட்டத்தார்களுக்கே பயன்படுமாறு உபயோகப்படும்படியான முறையில் நடத்தப்போவதாக நம் புரட்சியில் பல கட்டுரைகளும், தலையங்கமும் எழுதப்பட்டன. அதைக் கண்டிப்பாய் பகிஷ்கரிக்கும்படி இரண்டு ஜில்லா மகாநாடுகளும், பல சங்கங்களும் தீர்மானங்கள் நிறைவேற்றி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

தென்னாட்டில் தமிழ் கற்று அதில் பாண்டித்யம் பெற்று அன்பு பூண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் மலிந்திருக்க, தமிழென்றால் வேப்பங்காயெனக் கருதும் சில ஆரியப் பார்ப்பனர்கள் பெருக்காக தங்களுக்கு இசைந்த இரண்டொரு தமிழர்களையும், இரண்டொரு மகம்மதியர்களையும், கிறிஸ்தவர்களையும் சேர்த்துக்கொண்டு தமிழர் மகாநாடு என்று போடாது தமிழன்பர் மகாநாடுஎன்று ஓர் மகாநாட்டைக் கூட்ட ஆரம்பித்ததே இம்மகாநாட்டைக்கூட்டியவர்களின் சூழ்ச்சியை விளக்கப்போதிய சான்றாகும்.

அடுத்தபடியாக அதன் நடவடிக்கைகளில் அங்கம் பெற்றவர்களாகிய புத்தகாலய பிரசார சங்கத் தலைவர், மகாநாட்டுத் திறப்பாளர், வரவேற்புக்கழகத் தலைவர் முதலியோர்களின் யோக்கியதைகளைப்பற்றிக் கவனித்தால் அதன் உட்கருத்து விளங்காமற் போகாது. அதாவது தோழர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் என்பவர் தமது ஜீவனமாகிற வக்கீல் தொழிலில் இன்றையத் தினத்தில் கோர்ட்டுகளில் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடத்தப்படவேண்டும் என்பதாக ஏற்பட்டு விட்டால் இவருக்குள்ள தமிழின் அன்பு அப்பொழுதே விளங்கிவிடும். அடுத்தபடியாக "மகாமஹோபாத்யாயர்" பட்டம் பெற்றவரைக் கவனித்தால் தமிழ் மக்களும் ஆரியமக்களும் அவரிடம் ஒரு பதவியை எதிர்பார்க்கிறகாலத்தில் அவரது தமிழன்பு, வடமொழியன்பு, தமிழரன்பு, ஆரியரன்பு என்பது எத்தகையதெனவிளங்கும்? மகாநாட்டுத் திறப்பாளர் விஷயத்தில் அவரால் ஏற்படுத்தப்பட்ட கல்லூரியில் பார்ப்பன ஆதிக்கத்திற்கோ, தாக்ஷண்யத்திற்கோ, பயத்திற்கோ உள்பட்டதாகக் காணப்படும் தமிழ்பாஷைக்கும், தமிழர்களுக்கும் ஏற்படுத்தி நடத்தப்பட்டு வரும் முறையே போதுமான அத்தாக்ஷியாகும்.

அடுத்தபடியாகத் தலைவரவர்களைபற்றி அவருக்கு ஏற்பட்டிருக்கும் கல்வி உத்தியோகத்தில் முதன்மையான உத்தியோகம் அமையப்பெற்றிருந்தும் அக்கல்வி இலாக்காவில் தமிழுக்கு எவ்வளவு ஆதிக்யம் வழங்கப்பெற்றிருக்கிறதென்பதை யோசித்தால் தானே விளங்கிவிடும். மகாநாட்டுத் தலைமைப் பதவியில் தீர்மான காலங்களில் ஒன்றில் நடந்துகொண்டமாதிரியும் மனப்பான்மையையும், நடுநிலைமைக்கும் போதுமான காரணங்களாகும்.

தவிர இம் மகாநாடானது ஒற்றுமையைக்கொண்டதும், நல்லெண்ணத்தின் முயற்சியைக்கொண்டதாகவும் ஏற்படுத்தவில்லை என்பதற்கு அறிகுறியாகிய போலீஸ் பந்தோபஸ்தை விரும்பி ஒரு போலீஸ் கமிஷனர், 2 சப் இன்ஸ்பெக்டர், ஒரு சார்ஜெண்டு, 12 கான்ஸ்டேபிள்கள் அடங்கிய ஒரு போலீஸ் கச்சேரியாக மகாநாட்டை ஆக்குவித்து அதில் வந்தவர்களினுடைய கையெழுத்துகளை வெளிக்காகிதமாகிய முச்சலிக்கையில் கையெழுத்து வாங்கிய பிறகே மகாநாட்டை ஆரம்பிக்கப்பட்டதெனின் அதற்கிருக்கும் யோக்கியதையும், மனப்பான்மையும், நல்லெண்ணமும், நம்பிக்கையும் எத்தன்மை வாய்ந்ததென்பது கவனித்தவர்களுக்கே புலப்படும்.

தவிர தமிழ் எழுத்துக்களைப் புதுப்பித்து சீர்படுத்தவேண்டிய தீர்மானத்துக்கு அநுசரணையாக ஏற்படுத்திய கமிட்டியை ஏற்படுத்தும்போது ஷை கமிட்டிக்கு ஒரு பெண்மணியையாவது அங்கத்தினராக தேர்ந்தெடுக்காதது பெண்ணுலகத்திற்கே கல்வி விஷயத்தில் பொறுப்பேற்று நடத்தும் அறிவும், ஆசையும், ஆற்றலும், இல்லை எனப்பகிரங்கப்படுத்தி அவமானத்தை உண்டாக்கும் தீர்மானமாகுமென்றே கருத இடமேற்படுகிறது. திறப்பாளர் ராஜா சர் அண்ணாமலையார் தமது திறப்பு விழாவாற்று முறையில் ஆற்றிய சொற்பொழிவில் "தமிழன்பர்களே அறிவு அனைவருக்கும் பொது அது ஒருவருக்கே உரியதன்று. அதனை ஆடவரும் பெறவேண்டும், மகளிரும் பெறவேண்டும், ஏழையும் பெறவேண்டும், தனிகரும் பெறவேண்டும்" என்று கூறியிருப்பதற்கும் மேல்கண்ட கமிட்டியில் பெண்மணிகளில் ஒருவரையாவது சேர்க்காதிருப்பதற்கும் சம்பந்தம் எப்படி இருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. ஒவ்வொரு தமிழனும் இன்னும் பள்ளியில் ஔவைப்பிராட்டியின் நீதி மொழிகளைக் கற்று அதன்படி நடக்கிறவனைத்தான் பண்டிதனென்றும், பெரியோர் என்றும் பெயர் பெற்று விளங்குவதையும் நாம் பார்க்கலாம். அப்படி இருக்க போர்வீரர்களாகவும், நீதிபதிகளாகவும், வழக்கறிஞர்களாகவும், தபாலாபிசர்களாகவும், கல்வியதிகாரிகளாகவும் உத்தியோகங்களில் பெண்மக்களைச்சேர்த்து நடத்தி வருகிற இக்காலத்திலும்கூட நாம் நமது பெண்மக்களுக்காக கல்வி சம்பந்தமாகக்கூட ஒரு ஆதிக்கம் தருவதற்கு முற்பட விரும்பவில்லையானால் அது மிகமிக பிற்போக்கானகாரியமென்றே சொல்லுவோம். ஏனெனில் இந்த தமிழன்பர் மகாநாட்டில் சுமார் 10-15 பண்டிதைகளான பெண்மணிகள் விஜயமாகியிருந்தும், அவர்களில் பெரும்பான்மையோர் பெரிய பெரிய மகாநாட்டுக்கூட்டங்களில் பேசும் திறமையும் பத்திரிக்கைகளில் கட்டுரைகள் எழுதும் ஆற்றலும் அமைந்தவர்களாகவிருக்கும்பொழுதும் புறக்கணித்ததானது விவசாயி நிலத்தைப் பண்படுத்தாது வித்தை ஆராய்வது போலும், அழகுறச் செய்துகொள்ளுபவர் தலையிருக்க உடலை அலங்கரிப்பது போன்றதென்பதே நமது கருத்து. ஆகையால் இத்தகைய மகாநாடுகள் நம் நாட்டிற்காவது, மக்களுக்காவது பயனளித்து முற்போக்கடையும்வழிகளில் உபயோகப்படும என்கிற முறையில் நடத்தப்படவில்லை என்பது நமதபிப்பிராயம். மற்ற நடவடிக்கைகளைக் குறித்து பின் தெரிவிக்கப்படும்,

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## கோவைச் சிறையில் தோழர் ராமசாமி.

### இந்திய சட்டசபைத் தலைவரின் சந்திப்பு.

### கண்ணம்மாள் ஜாமீனில் விடுதலை.

26-12-33-உ 11 மணிக்குகோயம்புத்தூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் தோழர் வெல்ஸ் ஐ. சி. எஸ். முன்பு தோழர் ஈ. வெ ராமசாமி அவர்களின் சகோதரியும் குடி அரசுப்பத்திரிகையின் பிரசுரதாரருமான தோழர் கண்ணம்மாளை ஜாமீனில் விடவேண்டுமென கொடுத்திருந்த மனுவின்பேரில் விவாதம் நடைபெற்றது, தோழர் கண்ணம்மாள் சென்ற வாரம் தோழர் ராமசாமியுடன் கைது செய்யப்பட்ட விவரம்நண்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஜாமீனில் தோழர் கண்ணம்மாளை விடவேண்டுமென்று தோழர் டி. டி. ரத்தினசபாபதி பிள்ளை இன்று கலெக்டர் முன்பு வாதிக்கையில் அக்டோபர் மாதம் 29 தேதி வெளிவந்துள்ள குடிஅரசுப் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டுள்ள கட்டுரைக்கு தோழர் கண்ணம்மாள் நேர் ஜவாப்தாரியல்ல வென்பதாகவும் ஷை வியாசமானது வாக்குத்தாரர்களுக்குக் கூறப்பட்ட ஓர் சாதாரண போதனைதான் ஆகும் என்பதாகவும் எனவே அது ராஜநிந்தனையாகாது என்பதாகவும் இப்போது வியாசத்தை பற்றி யோசிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் கூறியதோடு எதிரி ஒரு பெண்ணாக இருப்பதை முன்னிட்டும், தேக அசௌகரியத்துடன் இருப்பதை முன்னிட்டும் சாட்சிகள் கலைக்கப்படுவார்கள் என்று நினைப்பதற்கு இடமில்லாமல் இருப்பதை முன்னிட்டும், தோழர் கண்ணம்மாளை ஜாமீனில் விடவேண்டுமென்று, பல வழக்குகளில் நடந்த மேற்கோள்களை எடுத்துக்காட்டி வாதாடினார்.

ஜாமீனில், தோழர் கண்ணம்மாளை விடுவதை, மனுவில் கண்டுள்ள காரணங்களைக்கொண்டு எதிர்ப்பதாக போலீஸ் பிராசிக்கியூட்டிங்இன்ஸ்பெக்டர் தோழர் வரதராஜுலுநாயுடு கூறினார். இதுவிஷயமாக யோசிக்கச் சிறிது சாவகாசம் வேண்டும் என்று கூறனும், தோழர் கண்ணம்மாள்

# ஜவகர்லால் பொதுவுடமைக்காரரா?

## காந்தியின் விளக்கவுரை.

காந்தியார் வழக்கப்படி தமது மெத்தையில் திண்டுகளின் பேரில் சாய்ந்து கொண்டிருந்தார். ஓர் நிருபர் உள்ளே வர அனுமதிக்கப் பட்டார். அந்நிருபர் கேட்ட சில கேள்விகளும் காந்தியின் விடைகளும் பின்வருமாறு:—

நிருபர்:— தோழர் பண்டித ஜவஹர்லாலின் சர்வ சமத்துக் கொள்கைகளைக்கொண்டு, அவர் தலைவராக இருந்தால் காங்கிரஸே பொது உடமைக்கட்சியாய் விட்டதென்ற தப்பெண்ணம் உண்டாய் விடாதா?

காந்தி:— "இல்லை நான் அப்படி நினைக்க வில்லை. தோழர் ஜவகர்லால் மிக்க கண்ணியம் வாய்ந்த சத்தியவாதி. ஆகையால் அவர் காங்கிரசின் மூலாதாரக் கோள்கைக்கு மாறாக நடக்கமாட்டார் என்று நினைக்கின்றேன். அவருக்கே அந்தக் கோள்கைகள் இன்னும் உருப்பட்டு நிலைகோள்ளாமலிக்கும்பொழுது அவர் அதைக்காங்கிரசில்எப்படி நுழைத்துத் தன்மயமாக்குவார். அவருக்கு சர்வ சமத்துவ எண்ணம் பூர்ணமாக இருந்த போதிலும் இந்தியா இருக்கும் நிலைமையில் அதை எப்படிப் பழக்கத்திற்குக் கொண்டு வருவது என்பது இன்னும் அவர் யோசித்து வருகிறார். ஆகையால் அதைப்பற்றி யாரும் பயப்பட வேண்டியதில்."

நிரு:- "தோழர் ஜவஹர்லால் நினைக்கிறபடி நிலங்களை ஜனத்தொகைமேல் பங்கிடுவது சாத்தியமா?

காந்திஜி:- நிலங்களை அவ்வாறு பங்கிடுவது சரியல்ல. பரம்பரை நிலச்சுவான்கள் செல்வாக்கை அடியோடு அழிப்பதால் பெருங்கேடு விளையும். பயிரிடுகிறவனுக்கு நிலத்தில் உரிமையும் விளைவில் பெரும்பகுதியும் வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அவர்கள் நிலத்தில் படுகிற கஷ்டத்திற்குச் சரியான பலன் கிடைப்பதில்லை. வெறும் ஜீவனத்திற்கு மாத்திரம்கொடுத்தால் போதாது. கொஞ்சம் அதிகம் கொடுப்பது நலம், நியாயம்.

இந்த விவசாயிகள் எழுச்சி சாமான்யத்தில் ஓய்ந்துவிடாது.

நிரு:- "சட்டப்படி விவசாயத்திற்கு" மத்தியஸ்தர்கள், பணம் கடன்கொடுப்பவர்கள், விலைப்படுத்தும் ஏஜெண்டுகள் இவர்களால் அபாயம் உண்டென்பதைத் தாங்கள் நன்றாக நினைத்துப் பார்த்தீர்களா?

காந்திஜீ:- "மத்தியஸ்தர்கள் முதலானவர்கள் நிலத்தைப் பிடித்துக்கொண்டால் விவசாயியின் கதி அதோகதிதான். பயிரிடுவோன் நன்மையை நாம் பாதுகாக்கவேண்டும். அவன் எத்தனை தொழிலாளர்கள் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். அதனால் அந்த வாரக்காரர்கள் சொந்தக்காரன்போல் ஆகிவிடுடுமனே."

நிரு:—"ஆலயப் பிரவேசத்தில் சிலர் பலாத்காரத்தைக் கைக்கொள்வார்கள் போலிருக்கிறதே.

காந்திஜீ:—"ஹரிஜன இயக்கத்திலுள்ள எவராவது பலாத்காரத்தைக் கைக்கொண்டால் அது எனது விருப்பத்திற்கு நேர்விரோதமானது. சவர்னர் [உயர்ந்தோர்] எல்லோரும் விரும்பி ஹரிஜனங்களை அன்புடன் அழைத்துச்சேன்றாலல்லதுஹரிஜனங்களுக்கு ஆலயந்திறக்க நான் ஒப்பேன். அனுகூலமாக மிகப் பெரும்பான்மையான வாக்கிருக்கும் விடத்தில் தான் ஆலயப்பிரவேசத்தை அனுமதிக்க ஒப்புக்கோண்டேனு."

---

உஷார் **காந்தியார்** உஷார்

தீண்டாமை சாக்கில்

வர்ணாச்சிரம—இந்துமத பிரசாரம்

செய்ய வருகிறார்.

பணம் கொடாதீர்கள்.

பகிஷ்கரியுங்கள்

---

நோய்வாய்ப் பட்டிருப்பது வாஸ்தவந்தான் என்பதாகவும் கூறினார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு மாஜிஸ்திரேட் தோழர் கண்ணம்மாளை ஜாமீனில் விடுதலை செய்ய உத்திர விட்டிருப்பதாகக்கூறினார்.

தோழர் டி. டி. ஆர். பிள்ளைக்கு உதவியாக தோழர்கள் ஈரோடு வேணுகோபால், சென்னை கே. எம். பாலசுப்பிரமணியம், கோவை நஞ்சுண்டையா முதலிய வக்கீல்கள் ஆஜரானார்கள்.

"புரட்சி" பத்திரிகை பிரசுரகர்த்தாவும் பதிப்பாளருமான தோழர் எஸ். ஆர் கண்ணம்மாளை, அவர்மீது கொண்டுவரப்பட்டிருக்கும் வழக்கு விசாரணை முடியும் வரை ஜாமீனில் விட வேண்டுமென கோவை ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மனுச் செய்து கொள்ளப்பட்டது. ஜில்லா மாஜிஸ்டிரேட் அவரை ரூ 500 சொந்த ஜாமீனும், அதே தொகைக்கு மற்றும் ஒருநபர் ரூ 500 ஜாமீனும் கொடுத்தால் விடுதலை செய்யும்படி உத்திரவிட்டார்.

தோழர் கண்ணம்மாள் 26-உ ஜாமீன் கொடுத்து விடுதலை யடைந்து அன்றிரவே மெயிலில் ஈரோடுவந்து சேர்ந்தார்.

தோழர் ஈ. வெ. ராமசாமி, எஸ். ஆர். கண்ணம்மாள் இவர்கள் இருவர்மீதும் கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்கு ஜனவரி மாதம் 4 தேதி கோவை ஜில்லா மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை வரும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி. அவர்களை கோவைச் சிறையில் இந்திய சட்டசபைத தலைவர் தோழர் சர். ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ., அவர்களும், தோழர்கள் ஈ. வி. கிருஷ்ணசாமி. எஸ். ராமசாமி, கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ. பி. எல்., வி. வேணுகோபால் பி. ஏ. பி. எல்., முதலியவர்களும் சென்று பார்த்துவந்தார்கள். 4-1-34ல் தமிழ்நாடு ஆசிரியர் தோழர் டாக்டர் பி. வரதராஜுலு அவர்கள் பார்த்துவரப்போவதாகத் தெரியவருகிறது.

---

# கோவை ஜில்லா மோட்டார் தொழிலாளிகள் சங்கம்.

மேர்படி சங்கம் ஸ்தாபிக்க வேண்டி 27-12-33தேதி புதன் கிழமை இரவு 9-30மணிக்கு கோயம்புத்தூர் தோழர் எஸ். அப்பாவுபிள்ளை அவர்களின் தொழிற்சாலையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. மோட்டார் டிரைவர், கண்டக்டர்கள் மற்றும் தொழில் வேலைக்காரர்கள் அனைவரும் கூடியிருந்தனர்.

தோழர். ஆர். கிசன் அவர்கள் பிரேரேபித்து சென்னை தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தப்பின் வருமாறு பேசினார்:—

தோழர்களே, மோட்டார் வாகனமானது நாகரீக சாதனங்களில் முக்கியமானவற்றில் ஒன்றாய் இருப்பது உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும் எனினும் அதைவிடப்பெரிய நாகரீக வளர்ச்சியின் குழவிகளாகிய இரயில் வண்டிகளும், ஆகாய கப்பல்களும் பெருகிக்கொண்டே வந்து இவனும் கூடியசீக்கிரத்தில் மோட்டார் வண்டிகளை அறவே ஒழித்து அகற்றிவிடுமோ என்று நாம் அஞ்சவேண்டிய நிலையில் இருந்து வருகின்றது. இதைக்கண்ட நமது இந்திய அரசாங்கத்தார் சில மாதங்களுக்கு முன்பு இரயில்—மோட்டார் மகாநாடு ஒன்று கூட்டுவித்து இவ்விரண்டும் ஒன்றையொன்று அழிக்காமல் உதவி சரத்தக்க வழியைக்கண்டு பிடிக்க முயன்றுவந்தனர். ஆகவே மோட்டார் தொழிலைப்பாதுகாத்து நிலை நிறுத்தவேண்டிய கடமை மோட்டார் முதலாளிகளையும் தொழிலாளிகளையும் சார்ந்ததாகும்.

ஆனால் மோட்டார் தொழிலாளிகள் நல்ல நிலையிலும், வன்மையோடும் வளப்பத்தோடும், திருப்தியோடும் இருந்தாக வேண்டும். அவ்வாறு இருந்தால் ஒழிய ஒன்றும் முடியாது. அவ்வாறு இருப்பதற்கு இதுபோன்றதொரு சங்கம் இன்றியமையாதது ஆகும். தனிப்பட்ட முறையில் எந்தத்தொழிலாளியும் தனது முதலாளியுடன் சாமர்த்தியமாக நடந்து கொள்வது முடியாதகாரியம். சம்பளம், பேட்டா, வேலையில் அமர்த்துதல், நீக்குதல் முதலிய விஷயங்களில் சங்கத்தின்மூலம் போராடினால் அன்றி தொழிலாளிகளுக்கு வெற்றி என்பதே முடியாதென்பது நமது அனுபவமாகும். இங்கிலாந்தில் தொழிற்கட்சி வலுத்து ஆட்சியும் புரியும் முறையில் இருந்து இருக்குமானால் அதற்குக் காரணம்

# தமிழன்பர் மகாநாடு.

## பகுத்தறிவுத் தீர்மானம் தலைவரால் நிராகரிக்கப்பட்டது.

பொது மக்கள் பகுத்தறிவு வளர்ச்சிக்கு மிகவும் அனுகூலமான ஒரு முக்கியமான தீர்மானத்தை தோழர் எஸ். குருசாமி அவர்கள் தமிழன்பர் மகாநாட்டிலே பிரேரேபித்தார். அது தலைவரால் நிராகரிக்கப்பட்டது மிகவும் வருந்தத்தக்கது. அதன் விபரம் பின்வருமாறு:—

"அறிவைப் பரப்புவதற்கும், இலக்கியங்களைக் கற்பிப்பதற்கும் ஏற்படுத்தப்படுகிற கல்வி சம்பந்தமான புஸ்தகங்களில் பகுத்தறிவுக்கும், தன்னம்பிக்கைக்கும் முரணான கடவுள் வாழ்த்து, கடவுள் வணக்கம் முதலிய விஷயங்களை அடியோடு குறிப்பிடாமலிருக்க வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது," என்ற தீர்மானத்தை தோழர் குருசாமி பிரேரேபித்தார். கோவில்களையெல்லாம் கட்டாயப் பள்ளிக்கூடங்களாக்கும் காலம் கூடிய சீக்கிரம் வந்துவிடுமென அவர் கூறினார்.

தோழர் எஸ். இராமநாதன் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- இந்த தீர்மானத்தை அனைவரும் ஒப்புக்கொள்ளும் பொருட்டே, கடவுள் இல்லையென்ற நம்பிக்கைகொண்டவர்கள் விட்டுக்கொடுத்து தீர்மானத்தை ஆக்கியிருக்கின்றனர். விஞ்ஞானத்தைப் பொதுஜனங்களுக்குப் பரப்பி ப்ரசாரம் செய்யும் பொருட்டு தமிழ் பாஷையை அபிவிருத்தி செய்ய முற்பட்டிருக்கும் இந் நாளில் கடவுள் சம்பந்தத்தை விஞ்ஞான சாஸ்திரங்களில் கொண்டு வரக்கூடாது என்பதே எனது கருத்து.

தோழர் வி. கலியாணசுந்தர முதலியார்

பின்னர் பேச ஆரம்பித்த தலைவர் அவர்களே, சகோதரர்களே என்றார். வேடிக்கையாக தோழர் அலமேலுமங்கைத் தாயாரம்மாள் "சகோதரிகளுக்கும் சொல்லுங்கள்," என்றார். [அனைவரும் சிரிப்பு]

தோழர் வி. கலியாணசுந்தர முதலியார் பேசியதாவது:- பகுத்தறிவுக்கு முரணான கடவுள் வாழ்த்து கூடாது என்றுதான் இந்த தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறது. பகுத்தறிவுக்கு முரணான கடவுள் என்று அர்த்தமல்லவாதலால், நான் இதை ஆட்சேபிக்கவில்லை. இந்த நிலையில், தீர்மானத்தை பிரேரேபித்த தோழர் குருசாமியை தனது கருத்தை விளக்கிக் கூறும்படி கேட்கப்பட்டது.

தோழர். குருசாமி எழுந்து தீர்மானம் தெளிவாகத்தான் இருக்கிறதென்றும், ஆனால் பண்டிதர்கள் அதை எப்படி வேண்டுமானாலும் அர்த்தப்படுத்துவார்களென்றும் "பகுத்தறிவுக்கு முரணான கடவுள்" என்ற கருத்து அதில் தெளிவாக இருப்பதாகவும் பேசி தீர்மானத்தை மீண்டும் வாசித்துக்காட்டினார்

தோழர். சாரநாதன்:—இந்த தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர எவ்வளவு காலம் பிடிக்கும்?

தோழர். குருசாமி:—கடவுள் சம்பந்தமான இம்மாதிரி தீர்மானங்கள் வருகிற சமயத்தில் நேராக கடவுளே வந்து "அடே போ" என்று சொல்லாமல், கடவுள் தரகர்களாக தோழர். முத்துரங்க முதலியார் போன்ற இவ்வளவுபேர்கள் கிளம்பியிருக்கிறார்கள்

தலைவர்:—கடவுள் அறிவுக்கு முரணான பொருள் என்பது தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்களுடைய கருத்து. இது தெளிவாகிவிட்டது.

திருத்தம்.

தோழர். டி. பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை ஒரு திருத்தங்கொண்டுவந்தார்.

அசல் தீர்மானத்தின் முதற் பாகத்தில் "இலக்கியங்கள்" என்ற வார்த்தையை நீக்கி இரண்டாவது பாகத்தை "சம்பந்தமான புஸ்தகங்களில் வரும் கடவுள் வாழ்த்து முதலிய பகுத்தறிவுக்கும் தன்னம்பிக்கைக்கும் முரணாக இருக்கக்கூடாது என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்று திருத்திப்படிக்க வேண்டும் என்றும் அவர் பிரேரேபித்தார். தோழர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் திருத்தத்துடன்கூடிய தீர்மானம் பின்வருமாறு இருக்குமென தலைவர் சபையில் படித்துக்காட்டினார்:— "அறிவை பரப்புவதற்கும் கற்பிப்பதற்கும் ஏற்படுத்தப்படுகிற கல்வி சம்பந்தமான புத்தகங்களில் வரும் கடவுள் வாழ்த்து முதலியன பகுத்தறிவுக்கும் தன்னம்பிக்கைக்கும் முரணாக இருக்கக்கூடாது என்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

தோழர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பேசுகையில் கடவுள்; நமக்குள் ஒரு உணர்ச்சியை உண்டாக்கக்கூடிய பரம் பொருளென்றும் சுயமரியாதைக்காரர்கள் அதை விட்டு விடுவதில் தனக்குக் கவலை இல்லை என்றும், கடவுள் வாழ்த்தெல்லாம் பகுத்தறிவுக்கு முரணானது என்று தோழர் எஸ். ராமநாதன் விளக்கமாகச் சொல்லிவிட்டதாகவும் அதைப்பற்றியும் தனக்கு கவலை இல்லையென்றும் கூறினார்.

தோழர் தாவுத் ஷா திருத்தத்தை ஆமோதித்தார். தோழர் பாகனேரிசாமிநாதன் அசல் தீர்மானத்தை எதிர்த்துப்பேசினார்.

தோழர் பஷீர் அகமது சையது பின்னர் பேசியதாவது:— கடவுள் வாழ்த்து பகுத்தறிவுக்கு முரண்பட்டதா இல்லையா என்ற விஷயம், கட்சிப்பிரதிக் கட்சியை உண்டாக்கக்கூடிய விஷயம். தமிழை வளர்க்கும் நோக்கத்துடன் நாம் கூட்டியிருக்கும் இந்த மகாநாட்டில், இம்மகாநாட்டுக்குப் புறம்பானதும் கட்சிப் பிரதிக்கட்சியை உண்டுபண்ணக்கூடியதுமான மத விஷயங்களைப்புகுத்துவதும் மத சம்பந்தமான தீர்மானம் கொண்டு வர அனுமதிப்பதும் ஒழுங்கல்ல. பிரஸ்தாப தீர்மானம் எவ்விதத்திலும் தமிழ் பாஷை அபிவிருத்தி சம்பந்தமான தீர்மானமாகாது.

தோழர் எஸ். இராமநாதன்.

பின்னர் பேசியதாவது:— பாஷை அபிவிருத்தி சம்பந்தமான முயற்சியில் மத விஷயங்களைப் புகுத்தக்கூடாது என்பதே இந்தத்தீர்மானத்தின் கருத்தாகும். கடவுள் வாழ்த்தும் உணர்ச்சியும் தமிழ் பாஷையின் அபிவிருத்திக்கு குறுக்கே நிற்பதால் இந்தத்தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தலைவர் எதிர்ப்பு.

பின்னர் தலைவர் தோழர் எஸ். குமாரசாமி ரெட்டியார் பேசியதாவது:—

நேற்று இந்தத் தீர்மானத்தைக் குறித்து ஆலோசித்தோம். இந்தத் தீர்மானத்தின் கருத்து சம்பந்தமாக தோழர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்கொண்ட கருத்தையே நானும் கொண்டேன். எல்லா கடவுள் வாழ்த்தும் பகுத்தறிவுக்கு முரணானதாக நான கருதவில்லை. பகுத்தறிவுக்கு முரணான கடவுள் வாழ்த்துகள் ஒரு சில இருககாலாம் முரணானதை மாத்திரமே நீக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம் எனது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்கிறவர்கள் அனேகர் இருப்பார்கள்.

ஆனால், இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களுடைய கருத்து இன்னதென்று தெளிவாக விளங்கி விட்டது. கடவுள் வாழ்த்தும் வணக்கமும் ஒரு புஸ்தகத்திலுமே வரக்கூடாதென்பதே அவர்களுடைய கருத்து. இந்த நிலைமையில் இந்த கருத்தையும் இந்த கருத்துக்கொண்ட தீர்மானத்தையும் அங்கீகரிப்பதால் பலவித தீமைகளுண்டாகுமே தவிர நன்மையேதுவும் உண்டாகாது. இந்த மகாநாட்டு நோக்கங்களுக்கும் விதிகளுக்கும் இந்த் தீர்மானம் புறம்பானது. தமிழ்ப்பாஷையை அபிவிருத்தி செய்யக்கூடிய இந்த மகாநாட்டிற்கு புறம்பான இந்த தீர்மானத்தை அனுமதிக்க முடியாதென முடிவுக்கு அனைவரும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். (த. நா.)

[விபரம் அடுத்தவாரம் வெளிவரும்.]

---

இதுபோன்ற சங்கமேயாகும். சங்கத்தின் பொது பண்டு ஒன்று இருந்தால் வேலையில்லாது கஷ்டப்படும் தோழர்களை ரட்சிக்கமுடியும். எனவே இச் சங்கத்தை ஸ்தாபிப்பது மன்னியில் இதில் ஒவ்வொருவரும் அங்கத்தினராகி அதைப் பலப்படுத்த வேண்டுமென்று பேசினார். பின் தொழில் சங்கங்களின் சரித்திரத்தைப்பற்றிப் பேசி தொழிலின் மேன்மையைப்பற்றி உதாரணங்களுடன் பேசினார். ஒவ்வொருவரும் சுயமரியாதையுடனும் தன் தொழிலின் மேன்மையை உணர்ந்தும் சட்டதிட்டப்படிக்கும் நடக்கவேண்டுமென்றும் கூறினார். பின்னர் தோழர் ஆர். சிசன் அவர்கள் கூட்டுறவுத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று பேசிமுடித்தார். அதன்பின் தலைவர் முடிவுரை கூற வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது. பின் நிர்வாக சபை தேர்தல் நடைபெற்றது.

இக் கூட்டத்தைக் கூட்டவும் இதை வளர்க்கவும் பெரும் முயற்சி எடுத்துக்கொண்ட தோழர் புருஷோத்தமம் அவர்களது ஆர்வம் பாராட்டத்தக்கது.

[9ம் பக்கத் தொடர்ச்சி]

டாவென்ன?

## ஆஸ்திகத்தின் அபாயம். Dangers of Theism-

இந்தச் சந்தர்ப்பததில் நாஸ்திகன் வொன்று தெரிவிக்கின்றான் அதாவது கடவுள், பேய், பிசாசு, மோட்ச நகர முதலிய கற்பிதங்களால் மனிதனுடைய முயற்சி குறைவடைகின்றது. அறியாமை அதிகப்படுகின்றது. மெஞ்ஞானம் தடைபடுகின்றது. இதனால் "கடவுள்" என்ற கற்பனைச் சொல் (Is not only a negative evil, but it is positively harmful for the race) அதாவது நன்மைக்கு நாஸ்திக பட்சமாக இருப்பதுடன் உலக மக்களுக்கே கெடுதியை விளைக்கின்றது. இதனை எந்த ஆஸ்திகனும் மறுப்பதற்கில்லை. The Atheist Challenge the theist to point out one Single good that benifitted mankind during all the religious history of the human race. நாஸ்திகன் ஆஸ்திகனை நோக்கி மதசரித்திரகாலமுழுமையும் ஆஸ்திகத்தால் உலகிற்கு ஒரு நன்மையாகிலும் நேர்ந்ததைக் காட்டுமின் என்று சவால் இடுகின்றான், இதற்குத் திருப்திகரமான விடை எந்த ஆஸ்திகரும் கூறினர் இல்லை. மதங்களால் மாண்ட உயிர்களையும், அழிந்த நாடுகளையுந்தான் காட்ட முடியும்! [The blood of the martyrs is the seed of the Church] அதாவது "வதைப்பட்டோர் ரத்தமே கோயில்களின் அஸ்திவாரம்." என்ற ஆஸ்திக மொழியுண்டு. இதைத்தான் கடவுளால் நேர்ந்த நன்மை என்று ஆஸ்திகர் காட்டலாம்! மதங்களால் நேர்ந்த கொடுமைகள், கொலைகள், நாசங்கள், இடி, மின்னல், புயல், பஞ்சங்களால் நேரிடவில்லையென்றால் கடவுள பேரால் நேர்ந்த கொடுமைகளை மறப்பதெப்படி? Whatever may be his future, we can never forget his past. அதாவது "இனி கடவுளால் என்ன நடந்தாலும் அவர் முன் செய்த காரியங்களை மறக்கமுடியாது என்றார் ஒரு பெரியார!

## நாஸ்திகத்தின் நன்மை. The Benifit of The Atheism

ஆஸ்திகத்தின் தீமை இவ்வாறிருக்க நாஸ்திகத்தின் நன்மையை சற்று நோக்குவோம். இது விஷயமாக பிரா்ட்லா என்பார். [Humanity's gain from unbelief] என்ற நூலில், நாஸ்திகத்தால் உலகமடைந்துவரும் நன்மைகளை விளக்கிவுள்ளது ஈங்கு அதனைச் சுருக்க உரைப்பாம்.

1. அடிமைத்தனம் [Slavery] அதாவது மக்களை விலங்குகளைப்போல் விற்கவும் வாங்கவுமான ஸ்தாபனம் நாஸ்திகத்தால் ஒழிக்கப்பட்டது. எல்லா மதங்களும் அதனை ஆதரித்தும் பாராமுகமாய் இருந்தும்வந்தன.

2. நோய்கள் [Disease] பேய்பிசாசுகளால் [Evil-Spirit] உண்டாவதாக நினைத்துவந்த மூடநம்பிக்கை மிகுதியாக உலக முழுமையும் ஒழிந்தது. இந்த மூடநம்பிக்கையை மதங்கள் வளர்த்துவந்தன.

3. தெய்வமாகுதல், குறிசொல்லுதல், ஜோசியம் முதலிய பித்துவழக்கங்கள் நாஸ்திகத்தால் குறைவுற்றன.

4. பிசாசு பிடித்தவர்களென்று மந்திரக்காரர்களையும், பைத்தியக்காரர்களையும் கொன்று இம்சிக்கும் பழக்கத்தை நிறுத்தியது நாஸ்திகமே

5. அபிப்பிராய வித்தியாசத்தால் நேரிடும் கொலைகள் குறைந்து வருவதும் நாஸ்திகத்தால்.

6. பஞ்சம், தரித்திரம், வறுமை முதலிய கஷ்டங்கள் கடவுள் கோபத்தால் உண்டாவதாக எண்ணிவந்த மூடநம்பிக்கை ஒழிந்ததும் நாஸ்திகத்தால்.

7. கொடுங்கோல் மன்னர் ஆணவத்தை அடக்கிவருவதும்நாஸ்திகமே.

8. சுதந்திரம், சமத்துவம் முதலிய தாராள நோக்கங்கள் உலகில் பரவிவருதல் நாஸ்திகத்தால் [Question Not] கேட்காதே என்ற ஆணவத்தை எதிர்த்து விசாரிக்கும் மனப்பான்மையை வளர்ப்பதும் நாஸ்திகமே.

9. அக்கிரமம், அநியாயம், அறியாமை, தயைதாட்சண்யமின்றி ஒழிக்கப்பட்டுவருவதும் நாஸ்திகத்தால்.

10. கோடானகோடி பசித்து வருந்திக் கிடக்கும் மக்களுக்கு 'மூடபழக்கங்களிலிருந்து எழுங்கள். ஊக்கத்தையும், தைரியத்தையும் கைவிடாதீர்கள். உலகிற்கும், உங்களுக்கும் பொருளாதாரத் தாழ்வால் வந்திருக்கின்றது கேடு, அதனைப் போக்கி உலக முழுமையும் களஞ்சியமாகவும் கல்வியும், சாந்தமும், சமாதானமும் நிலவச் செய்யுங்கள்" என்று கூவி அழைப்பதும் நாஸ்திகமே.

## நாஸ்திகர் மாளிகை The Edifice of the Atheist.

சென்ற நூற்றாண்டில் லாப்லெஸ் என்ற பெரியார் [Laplace] புகழ்பெற்ற வோர் பிரஞ்சுவான சால்திரி பிரபஞ்சவரலாற்றைத் தனது வெண்மேக சித்தாந்தத்தால் [Nebular Hypothesis] விளங்கச் செய்தார், அக்காலையில் பிரஞ்சுதேச சக்கரவர்த்தியும் பிரக்கியாதிபெற்ற போர்வீரனுமான நெப்போலியன் [Napolean] லாப்லெசை நோக்கி உமது வானத் திட்டத்தில் கடவுளுக்கு என் இடம் கொடுக்கவில்லை என்று வினவினர். அதற்கு அவர் என்னுடைய வானமாளிகைக்குக் கடவுள் அனுவசியம் என்றாராம். இன்று விஞ்ஞான பிரபஞ்சக் கட்டடத்தில் கடவுளுக்கு வேலையொன்றுமில்லை என்று நாஸ்திகன் உறுதியாகச்சொல்லஆதிக்கம் பெற்றுள்ளான்.

## பிரபஞ்ச வரலாறு.

அணுக்கள் சையோகத்தால் நட்சத்திரங்களும் சூர்யசந்திரரும் மற்றவான உலகங்களும் உண்டாகின்றன. இந்த மகத்தான காரியங்களில் ஒன்றிலாகிலும் கடவுளைக் காணோம்.

அதே அணுக்களும், அணுயக் கூட்டங்களும் கூடி நமது உலகமும் அதிலுள்ள மலை, கடல், வனந்திரங்களும் உண்டாயின. இந்தச் சமாத்தில் கடவுள் இருந்தாரில்லை.

நமது பூமி பக்குவமடைந்தகாலை சிறுகிருமிகளும் அவைகளிலிருந்து தாவரங்களும், பிராணிகளும் [Plants and Animals] உண்டாகி அவைகளிலிருந்து புல், பூண்டு விருட்சங்களும், புழு, பூச்சி, பட்சி, மிருகம், மனிதனுட்பட பரிணமித்துவந்தன. இந்தச் சமையத்திலும் கடவுளொருவர் இருந்து உயிர்கள் அடைந்த பரிணமவேலையை நடத்தியதாகத் தெரியவில்லை.

மனிதன் மிருகத்திலிருந்து பெறப்பட்டதும் நிலத்தில் நடந்து வளைந்த முதுகை நேர்நிமிர்த்திக்கொண்டு கைகால்களைக்கொண்டு சிற்சிலகருவிகளைச் செய்து தனது அக்கம்பக்க விரோதிகளாகிய மிருகங்களைக் கொன்று ஜனத்தொகை அதிகரிக்கவும் குகைகளை விட்டு குடிசைகளில் தங்கிவாழ ஆரம்பித்தான். தனது மிருகக் கூச்சலைப் பேச்சாகமாற்றிக்கொண்டு உச்சரிக்கும் சொற்களை உபயோகப்படுத்தவும் விவேகமும் அதிகரித்து உழுது பயிர்செய்யவும் கற்றுக்கொண்டு கிராமம், நாடு,நகரங்களில் வாழ ஆரம்பித்தான். இந்த மனிதப்பதலி அடையுங்காலத்திலும் கடவுள் அவனுக்கு உதவிப் புரிந்ததாகவும் காணோம்.

நாடுநகரங்கள் உண்டானதும் சமுகவாழ்க்கை வேண்டி நீதிநெறிகள் சட்டதிட்டங்களைச் செய்து கொண்டான் இந்த காலையிலும் கடவுள் இருந்து மனிதனுக்கு உதவிபுரிந்ததாகவும் சொல்லமுடியாது.

அனல் மிருகங்களைப்போல் இடியையும், மின்னலையும், மழையையும் புயலையும் கண்டு பயந்துவந்தவன் பேச தெரிந்தவுடன் இந்த பிரகிருத சம்பவங்களுக்கு கர்த்தாக்களைகற்பித்து, அவைகளுக்கு இந்திரன், மகேந்திரன், சிவன், விஷ்ணு, பிரமன், கடவுள் என்ற பெயரிட்டு அவைகளை வாழ்த்தி வணங்கிவந்தான். இத்தெய்வங்களுக்கு பயந்து அவைகளுக்கு காவுகொடுத்து பலிகொடுத்து, வந்தனை வழிபாடு செய்யமந்திரகாரர்களும், தந்திக்காரர்களும் ஏற்பட்டனர்கள். இவர்களையும் வணங்கி வந்தான். அறிவு வளரவளர அதாவது பேச்சு அதிகரிக்க அதிகரிக்க இந்த மந்திரக்காரர்களே குருமார்களாகவும், பாதிரிமார்களாகவும் பிராமணர்களாகவும் மௌலானுக்களாகவும் பரிணமித்தனர். கூடவே இந்த வேதியருக்கு அடிமைகளாலும், ஏழைகளாலும் மடங்கள், கோயில்கள், மண்டபங்கள் கட்டப்பட்டன.

"கடவுள்" என்ற கற்பிதச்சொல்லும் மனிதவளர்ச்சியுடன் வளர்ந்துவந்தது. ஒரு காலத்தில் மனிதனைப் போன்றே கடவுளுக்கும் கோபதாபத்தைச் சாட்டினன். அதற்கு தனது மோசமும் வஞ்சனையும் போகாமையும் நன்மை திண்மையும் ஒப்படைத்தான். விசாரணை மிகமிக யுக்தி பெருக பெருக முன் கற்பித்த முரட்டு தெய்வங்கள் சத்து சித்து ஆநந்தமாயின. அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமன அருள் பெருஞ்சோதியாகவும்,அதுவும்இதுவமல்லாத பரப்பிரம்மமாகவும் இன்னும் பலதத்துவஞானிகள் கட்டிப்புள்ளகற்பனைச்சொற்களும் பரிணமித்தன, இவ்விதமாகத்தான் மதக்கற்பனைகளும் வேதாந்த கற்பனைகளும் தோன்றின.

These are The solid achievements of science and it is upon this impregnable rork that the Atheist builds his edifice. இந்த அழிக்கக்கூடாத மெஞ்ஞான ஆராய்ச்சியால் உண்டான கற்பாங்கின்மேல் தான் நாஸ்திகன் தனது நாஸ்திக மாளிகையை கட்டுகின்றான். இந்த நாஸ்திகனுடைய மாளிகைக்குமுன் மதங்களின் கற்பனைகளும் தத்துவங்களின் கர்பனைகளும் எம்மாத்திரம்!

## ஆஸ்திக நாசம் (Decay of Theism)

சென்ற 300 வருஷங்களாக ஆஸ்திகன் கட்டிவந்த கற்பனைக்கட்டிடங்கள் ஆஸ்திகனால் ஒன்று வொன்றாக கைவிடப்பட்டு வருகின்றன. பிரபஞ்சத்தை சிருஷ்டிஎன்றான் ஆஸ்திகன் ஆனால் மெஞ்ஞானம் தனது வெண்மேக சித்தாந்தப்படி உலகம் பரிணமித்ததென்று காட்டியது. இந்த சித்தாந்தத்திற்கு முன் சிருஷ்டிக்க கைவிடப்பட்டது.

பூமி, கடவுளால் சிருஷ்டிக்கபட்ட என்றான். பூமி கர்பநூலோர் (Geologis) நமது பூமியும் அதிலுள்ள கடல் மலை வனந்திரங்களும் ஆறு, அருவிகளும் அணுக்கள் சையோகத்தால் உண்டானவை என்று எடுத்துக்காட்டவே இந்த சிருஷ்டிகதையும் ஆஸ்திகன் கைவிட நேரிட்டது.

தனது இந்த இரண்டு கற்பனைகளையும் ஆஸ்திகன் கைவிட நேரிடவும் உயிர்கள் உலகில் சிருஷ்டி இல்லாமல் எவ்வாறுவந்ததென்றான்?ஜீவராசிகள் சிருஷ்டியாகத்தான் இருக்குமென்றான். சார்லெஸ் டார்வின் இந்த ஆஸ்திகனுடைய ஜீவராசிகளின் சிருஷ்டிகளையும் கைவிடச்செய்தார் தனதுஜீவராசி உற்பவநூலில் [Origin of Speeies] எல்லா ஜீவராசிகளும் ஒன்றிலிருந்து

ஒன்று பெறப்பட்ட விதத்தை நிறுபகம் செய்தார். இதனைக்கண்டு ஜீவராசி சிருஷ்டி கதைமேல் வைத்திருந்தவற்றையும், ஆஸ்திகன் இழக்கலானன்.

ஆனல் மனிதன்மாத்திரம் கடவுளைப்போல் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டான் என்று ஆஸ்திகன் வாதித்து வந்தான். 1874-ம் வருஷத்தில் அதே டார்வின் பெரியார் மனிதன் குரங்கிலிருந்து பரிணமித்தவன் என்று அநேக விஷயங்கள்மூலமாக எடுத்துக்காட்டினர். கடந்த 60-வது வருஷமாக செய்து வந்து ஆராய்ச்சியால் Man is a developed Monkey அதாவது மனிதன் விருத்தி அடைந்த குறங்கென்று நிருபிக்கப்பட்டது. ஆஸ்திகன் இனி என்செய்வான்?

இன்னும் இரண்டு கற்பனைகளை ஆஸ்திகன் பிடித்துக்கொண்டிருக்கின்றான். அவையாவன, ஆதியில் உயிர் முளைத்தவிதம் ஒன்று, பிரஞை உண்டான விதம் மற்ெறான்று இவ்விரண்டையும் விஞ்ஞானம் ஆராய்ந்து வருகிறது. தெரிந்தவரை, உயிர் என்ற சொல்லும் ஆஸ்திகர் கற்பனை என்றே முடிவு பெறுவதற்குத் தடையில்லை. உயிர் என்பது ஓர் தனிப்பொருள் அல்ல. சிலவஸ்துக்களின் சேர்க்கையால் உண்டாகும் ஓர் குணமாகும். இதன் வஸ்துக்கள் இன்னவையென்றுதெரிந்தும் அந்த வஸ்துக்கள் எந்த விகிதப்படி சையோகிக்கின்றதென்பதுதான் தெரியவில்லை. இந்த விஷயத்திலும் ஆஸ்திகன் கொண்டுள்ள கற்பனைச் சொல்லாகிய "உயிர்" என்பதையும் கைவிடும்படி நேரிடுவது திண்ணம்.

மற்கடம் ஒரு கிளையைவிட்டு மற்றொர் கிலையை தாவிப்பிடிப்பது போல் ஆஸ்திகன் கடைசி கிளையாகியபிரஞ்ஞையை[Consciousess] தாவிபிடித்து நிற்கின்றான். அதையும் கைவிடவேண்டி நடத்தை விஞ்ஞானி [Behaviourist] ஆஸ்திகனுக்கு எச்சரிக்கை இடுகின்றான். பிரஞ்ஞை அதாவது Consciousnes என்பதும் ஓர் கற்பனையாகும். அதுவும் "கடவுள்" "ஆன்மா" "உயிர" போன்ற கற்பனைச் சொல்லே. பிரஞ்ஞை ஓர் தனிப்பொருளல்ல. பிரஞ்ஞை என்பது நாவும், உதடும், குரலும் மற்றும் சில தேக உருப்புகளின் அசைவின் [Movement] பயனே பிரஞ்ஞை என்று கூரப்படும். உறத்துப் பேசினல் அதுபேச்சு. மெதுவாக தனக்குத்தானே பேசினல் அதுதான் பிரஞ்ஞை, எண்ணம் நினைவுஎன்று கூறல் வேண்டுமென்கின்றான் நடத்தை விஞ்ஞானி. இதனை அறியாது பிரஞ்ஞையை ஏதோர்மறை பொருளாக்கும் என்று திகைப்பு கொண்டிருந்தீர். உண்மையாகவே மனமென்பதும் ஆன்மாவென்பதும் பிரஞ்ஞை என்பதும் கற்பனைச்சொற்கள். வாஸ்தவத்தில் உள்ளது தேக அவையவங்களின் சலனங்களே, கையின் சலனத்தை விளையாட்டு என்பதுபோலவும் காலின் சலனத்தை நடப்பது என்பதுபோலவும் தொண்டையின் சலனத்தை அதாவது மெதுவாக பேசுவதை விஞ்ஞானமென்று கற்பித்துள்ளோமென்று நடத்தை மெஞ்ஞானி ஆராய்ச்சியில் நிருபிக்க ஆரம்பித்தான்.

இவ்விதமாக மெஞ்ஞானம் [Science] ஆஸ்திக கோட்டைகளை கைப்பற்றிக் கொண்டுவருகிறது. விஞ்ஞானம் அடைந்துவரும் ஒவ்வொரு வெற்றியும் நாஸ்திகத்தை பலப்படுத்திக்கொண்டு வருகிறது. இந்தக் காட்சியைக் கண்டுவரும் அறிஞர்களுக்கு உலகம் விரைவில் ஆஸ்திகத்தை விட்டொழிக்கும் என்று தோன்றமல் இராது.

## இனி நாஸ்திகர் செய்யவேண்டிய வேலை.

நாஸ்திகர் இதுவரை அடைந்துள்ள வெற்றியோடு திருப்தித்கொண்டு இருக்கலாகாது. ஆஸ்திகத்தின் வலுவு இன்னும் பூரணமாக ஒழியவில்லை. அதற்கு மிக்க செல்வாக்குண்டு. செல்வம், அதிகாரம், நீதி, பத்திரிகை இவை யாவும் அதன் பக்கமிருந்து வருகின்றன- இதனேடு பெரும்பான்மை பாமர ஜனங்களும், அறியாமையால் ஆஸ்திகர் சார்பாக நிற்கின்றார்கள். பாமர மக்கள் மூடப்பழக்கங்களிலிருந்து மீண்டும் தெளிவு அடைவதைற்றி அதிகாரிகளுக்கு பயம் இருந்தே வருகின்றது. உலகம் எவ்வளவு மூடத்தனமாக இருந்து வருகின்றதோ அவ்வளவும் மதஸ்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அனுகூலம். அதனலேயே மதமும், ராஜாங்கமும் பிணைபட்டு ஒத்துழைக்கின்றன. ஆஸ்திகர் அரசாங்கத்திலும் மூட மக்கள் மனத்திலும் புகுந்து கொண்டு சென்ற பல்லாண்டாக உழைத்துப்பெறப்பட்ட ஞானத்தை அழிக்க உடன்படுவார்கள். Kingdom Clifford என்ற பெரியார ஆஸ்திகம், மூன்று பண்டைக்கால நாகரீகங்களை அழித்ததாகக் கூறுகின்றார். தற்கால நாகரீகத்தை ஆஸ்திகம் அழிக்க முயன்றலும் முயலும்!

ஆதலின் தற்கால உலகம் இருந்து வரும் நெருக்கடியை நாஸ்திகர் கவனித்தல் அவசியம். உணவுப்பொருள்கள் மனமாற அழிக்கப்பட்டு வருகின்றன. கொடுங்கோல் அரசுகள், தாண்டவம் புரிகின்றன ஹிட்லரிஸம் (Hitlerism) என்றும் பாஸிஸம் [Facism]என்றும் பிற்போக்கான கிளர்ச்சிகள், உலகமெங்கும் பொங்கி வழிகின்றன. இவ்விரண்டு இயக்கங்களும், மதங்களை ஆதரித்து, மக்களை இன்னமும் மூடவைராக்கியத்தில் கிடந்து உழல வைக்க ஆரம்பித்த இயக்கங்கள். இந்த இரண்டு இயக்கங்களால் பகுத்தறிவு கிளர்ச்சிகளால் அடக்கப்பட்டு மூட மதங்கள், பலப்பட்டு வருகின்றன. இந்த இயக்கங்களைப் போன்றது, நமது நாட்டு காந்தீய மென அறிக. இந்தியாவில் ஒழிந்து வரும் ஆஸ்திகத்தை தலை நிமிர்த்தி வரும் இயக்கம், காந்தீயமே. பக்தர்களுக்கும் மூட மக்களுக்கும் முதலாளி கூட்டத்தார்களுக்கும் ஹூகூம் Hukum கொடுத்து வரும் இயக்கம் இந்த காந்தீயமே ஒழிந்துவரும் ஜாதி வேற்றுமையை ஒழிய வொட்டாமல் குயுக்தி செய்து வருவதும் இந்த காந்தீயமே. தீண்டாமை ஒழிய வேண்டுமென்பதும், மதத்தை பலப்படுத்தும் ஓர் யூகை என அறிக The so called Removal of untouchability is a mere device that strengthens religion among the people ஜாதி மதமற்ற 6-கோடி மக்களுக்குதிரும்பவும், எல்லா ஜாதிக்கும் தாழ்ந்த பெயராகிய அரிஜனங்களென்று பெயரைக்கொடுத்து அவர்களை மதகுருக்கள் விலங்கில் அகப்பட்டு மடியச்செய்வதும் இந்த காந்தீயமே.

/நமது இந்தியாவில் இந்த 6-கோடி மக்கள் மற்ற எல்லா சமூக கூட்டத்தாரைவிட பொருளாதார நிலமையில் தாழ்ந்து இருப்பவர்கள் இவர்களுக்கு வேண்டியது கடவுளல்ல, மதமல்ல, மதக்கற்பனைகளல்ல, ஜாதியல்ல, சமையமல்ல: இவர்களுக்கு வேண்டியது முக்கியமாக வயற்றுக்குப் போதுமான உணவும், உடுக்க ஆடையும், தங்க வீடும், இருளைப்போக்க வெளிச்சமும், படிக்க கல்வியும் தேக சுகத்திற்கு வைத்திய சிகிச்சையும் வேண்டும் இவைகளைக் குறித்து காந்தியாராகிலும் அவரைச் சார்ந்த கோஷ்டியாராகிலும் ஒரு சொல்லேனும் பேசுகின்றார்களாவெனப் பாருகள் [Therefore this Whirlwind campaign for the removal of untouchability is the greatest hoax and a fraud played upon the 6 crores of our unfortunate countrymen in this unhappy land] அதாவது நமது துர்ப்பாக்கிய நாட்டில் வாழும் ஒரு கோடி தௌர்பாக்கிய மக்களை ஏமாத்த ஏற்பட்ட இந்த புயல்போல் அடித்துவரும் தீண்டாமையை ஒழிப்பதாக ஏற்பட்ட பிரசாரமென அறிக.

இந்த 6,கோடிமக்களை இந்துமதத்தில் சேர்த்துக்கொள்வதாம்! இந்த 6-கோடி மக்களும் புரோகிதர் காலிலும் கையிலும் அகப்பட்டு மிதிபட வேண்டியதாம். அவர்களுடைய சொற்ப சம்பாதனையிலிருந்து பிராமணனுக்கும், புரோகிதனுக்கும் பல தானமிடவேண்டுமாம்! ஏன்? பல தானமிடாத வீடு பாழாம்! [These are the implications of the ghandian movement for the removal of untouchability. This is only a common place for the perpetuation of priest craft Religion and God making,, among the most ignorant of our countrymen.] அதாவது தீண்டாமையைப் போக்க வேண்டுமென்ற காந்தியத்தின் உட்கருத்து இதுவே. நமது நாட்டு மூட ஜனங்களில் கடவுள் கற்பனையும், வேதியர் தந்திரமும், மதங்களும் நீடுழிவாழ ஏற்பட்ட தீண்டாமை ஒழித்தலென்ற தந்திரமாகும். தந்திரமென அறிக.

There is a further danger ahead. The Hindu Mahasabas, the Sanatanists, the Muslim Tablis and Tabiyats, are all going to capture the council constitution, for strengethening their religious bigotry These are the worst religious reactionaries in this unfortunate land. Beware Comrades, not to lose this opp urtunity of contesting and capturing every seat in every village panchayet, in every Taluk and District Board, and in every eouncil, local and imperial, and fearlessly expose the sham of religion, the sham of caste, the sham of religious tryranny and oppression in any form. Above all, defeat this ghandism out of this land,and enthrone in its place, Socialism and Atheism, as the rule of life of the 350 millions of our sisters and brothers in India.] அதாவது அனேக அபாயங்கள் இன்னும் உங்கள்முன் இருக்கின்றன. வரப்போகும் அரசியல் திட்டத்தில் பிற்போக்கு வைதீகக் கூட்டங்களாகிய மகாசபையாரும், சங்கத்தார்களும், சனதனதர்மிகளும், மகமதிய தப்லீசும் தப்லீக்கும்சட்டசபைகளைக் கைப்பற்றப்போகின்றனர்.நமதுதௌர்பாக்கிய நாட்டில் இவர்கள் பெரும் பிற்போக்குடையவர்கள். ஆதலின் தோழர்களே நீங்களும் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துகளையும், தாலூக்கா, டிஸ்டிரிக்ட் போடுகளையும் சட்டசபைகளையும் கைப்பற்றுங்கள். அங்கிருந்து மதங்களின் கொடுமைகளையும், ஜாதிதந்திரங்களையும், மத தந்திரங்களையும் எடுத்துக்காட்டுங்கள். முக்கியமாகக் காந்தியத்தை நமது நாட்டைவிட்டு அகற்றுங்கள்: அதன் இடத்தில் நமது சகோதரி சகோதர 35-கோடி மக்களுடைய வாழ்வின் திட்டமாக சமதர்மத்தையும், நாஸ்திகத்தையும் நிலை நிறுத்துங்கள்.

---

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கத்தை தடுக்கமுடியாது என்பதை யாவரும் விபரமாகவும், சந்தேகமற தெரிந்துகொள்ள மேற்சொன்ன உதாரணம் பொருத்தமாகவிருக்குமென்று நம்புகிறேன்.

மூன்றாவதாக, பசிக்கொடுமையினாலும், சகிக்கொணாத அடக்குமுறைகளாலும் தாங்கமுடியாமல் ஏற்படும் இயக்கம் எரிமலையைபோன்றதாகும். மேலே சொல்லப்பட்ட காரணங்களால் மிதமீறிய உணர்ச்சிமேற்பட்டு விடுகிறது. பூமியின் கீழுள்ள அக்னி குளத்தில் நீரூற்று பாய்ந்தவுடன் நீராவியானது அபார சக்தியுடன் பூமிக்கு கீழ் அதி வேகத்துடன் உருமிக்கொண்டிருக்கிற ஓர் தன்மையை உதாரணமாகக் கொள்ளலாம். அச்சமயம் அண்டமே அசையும். அதுபோலவே பசி, அடக்குமுறை முதலியவைகளினால் ஆவேசங்கொண்டு மக்கள் பதட்டமடைகிறார்கள். பின்பு எப்படி அந்த நீராவியானது அபார சக்தியுடன் பூமியைப்பிளந்துகொண்டு பாறை, கல், மண் அக்கினி குழம்போடு உருமிக்கொண்டு வேளியேறுகிறதோ அதுபோலவே வெகு காலமாக கட்டுண்டு துயரடைந்த மக்கள் அப்போதிருக்கும் கட்டு திட்டங்களை நீர் மூலமாக்கிக்கொண்டு வீறிட்டெழுகிறார்கள். இதனுடைய வேகத்தின் அளவு குறிப்பிட வேண்டுமானால் எவ்வளவு காலம் எவ்விதமான அடக்குமுறையால் கட்டுண்டிருந்தார்கள் என்பதைப்பார்த்தால் ஒருவாறு அறியலாம் அதாவது மக்களுக்கு செய்யப்பட்ட கொடுமைக்கு தகுந்தாற்போல் இருக்கும் என்பதாகும்

இதுவரை இயக்கங்களை விளக்கிக் காட்ட இயற்கையிலிருந்து சில உதாரணங்களை எடுத்துக் காட்டினோம். இப்பொழுது பல இயக்கங்களை எடுத்து ஆராய்வோம்.

ரோமபுரியில் ஒரு காலத்தில் (Plebians) தொழிலாளி (Patricians) முதலாளி இயக்கம் தோன்றிற்று அப்பொழுதுள்ள தொழிலாளிகள் தங்களுக்கு அரசாங்க சபையில் பிரதிநித்துவம் வேண்டும். என்ற அவ்வித கிளர்ச்சி செய்தார்கள். (Patricians) ஆட்சிபுரியும் வர்க்கத்தினர் எனப்படுவோர் எதிர்ப்புகளுக்கிடையே தொழிலாளர் வெற்றிக்கொடியை நாட்டினர். (Martin Luther) மார்ட்டின் லூதர் என்பவர் கிருஸ்து மதத்திற்குள்ளேயே சில சடங்குப் புரட்சி செய்து வெற்றி பெற்றார். இங்கிலாந்தில் (King John) ஜான் அரசன் காலத்தில் குடிமக்கள் புரட்சி செய்து அரசனை பணியவைத்தனர். (France) பிரான்சு தேசத்தில் (French revolution) பிரன்சுப்புரட்சி என்று பெரும் புரட்சி ஏற்பட்டு முதலாளிகளிடமிருந்து பலாத்காரமாக அரசியல் உரிமைபெற்று யாவரும் சமம் என்ற உண்மையை நிலை நாட்டினர். ஆனால் அக்காலத்தில் பொருளாதாரத்துறையில் சமத்துவம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம்தோன்றாதுபோய்விட்டது. அமெரிக்கர்கள், தங்களுடைய தாய்நாடாகிய பிரிட்டிஷாருடன் போராடித் தங்களுடைய சுயேச்சையைப் பெற்றனர். மேலே சொல்லப்பட்ட இயக்கங்கள் யாவும் கொடுமை இழைக்கப்பட்டவர்களிடமிருந்து கொடுமையில் வருத்தமுற்றவர்கள் புரட்சிசெய்து வெற்றிபெற்றனர். ஆனால் இவர்கள் யாவரும் சமூகத்திலும், அரசியலிலும் சமத்துவம் பெறப் போராடினர். ரஷியப் புரட்சி தற்பொழுது நடந்தது யாவருக்கும் தெரியும். மூடப் பழக்கத்திலும், கொடுங்கோன்மையினாலும் துன்பப்பட்ட மக்கள் புரட்சிசெய்து பொருளாதாரத் துறையிலும் சமத்துவம் வேண்டும், அதுதான் உண்மையான சமத்துவம் என்ற முடிவுடன் சோவியத் அரசாங்கம் நிறுவப்பட்டு ஒரு சர்வாதிகாரியின் கீழ் ஆளப்பட்டு வருகிறது.

நம் இந்தியாவில் தற்காலம் நடந்துகொண்டு வரும் சில இயக்கங்களைப்பற்றி சுருக்கி எழுதுவோம். நம் தென்னிந்தியாவில் பார்ப்பனர் கொடுமையால் அதாவது சமூகம், உத்தியோகம் முதலியவைகளில் பார்ப்பனர்களே இருந்துகொண்டு பார்ப்பனரல்லாதாரை மேலெழவொட்டாமல் தடுத்துவந்தனர். முதலில் பார்ப்பனரல்லாத பணக்காரர்கள் ஒன்றுசேர்ந்து பார்ப்பனரிடமிருந்து சில பதவிகளை கைப்பற்றுவதற்காகக் கிளர்ச்சிசெய்து அதை அடைந்தனர். பிறகு அவர்கள் பார்ப்பனர் சமூகத்தில் குருக்களாகவும், புரோகிதராகவுமிருந்துகொண்டு செய்யும் அட்டூழியங்களையொழிக்க முன்வராமல். மந்திரிபதவிகளோடு திருப்தியடைந்துவிட்டார்கள். அத்துடன் அவ்வியக்கமும் மரணப் படுக்கையை அடைந்துவிட்டது. ஆனால் பார்ப்பனரல்லாத பணக்காரர்களும் ஜமீன்தாரர்களும். மந்திரி பதவிகள் அடைவது மக்களுடையநோக்கமல்ல, உயர்ந்த ஜாதிஎன்பவர்கள்கொடுமையொழியவேண்டும். பார்ப்பனராகிலும் சரி சைவராகிலும் சரி அவர்களுடைய கொடுமையை எதிர்க்கவேணடும். சமூகத்தில் சமத்துவம் வேண்டும். தீண்டாமை அறவே ஒழிய வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம் தோன்ற வேண்டிய அவசியம் யாதெனில் மக்கள் சமயம், சமூகம், ஜாதி சடங்கு முதலிய கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற உணர்ச்சியேயாகும். மக்களுடைய இவ்வுணர்ச்சியை தாராளமாய்க்கொண்டு செலுத்தும்படியான இயக்கம் வேறு இல்லாததினால் ஒரு புது இயக்கம் தோன்றித் தீரவேண்டியதாயிற்று. பாரப்பனரல்லாத இயக்கமாவது, காங்கிரஸ் இயக்கமானது இவ்வுணர்ச்சியைத் தன்னோடு சேர்த்து இயங்கியிருந்தால் சுயமரியாதை இயக்கமும் தோன்றியிராது என்பதை தைரியமாகச் சொல்லுவேன். சுயமரியாதை நோக்கம் விடுதலை அவ்விரு இயக்கங்களின் நோக்கத்திலில்லை. பார்ப்பனரல்லாத இயக்கம் பார்ப்பானைத் தள்ளிவிட்டு பணக்காரனையும் ஜமீன்தாரனை அவ்விடத்தில் வைக்கவேண்டுமென்கிறது. காங்கிரஸ் வெள்ளைப் பணக்காரனிடமிருந்து பணத்தைப் பிடுங்கி கருப்புப் பணக்காரனிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதோடு அதனுடைய சர்வாதிகாரி ஏழைகள் கைராட்டினம் சுற்றவேண்டும், உழவு தொழில் செய்துகொண்டே இருக்கவேண்டுமே ஒழிய பம்பாயிலுள்ள பணக்காரர் மாதிரியாக வேண்டுமென்று நினைக்கக் கூடாது. உங்கள் பெட்டிகளில் சில வெள்ளிப் பணங்கள் இருந்தால் போதுமென்று உபதேசிக்கிறார். மற்றும் கடவுள் தன்னுடன் பேசுவது போல நடிப்பதும் பகவத் கீதையைப் புகழ்வதும், ஆலாத்தி எடுப்பது முதலிய மூடப் பழக்க வழக்கங்களாகிய சடங்குகளை ஏற்றுக்கொள்ளுவதுமாகச் செய்வதால்; மக்கள் சமத்துவத்தைக் குலைத்த கடவுள், மதம், குருக்கள் சடங்குகள் என்பவைகளை ஒழிக்க வேண்டுமென்ற சுயமரியாதை இயக்கம், தனித்து இயங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

சுயமரியாதை இயக்கம் கடவுளைப் பற்றித் துவேஷங்கொள்ளவுமில்லை, அதுபற்றி சிந்திக்கவுமில்லை. சயமரியாதைக்காரன், "ஏன் ஒருவன் பணக்காரனாய் சுகப்படுவது மற்றொருவர் ஏன் ஏழையாய் கஷ்டப்படுவது, ஏன் ஒருவன் பல்லக்கில்சவாரி செய்வதும், மற்ற ஏழைகள் அவனைத்தூக்கிக்கொண்டு சுமப்பதும்" என்றால் இந்தக்கொடுமை உலகத்தில் ஏன் என்று கேட்டால், உடனே 'கடவுள் செயல்' என்று விடை கூறுகிறார்கள். உலகத்தில் அயோக்கியத்தனம் ஏன் என்றால் அது "கடவுள் செயல்" நீ பேசாதே என்கிறான். பணக்காரனும், புரோகிதனும், ஜமீன்தாரனும், முதலாளியும், தாங்கள் செய்யும் கொடுமைகளை மறைப்பதற்கு மதங்களையும், தங்கள் மறைவிடமாக கடவுளிருப்பையும் உபயோகிப்பதால், அவர்கள் சொல்லும் கடவுளை ஒழிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முடிவில் ஒன்று மாத்திரம் கூறுகிறேன். அதாவது பணக்காரன், ஜமீன்தாரன், அரசன் முதலிய ஆதிக்கக்காரர்கள் தங்களுடைய நன்மைக்காக ஒரு கடவுள் என்பதை கருவியாக உபயோகிக்கிறார்கள் என்பதற்காக அதைக்கண்டிக்கிறோமே ஒழிய, கடவுள் சமதர்மத்தையும், பொதுவுடமைக் கொள்கைகளையும், ஒப்புக்கொண்டு கொடுமை செய்வோராகிய பணக்காரர்களையும், ஜமீன்தாரர்களையும்புரோகிதர்களையும் ஒழிக்க முன்வருவாராகில், அப்பேர்ப்பட்ட கடவுளை நமது சுயமரியாதை இயக்கத்திற்கு சர்வாதிகாரியாய் நியமித்து விடும்படி, நான் பிரரேபிக்க தயாராயிருக்கிறேன். இதை யாரும் ஆக்ஷேபிக்கமாட்டார்களென்றும் நம்புகிறேன்.

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பதை நினைத்து புழுங்குகிறான்.

ஆனால் கிராம தலைவனை எதிர்த்து சண்டை செய்தால் க்ஷேமம் கிடையாது. பணக்காரன் திட்டு பொறுக்கவேண்டும். எதிர்வீட்டுபுரோகிதன் சபிப்பான். கந்துக்கடைக்காரனும் கள்ளுக்கடைக்காரனும் போக்கிரிகளை உபயோகித்து புடைக்கச் சொன்னாலும் சொல்லுவான். ஊர் ஜனங்களும நம்மை, அவர்களை விடுவிக்க வந்த வீரர்களென்று நினைத்து எதிர்கொண்டழைத்து மாலைபோட மாட்டார்கள். தொன்று தொட்டு வந்த சங்கிலிகளை தன்னை அழகுபடுத்த போடப்பட்ட காப்புகளென்றுதான் மூட ஜனங்கள் நினைக்கும்

ஆகையால் கிராம சீர்திருத்தக்காரர்கள் அஞ்சா நெஞ்சமும், ஒழுக்கமும் உள்ள சுயநலத்தை கருதாத பரம புருஷர்களாயிருக்க வேண்டும் நம் தேசம் சீக்கிரம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அப்பேர்ப்பட்ட வாலிபர்கள் தேவை. அவர்கள் முன் வருவார்களா?

---

## சென்னையில் காந்திக்கு கருப்புக்கொடி.

22-12-33 ந்தேதி காலை தோழர் காந்தி கினிமாசென்ட்ரல் படக்காக்ஷி சாலைக்கு விஜயம் செய்தார். அவ்வமயம் சுயமரியாதை இளைஞர் மன்றத்தைச்சார்ந்த தோழர் என். பி. பத்மநாபன் அவர்கள் தலைமையில் சுமார் 50 தோழர்கள் கருப்புக்கொடிகளை ஏந்தி "காந்தி திரும்பிப்போ" வர்ணாச்சிரம தர்மத்தை வளர்க்கவா பணம்" என்று கோஷித்து பகிஷ்கரித்தனர். பிறகு சுமார் 9½ மணிக்கு தோழர் காந்தி போகும்போது ஆங்கிலோ இந்தியர்களும் தீண்டாத கிறிஸ்தவர்களும் சேர்ந்து பகிஷ்கரித்தனர். மாலை மூலகொத்தளம் சமதர்ம சங்கத்து தோழர்களும் பகிஷ்கரித்தனர்.

---

## மத மறுப்புப் பிரசாரம்.

மதுரை சுயமரியாதைச சங்க ஆதரவில் 24—12—33 மாலை 7. மணிக்கு மதுரை வடக்கு லையன் தெரு ஆதிதிராவிடசேரியில் தோழர் எம். பி. சாமிக்கண்ணு அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. தோழர்களான எம். அய்யாசாமி, கே. ஐ. சுக்குணி, ஏ. வேணுகோபால், பி. முத்திருளாண்டி முதலியவர்கள் காந்தியின் மதப் பிரசாரத்தைக் கண்டித்துப் பேசினார்கள். ஜாதியும், மதமும் தங்களுக்குத் தேவையில்லையென கையெழுத்திட்டுக் கொடுத்ததுடன் காந்தியின் வரவைத்தாங்கள் பகிஷ்கரிப்பாயும் வாக்களித்தார்கள்.

# உண்மைசமத்துவம்எது?

## சமதர்மமில்லையேல் சமத்வமில்லை.

[திண்டுக்கல் தோழர் கா. அப்துல்ஹமீது]

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மிக அத்யாவசியமாய்வேண்டுவது சமத்துவம்அதில்லையானால் சகோதரத்துவத்தையோச தந்திரத்தையோ எய்திவிடல்முடியாது இப்பொழுதுஎங்கு பார்த்தாலும் சமத்வ மென்ற பேச்சே பேசப்படுகிறது. எத்தனையோ மதங்கள் சமத்துவத்தால் ஐக்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றன.உதாரணமாக நம் முஸ்லீம்களை எடுத்துக் கொள்வோமானால் எல்லா விஷயங்களிலும் சமத்வமாகவே வாழுகின்றனர். அப்படி சமத்வமாய் வாழும் முஸ்லீம் சமூகத்திலும் பசிப்பிணியால் வருந்துவோா கோடாகோடி உளர். மனிதனுக்கு மனிதன் சமத்வமாய் வாழ்ந்து வந்தால் அதை ஒரு சமத்வமாய்ச் செல்ல முடியாது. ஒருவன் அறுசுவையுடன் சாப்பிட்டுவிட்டு உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு பள்ளி வாயலில் கடவுளை வனங்குகிறான். இன்னொருவன் உண்பதற்கு உணவில்லாமலும் உடுப்பதற்கு உடை இல்லாமலும் கடவுளை வணங்குகிறான். உணவுள்ள மனிதனும் உணவில்லாத மனிதனும் கடவுளை வணங்கும் விஷயத்தில் சமத்வமாகவே காணப்படுகின்றனர். ஆனால் இருவரையும் சமத்வ வாதிகளென்று எப்படிச் சொல்ல முடியும். மனிதனுக்கு அன்றாடம் தேவைப்படுவது உண்பதற்கு உணவும் உடுப்பதற்கு ஆடையுமே. இதைத் தவிர வேறு எந்த விஷயங்களில் எவ்வளவு சமத்வ மேற்பட்டாலும் உண்மையான சமத்வமாகா.உண்மையான சமத்வ மேற்பட வேண்டுமானால் ஏழை பணக்காரத் தன்மை ஒழியவேண்டும். பணக்காரத் தன்மை ஒழியாமல் உண்மையான சமத்வத்தை அடைய முடியாதென்பது திண்ணம். ஏழை பணக்காரத் தன்மையை ஒழிக்காமல் சமதவம் சமத்வமென்று வாயில் பேசிகொண்டிருப்பவர்களெல்லாம் கடலில் அலை ஓய்ந்த பின் ஸ்நானம் செய்பவரையே ஒப்பர் ஏழையும் பணக்காரனும் அப்படியே இருக்கவேண்டுமென்பதற்கு எல்லா மதஸ்தாரலும் போலிக் காரணமொன்று கூறப்படுகிறது. அது தான் தர்மமென்னும் ஏழை வரியாயாகும். தர்மமென்பது பணக்காரர்களால் ஏழைகளை வஞ்சிக்க ஏற்பட்ட ஒரு பெரிய சூட்சியாகும். ஏழைகளை பல விதத்திலும் கொள்ளை அடித்த முதலாளி என்பவன் தனது சொத்தில் ஒரு சிறிய பாகத்தை ஏழைகளுக்குத் தர்மம் செய்துவிடுகிறான். கஷ்டப்பட்டுழைக்கும் கூலிக்காரனிடம் கொள்ளை அடித்து கஷ்டப்படாத சில சில சோம்பேறி ஏழைகளுக்குத் தர்மம் செய்வது தான் கொடைவள்ளலென்று பெயர் தாங்கித்திரியும் சிலமுதலாளிகளின் வழக்கம். தர்மமென்பதை மதத்தில் புகுத்தியதற்கு முக்கிய காரணம் ஏழையும் பணக்காரனும் அப்படியே இருக்க வேண்டுமென்பதற்கு ஒரு தூண்டு கோலாகும் பொருளாதாரச் சமத்வமாகிய பொது உடமையில் தர்மம் வாங்க வேண்டிய நியாயமோ கொடுக்கவேண்டிய நியாயமே ஏற்பட வழி இல்லை பொதுஉடமை என்னும் பெயரைக் கேட்டவுடன் பொல்லாத போல்ஷ்விஷமென்று சிலர் கூச்சலிடுகிறார்கள். சிலர் பொதுவுடமை என்பதற்கு தத்தமக்குத் தோன்றிவாறெல்லாம் வியாக்யானம் புரிகின்றனர். இனல் எல்லாப்பத்திரிக்கைகளும் ரஷ்யாவின் முன்னேற்றத்தேப்பற்றி புகழ்ந்தே எழுதுகின்றன. ஒவ்வொரு அறிஞரும் புகழுகின்றனர். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கர்த்தர் கீழ்கண்டவாறு கூறுகிறதாக பைபிளில் ஒரு வாக்கியம் காணப்படுகிறது "நீங்களிருவரும் கர்த்தர் படைத்த பூமியைச்சொந்த மாக்கிக் கொள்ளாதீர்கள்" என்பது அவ்வாக்கியம் இந்தக் கர்த்தர் வாக்குப்படி எந்தக் கிறிஸ்தவனாவது நடக்கின்றானா? அல்லது நடக்க முயற்சிக்கின்றானா இல்லவே இல்லை. பொது உடமையைப்பற்றி முக்கியமாக பயப்படுகிறவர் முதலாளிக்கூட்டமும் புரோகிதக்கூட்டமுமேயாகும். முதலாளிகளோ தொழிலாளிகளை வஞ்சித்து அவர்களுடைய முழு உழைப்பையும் அப்படியே அபகரித்து விடுகின்றனர். புரோகிதர்களோ மதத்தின் பேராலும் கடவுள் பெயராலும் தொழிலாளிகளை வஞ்சிக்கின்றனர். இந்த இரண்டு வஞ்சகக் கூட்டத்திற்கும் மத்தியில் நின்று தத்தளிக்கும் தொழிலாளியின் நிலைமையைப்பற்றி கவனிக்காமல், மதத்திற்கும் கடவுளுக்கும் முதலாளிக்கும் புரோகிதர்களுக்கும் பாது காப்புக்கும் ராமராஜ்யத்திற்கு பாடுபடும் மகாத்மாக்களைப்பற்றி என்ன சொல்வது இத்தகைய மகாத்மாக்கள் விரும்பும் ராமராஜ்யமாகிய சுயராஜ்யமானது முதலாளிகளின் ராஜ்யமாகவே திகழுமென்பதற்கு பல அறிகுறிகள் நடந்து விட்டன, முதலாளிகளின் ராஜ்யம் வந்து மென் ராமர்போயினுமென் இத்தகைய சுயராஜ்யத்தில் சமத்துவமென்னும் சாயலைக்கூடக்காணமுடியுயா? எனவே சமத்துவமென்பதை நடைவுடை பாவனையாலோ, எல்லோரும் கோவிலுக்குள் நுழைந்து விடுவதாலோ பள்ளி வாயலில் அரசனும் ஆண்டியும் நின்று தொழுவதாலோ அடைந்து விட முடியாது. பொது உடமை ஒன்றே உண்மையான சமத்துவத்தை அளிக்கவல்லது. ஏனையவை எல்லாம் போலிச்சமத்துவமென அறிக. முகமது நபியும் "தனக்குத் தேவைக்கு மிஞ்சிய சொத்தை எவன் வைத்திருக்கிறானோ அவன் நரகத்தின் தீயை தன் மடியில் வைத்திருக்கிறான்" என்றறைந்துள்ளார்கள். ஏழை பணக்காரத்தன்மையை ஒழிப்பதற்கே அரும்பாடு பட்டார்கள். இதற்காகவே ஊரை விட்டும் பணக்காரர்களால் துரத்தி யடிக்கப் பட்டார்களென்பது சரித்திரச்சான்றாகும். இப்படியே ஒவ்வொரு அறிஞரின் சரித்திர ஏடுகளைத் துருவி ஆராய்வோமாயின் சமதர்மமே ஆண்டு மல்கிக் கிடக்கக்காணலாம். சூரியன் சந்திரன் காற்றுமுதலியவைகளை மக்கள் எப்படி பொது உடமையாய்ப்பாவிக்கிறார்களோ அந்த விதமே நாம் வாழும் இந்த பூமியையும் என் செய்து கொள்ளக்கூடாது. ஒருவனுக்கு அதிகமான சொத்தும் இன்னொருவனுக்குச்சொத்தே இல்லாமலிருப்பதாலல்லவா ஒருவனுடைய சொத்தை இன்னொருவன் அபகரிப்பதற்கு கொலையும் கொள்ளையும் செய்து விடுகிறான். அப்படிச்செய்தவனை அரசாங்கமென்னும் பெரிய முதலாளி யானவன் அவனைத்தண்டித்து சின்ன முதலாளியிடம் அபகரித்த சொத்தை அவனிடமே கொடுத்து விடுகிறான். இது என்ன நீதி. நெற்றிவியர்வை நிலத்தில் விழப்பாடுபடும் தொழிலாளி கஷ்டப்பட்ட காசல்லவா முதலாளியின் இரும்பு பெட்டியில் நோகாமல் குந்தியிருக்கிறது. |மோட்டார் செய்பவன் தொழிலாளி, அந்த மோட்டாரின் லாபத்தை அனுபவிப்பவனும் அதில் ஏறிச்சவாரி செய்பவனும் முதலாளி. பலவகையிலும் பணத்தைச்சேகரஞ் செய்து ஆனந்தபோக மனுபவிக்கும் முதலாளி என்னும் சோம்பேறிக் கூட்டம் என்று அழிந்து ஒழியுமோ அதுவே சமத்வமாகும் இதை விடுத்து அதிலிருக்கிறது சமத்வம் இதிலிருக்கிறது. சமத்வமென்று போலிக்காரணங்காட்டுவது அறியாமையும் நயவஞ்சகமுமாகும். | சூரியன் சந்திரன் காற்று இவைகளைப் பொது உடமையாய்ப் பாவித்து வந்ததில் நாளது வரை ஏதேனுங் கொலையோ கொள்ளையோ நடந்ததாக நாம் கேள்விப்பட்டோமில்லை. அந்த விதமே நாம் வாழும் இந்த பூமியையும் பொது உடமை ஆக்கி விட்டால் கொலையும் கொள்ளையும் நேருவதற்கு வழி இல்லாமலே போய்விடும். | இதை ஒவ்வொரு அறிஞரும் சிந்திக்க வேண்டுகிறோம். ஆயிரம் பேரை வயிற்றிலடித்து சேகரஞ் செய்த சொத்தை ஒரு சோம்பேறியாகிய முதலாளி என்பவன் அனுபவித்து அந்தச்சொத்தை தனது சந்ததிகளுக்கு எழுதிவைத்து விடுகிறான். தனது தந்தை ஏழைகளை வஞ்சித்து அப்படி சொத்தைச்சேர்த்ததால் அந்த விதமே மகனும் செய்யஆரம்பித்து விடுகிறான். இப்படி வாழையடி வாழையாகவே சொத்தைச் சேர்ப்பதும் எழுதி வைப்பதுமே முதலாளிகளின் வழக்கமாய்ப்போய்விட்டது. ஒருவனுடைய சொத்தை இன்னொருவனுக்கு எழுதிவைப்பது முதலாளிகளென்னும் சோம்பேரிக் கூட்டம் வளர்வதற்கொரு அறிகுறியாகும் சொத்துகளை எழுதிவைக்கும் ஆபாசங்களெல்லாம் சமதர்மத்திலில்லை, ஒருவனுக்குணவில்லை எனில் எல்லோருக்குமே உணவில்லை. ஒருவனுக்குண்டெனில் எல்லோருக்கு முண்டு. இதுதான் சமதர்மம். இதுவே உண்மைச் சமத்வம்.



தோழர் ஆர்.எம். வெங்கடாசலம்.

சிவகெங்கையில் நடைபெற்ற ராமநாதபுரம் ஜில்லா 3-வது சு. ம. வாலிபர் மகாநாட்டின் வரவேற்புத் தலைவர்.

### மரணம்

தாழ்த்தப்பட்டார் தொண்டர் படையிற் அமைப்பாளர்களில் ஒருவராகிய தோழர் எஸ். பி. சி. பால குருசிவம் அவர்கள் அன்னையார் திருமதி நாகம்மாள் அவர்கள் 25-12-35 திங்கள் காலை 5மணிக்கு மரணமடைந்து விட்டார்கள். இச்சேதியை ஆதி திராவிட வாலிபர்கள் அறிந்து மரணத்தின் துண்டுபிரசுரங்களை சென்னைமுழுவதும் வழங்கப்பட்டது. மாலை 5மணிக்குபிரேதத்தைஅடக்கம் செய்ய பாயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு பல பிரபலஸ்தர்கள் இருந்தார்கள். அங்கு அம்மையாரின் குணங்களைப்பற்றிப் பேசப்பட்டது. (ஒரு நிருபர்)

# "முதலாளித்வமும் தொழிலாளித்வமும்"

## ஓர் தொழிலாளியின் கூக்குரல்.

(சென்னை தோழர் கே. எஸ். நாதன்)

"அப்பா! நான் என்செய்வேன். நாளைக் காலை மூன்று மணிக்கெல்லாம் பண்ணையார் வீட்டிற்கு வரச்சொன்னார். இன்று காலையிலிருந்து 20 ஏக்கர் நெல் அறுவடைசெய்து களத்தில் சேர்த்து நெல் வேறு-வைக்கோல் வேறு செய்து, நெல்லை அண்டை வீட்டுக்கு அனுப்பப்பட்டபாடு யாருக்குத்தான் தெரியும். என்மனைவி கருப்பாயி பூர்ண கர்ப்பமாகி இன்றைக்கோ-நாளைக்கோ என்று இருக்கிறாள். இந்நிலைமையில் எஜமானருக்கு இரக்கமென்பது இல்லாமல் "இன்று ஆட்கள் சரியாக வேலை செய்யவில்லை கூலிக்கு என்னடா முழுகிப் போய்விட்டது என்று சொல்லிவிட்டாரே. இன்றிரவு நாங்கள் பசிக்கு என்ன செய்வோம். என்று என்னை பிச்சிடு வார்களே" என்று கருப்பன் என்கிற பண்ணையாள் தனக்குத்தானே பிரலாபித்துக்கொண்டு சேரிக்குப்போய்க்கொண்டிருக்கிறான். அன்றெல்லாம் கடும் வெய்யலில் அவனுடன் வந்து கஷ்டப்பட்டு வேலை செய்த ஆட்கள் ஐயோ! என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கால் கை இரத்தம் சோர, செய்வது இன்னதென்றறியாது வாடுகின்றனர். சாயங்காலம் மணியோ ஏழு இருக்கும். கருப்பன்சேரிக்குச் சென்று தன் குடிசைக்குள் நுழைகிறான்.

அவன் குடிசையை வர்ணிக்க ஷேக்ஸ்பியரல்ல—கம்பரல்ல-டென்னிஸனல்ல-அல்லது காளிதாஸரல்ல மற்று எவராலும் முடியாது என்பது திண்ணம்- பகலில் சூரியனின் கொடிய கிரணங்கள் அதில் காட்சி அளித்துக் கொண்டே இருக்கும். இரவில் சந்திரனும் ஆகாயமும் தான் அதின் கூரை. அந்தோ! என்செய்வான் அவன் தாயும், தந்தையும் இறந்ததற்கு சாஸ்திர சடங்கெனக் கூறி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் ஒரு கூட்டத்தாரின் மொழிகளுக்கு செவி கொடுத்து நடத்தின சடங்கிற்காக எஜமானனிடம் வாங்கிய கடனுக்கு எஜமானனுக்கு மீளமுடியாத அடிமையாக வேலை செய்து வருகின்றான். காலை நான்கு மணிக்கு எழுந்து மாலை ஏழு, எட்டுமணி வரையில் எஜமானனிடம் மாடாக உழைக்க வேண்டும். எஜமானனுக்கு இஷ்டப்பட்டு தைமாதம் ஒரு முறையோ அல்லது அறுவடை காலத்திலோ கொடுக்கும் தானியம்தான் அவன் ஆஸ்தி. ஐயா! வயிற்றுக்குப் போதாது. கட்டத் துணியில்லை. என்மனைவி வேலை செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறாள் என்றால் "உன் தாய் தந்தையர் கருமாதிச் செலவிற்காக கொடுத்த பணத்தை யார் கொடுப்பது" என கடுஞ்சினத்துடன் பாய்கிறார் இந்நிலைமையில் வயிற்றிற்கு சரியான உணவில்லை என்று நினைப்பானா? கட்டத்துணியில்லை எனக் கதறுவானா? அல்லது பிள்ளைப் பேற்றை தக்க மருத்துவ முறையில் கவனிக்க வேண்டுமெனச் சிந்திப்பானா? தர்சமயம் மனைவி கருப்பாயி கர்ப்பவேதனையில் கஷ்டப்படும்போது, நான பக்கத்திலிருந்து கஞ்சி காச்சிக் கொடுப்பதிற்கில்லையே என துக்கிப்பானா?

இந்நிலையில் குடிசைக்குள் நுழைந்தான். தன் மனைவி கருப்பாயியைக் கூப்பிட்டான். பதில்இல்லை மீண்டும் மீண்டும்கூப்பிடுகிறான். சப்தமேயில்லை திடுக்கிடுகிறான். ஐயோ!என அலறுகிறான் பத்து மாதம் நிறைந்த கர்ப்பவதியாயிற்றே! அட! அயோக்கிய முனியாண்டியே! காளியாயி! மஹாமாயி! காட்டேரி முனிச்சுரனே! உனக்குக் கண் இல்லையா? எனக் கதறும்சமயத்தில், கிழக்கே தன் குடிசை வேலியின் ஓரத்தில் கீச்சு! கீச்சு என்ற சப்தம் அவன் காதில் விழுகிறது. சட்டென்று அப் பக்கம் செல்கிறான். கண்களில் நீர்ததும்பி ஆறாய்ப்பெருகுகின்றது. நிற்க முடியவில்லை பேசவோ வாய்வரவில்லை அவனுடைய ஹிருதயம் படபட வெனத்துடிக்கின்றது. ஏன்? எதைப் பார்த்தான்? கருப்பாயி குழந்தை ஈன்று பிரக்ஞையற்றுத் துணியின்றி ஓர் மூலையில் பிணம்போல் கிடக்கின்றாள். குழந்தையோ வீர் வீர் என அழுகின்றது. அருகில் செல்லுகிறான் கருப்பாயி கருப்பாயி என அழைக்கின்றான். சப்தமில்லை மீண்டும் அலைகின்றான்; இதற்குள் அருகிலுள்ள குடிசையைச் சேர்ந்தவர்கள் ஓடிவந்து கும்பலாக சேர்ந்து விட்டனர். அச்சேரியிலுள்ள பழுத்த கிழவன் கருப்பாயின் நாடியைப் பார்த்து விட்டு பிரக்ஞையற்றுக் கிடக்கின்றாள் என்பதை அறிந்துகொள்ளுகிறான். கருப்பன் என் செய்வான்? கருப்பாயிக்கு ஏதாவது ஆகாரம் கொடுக்கலாம் என்றாலோ குடிசையிலுள்ள பானையில் பச்சைத் தண்ணீரைத் தவிர வேறொன்றுமில்லை குழந்தை வேறு கத்துகின்றது. ஏதோ அயலார் உதவியை நாடி அன்று பொழுதைப் போக்குகின்றான். மறுநாள் காலை 3 மணிக்கு எஜமானன் வரவேண்டுமெனச் சொன்னபடி அவனால் போக முடியவில்லை. பொழுது விடிந்தது கருப்பாயியை மிக ஆவலுடன் காண்கிறான், அவளுக்கு ஜன்னி பிறந்திருக்கிறது. மனம் பதைக்கின்றது. என் செய்வான். கையில் ஒரு காசேனும் கிடையாது. சேரியிலுள்ள மற்றவர்கள் தங்கள் வேலைக்குப் போய் விட்டனர். இவனுக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை. எஜமானனிடத்தில்போய்க்கூறி அவர் உதவியைக் கொண்டு மருத்துவனையாவது அழைத்து வரலாமென நினைக்கிறான். பிறந்த குழந்தையையும்—இறக்கக்கிடக்கும் மனைவியையும் விட்டுப்பிரிய எப்படி மனம் துணியும். நான்கு திக்குகளையும் நோக்குகின்றான். ஒன்றும் விளங்கவில்லை! ஏழையின் பரிதாபத்தைக்காண எவருமில்லையே எனத் தேற்றிக்கொள்ளுகிறான். மறுமுறையும் தன் அருமை மனைவி கருப்பாயியைக்காண்கின்றான். குழந்தை கீச்கீச் என அழுவதைக் கேட்கிறான். என்ன செய்வான்! "கருப்பாயி! நான் அண்டை வீட்டுக்குச் சென்று கொஞ்சம் நொய் அரிசியையாவது வாங்கிக்கொண்டு வருகிறேன். நீ கவலைப்படாமல் குழந்தையைப் பார்த்துக்கொள்" என்கிறான். அவளும் தலையை அசைத்து சைய்கை காட்டுகிறாள். பைத்தியம் பிடித்தவனைப் போல் எஜமானன் வீட்டை நோக்குகிறான். அவன் நடந்து போகிறானேயன்றி அவன் எண்ணங்கள் பூராவும் சேரியில் தான் இருக்கிறது. திடீரென்று அவன் காதுகளில்ஏதோ சப்தம் விழுகிறது. நிமிர்ந்து பார்க்கிறான். எஜமானன் கோபாவேசத்துடன் 'பறப்பயலே உனக்கு இவ்வளவு கர்வம் யார் கொடுத்தது? நெஞ்சில் எவ்வளவு தைரியமிருந்தால் நான் காலை 4 மணிக்கு வரச் சொன்னதை மதியாமல் காலை பத்து மணிக்கு வந்தாய், என்று வாய்க்கு வந்தபடி திட்டி விட்டுத் துள்ளிக்குதித்தான். கருப்பன் திடுக்கிட்டவனாய் சாமீ! வீட்டில் மனைவி குழந்தை பிறந்து மிகவும் ஆபத்திலிருக்கிறாள். எனக்கு வேறு திக்கில்லையே. தாங்களே! ஏதாவது கஞ்சிக்கு வழி செய்யுங்கள். இரண்டு நாட்களாக பட்டினி என்றான்.

எஜமானன் இவைகளையெல்லாம் காதில் வாங்காமல் 'ஏண்டா வரவில்லை என்றால், இவ்வளவு சாக்கு சொல்லி என்னைஏமாற்றுகின்றாயா?" என்று முரட்டுத்தனமாக "ஏரியில் தண்ணீரில்லை. ஊரார் எல்லோரும் சேர்ந்து வாய்க்கால் வெட்டுகின்றார்கள். என் வீதத்திற்கு சீக்கிரம் ஓடு" என்று மண் வெட்டியைக் கொடுத்து விட்டு வீட்டுக்குள் சென்று நன்றாகக்குளித்துக் கொழுக்கத் தின்று தூங்குவதற்குச் சென்று விட்டான். பார்த்தான் கருப்பன். ஐயோ! நான் என் செய்வேன்! எஜமானன் உள்ளே போய்விட்டாரே! நான் என்ன சொல்லியும் கேட்கவில்லையே! வேலைக்குப்போவதா? திக்கில்லா என்மனைவியைக்காப்பாற்றுவதா? அந்தோ வேலைக்குப்போகாமல் சேரிக்குச்சென்றாலும் மனைவியைக் காப்பாற்றுவதெப்படி? குழந்தையின் கதி என்னவாயிற்றோ? என்று கண்களில் தாரை தாரையாக நீர் வடிய எஜமானன் வீட்டைப்பார்த்த வண்ணமாகவே வெறுங்கையுடன் குடிசையை அடைந்தான்.

நுழைந்தான் அந்தோ! அங்குகண்ட காட்சி என்ன? உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி 'வறுமை' என்னும் கொள்ளை நோயின் வாய்ப்பட்டு கருப்பாயி இறந்து கிடந்தாள். பிறந்தகுழந்தை அருந்தப்பாலின்றி (பல்லாயிரக்கணக்கான குடங்கள் பாலை குழாங்கல்லிற்கு பாலாபிஷேகம் செய்யும் நம் நாட்டில்) உயிர்ப்போக்க தவித்துக் கொண்டிருக்கின்றது. இவைகளைக் கண்ட கருப்பன் மனம்பதைத்து உதடு துடித்து, பெருமூச்சடைந்து தன் மனைவி பக்கமாகக்கதறி விழுந்தான். அம்மூவரும் மாண்டனர்.

அன்புமிக்க தோழர்களே! நீங்கள் கருப்பன் தனது தாய் தந்தையர் மரணத்திற்காக பட்டகடனைத்தீர்க்க வழியின்றி ஓர் முதலாளியின் கொடிய கொள்கைகளுக்கு உட்பட்டு உயிர் துறந்ததை விரும்புகிறீர்களா? இல்லையேல் அருததமற்ற பழக்கவழக்கங்களையும், மூடச்சடங்குகளையும் பணக்காரத்தன்மையையும் அறவே அகற்றி மனிதன் இன்புற்று வாழ வேண்டும் என்ற சமதாமக்கொள்கைகளை ஆதிரிக்கின்றீர்களா?

---

## புதுப்பாளையம்.

### சமதர்ம வாசகசாலை.

24-12-33 ஞாயிற்றுக் கிழமை மாலை 3மணிக்கு வாசகசாலையின் வாராந்தரக்கூட்டம் செங்கம் தோழர் கே. வெங்கிடாசலம் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர்கள் ஏ. முத்து கிருஷ்ணன், பி. கிருஷ்ணன் வி. தங்கவேலு, ஏ. கோவிந்தன் ஆகியவர்கள் "மோட்சம் நரகம்" என்பது பற்றியும், செங்கம் தோழர் எஸ். சி. சுப்பிரமணியம் அவர்கள் "சுயமரியாதைக்காரர்கள் சொல்வதென்ன"? என்பது பற்றியும் தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் "காந்தி கதர்" என்பது பற்றியும், சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் சென்னையில் நடக்கும் மாகாண நாஸ்திகர் மகாநாட்டிற்கு இவ் வாசகசாலையின் சார்பாக இரு தோழர்களை அனுப்ப தீர்மானிக்கப்பட்டு கூட்டம் இரவு 7மணிக்கு கலைந்தது.

(4-பக்கத் தொடர்ச்சி)

சர்க்காராவது, அது எவ்வளவு நியாய வரை முறைக்கு கட்டுப்பட்டதாயினும், அதனுடைய நன்மைக்கு பாதகமாக நீதிபதிகள் சுயாதீனம் காட்டுவதை வெகுகாலம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. இதையெல்லாம் கவனிக்கும்பொழுது ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளின் நீதிஸ்தலங்களிலும், ரஷ்ய நீதிஸ்தலங்கள் குறைந்த சுயாதீனமுள்ளவை என்று சொல்லுவதற்கில்லை.

### மேற்பார்வையும், ஆதிக்கமும்.

ரஷ்ய நீதிஸ்தல உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு உயர்வும் அதிகாரங்களும் உள்ளவர்களாய் இருந்தாலும், அவர்கள் கடமையில் தவறு செய்தால் தண்டனைக்கு உள்ளாவார்கள். இது சோவியத் நீதியிலாக்காவின் முக்கிய சிறப்பாகும். கீழ்க்கோர்ட் நடவடிக்கைகளை உயர்தர கோர்ட்டுகளும் புரோக்கியூரேட்டர்களும் மேற்பார்வைசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புரோக்கியூரேட்டரும், அவருடைய உதவிக்காரரும் தவிர வேறெந்த உத்தியோகஸ்தர் மீதும், எந்த நீதிஸ்தல தலைவரிடமாவது பிரியாது செய்யலாம். கோர்ட் தலைவரையும் தவிர, வேறெந்த ஆள் மீதும் புரோக்கியூரேட்டர் வழக்குத் தொடரலாம். நீதிபதிகளுக்கும் அட்வகேட்டுகளுக்கும் விரோதமாக நடவடிக்கை செய்வதற்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்கிறது. சட்டத்தின் நோக்கத்துக்கு மாறாக ஒரு நீதிபதி தீர்ப்பு செய்தால் அது குற்றமாகக் கருதப்பட்டு அவர் மீது நடவடிக்கை செய்யப்படலாம். இதுவுமன்றி, நீதி இலாக்காவையும், மற்றெல்லா அரசாங்க இலாக்காக்களையும் பரிசோதித்து குணதோஷம் சொல்வதற்கென்றே "தொழிலாளிகள் விவசாயிகள் விசாரணை சங்கம்" என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது.

### நிரந்தர சட்டமும் நடவடிக்கையும்

ரஷ்யாவில் பொதுவுடமை அரசு ஏற்பட்டிருப்பதால் நிரந்தர சட்டத்திலே பெரிய மாறுதல் ஏதும் உண்டாகவில்லை. உற்பத்தி செய்கிற- பகிர்ந்து கொடுக்கிற சாதனங்களின் உடைமைப் பாத்தியதையை தனிமனிதனிடமிருந்து கவர்ன்மெண்டுக்கு மாற்றினதால் தகராறுகள் சம்பந்தப்பட்ட கட்சிகளின் அந்தஸ்தினர்களில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே யன்றி அது சம்பந்தமான சட்டத்தின் மூல தத்துவங்கள் மாறுதல் அடையவில்லை. சோவியத் நீதிமுறையின் முக்கிய சிறப்பு என்ன வெனில் அதன் தெளிவான, சுலபமான தன்மையே ஆகும். தற்கால நிலைமைகள் பல திறப்பட்ட வையாயிருப்பதால் இந்த நோக்கம் அதாவது சுலபமான முறையில் நீதிவழங்கவேண்டும் என்ற நோக்கம் எளிதில் முடியக்கூடிய காரியமாகத் தோன்றவில்லை.

### நீதிஸ்தலங்களின் ஆடம்பரமற்ற தன்மை.

வெளியாசாரத்தின் மேலுள்ள மோகத்தினாலும், பழங்காலத்து மரியாதை முறைகளை கண்டிப்பாய் அனுசரிப்பதாலும் மற்ற நாட்டு நீதிஸ்தலங்களில் காணப்படும் ஆடம்பரச்சிறப்புகளும், அதனால் தோன்றும் செயற்கையான மனமடிவை உண்டாக்கும் நிலைமையும், ரஷ்ய நீதிஸ்தலங்களில் கிடையவே கிடையாது. நம்முடைய நாடு போன்ற முதலாளித்துவ நாடுகளிலே நீதிபதிகள் தங்கள் உத்தியோகத்தின் காரணமாக பொது மக்களுடன் கலந்து பழகாமல் ஒரு தனி வகுப்பாராயிருந்து வருகின்றனர். எனவே வழக்காளிகளுடன் கலந்து பழகி அவர்களின் பழக்க வழக்கங்களையும், தவறு செய்வதற்கேற்ற நிலைமைகளையும் பற்றி நேரில் தெரிந்து கொள்ளுவதற்கு சுபநிலாக நீதிபதிகள் ஒரு உயர்ந்த நிலைமையிலிருந்து கொண்டு நீதிவழங்குகின்றனர்.

ரஷ்யாவிலோ, நீதிபதிகள், புரோக்கியூரேட்டர்கள், அட்வகேட்டுகள், சாட்சிகள் வழக்காளிகள் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆகியவர்கள் எல்லாரிடத்திலும் உயர்வு தாழ்வு மனப்பான்மை என்பதே கிடையாது.

ரஷ்ய நீதிஸ்தலங்களிலிருக்கிற மூன்று நீதிபதிகளிலே இரண்டு பேர் வழக்கு விசாரணைக்கு ஒரு வாரத்துக்கு முன்னும், ஒரு வாரத்துக்குபின்னும், வழக்காளிகளைப போலவே வயல்களில் அல்லது தொழிற்சாலைகளில் வேலைசெய்கிற சாதாரண ஆட்களாயிருப்பார்கள். எனவே சாட்சிகளும் குற்றம் சாட்டப்பட்டவர்களும் கோர்ட்டிலே அச்சமின்றி வழக்கிலுள்ள பல விஷயங்களையும் பற்றி தாராளமாக வாதிக்கின்றனர்.

ரஷ்யகோர்ட்டுகளின் காட்சி இந்திய கிராமப் பஞ்சாயத்துகளைப்போல இருக்கிறது.

### முடிவுரை

ரஷ்ய ஸ்தாபனங்களின் சிறப்புத் தன்மையைப் பற்றி தீர்மானிக்கும் பொழுது அவை ஏற்பட்டு பதினாறு வருடங்கள் தான் ஆகிற தென்பதையும் நெடுங்காலமாக இருந்து வருகிற மற்ற ஸ்தாபனங்களுடன் ஒப்பிட்டுப் பேசத்தக்க போதிய வளர்ச்சி அடையவில்லை என்பதையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ரஷ்ய நீதிமுறை பூரண சிறப்புள்ளதல்ல வெனினும் தற்போது பரீட்சை செய்யப்படுகிற ஒரு புதிய முறையாக அதை ஊன்றி ஆராய்ச்சி செய்யத்தக்கதாயிருக்கிறது. ஆனால் அதனை இகழ்ந்து தள்ளவோ, அல்லது கண் மூடித்தனமாக பின்பற்றவோ வேண்டியதில்லை.

---

(3-ம் பக்கத்தொடர்ச்சி.)

நாகரீகம் என்பது பிடிபடாத ஓர் விஷயமென்று முன்பே கூறினேன். நம்நாட்டு பெண்கள் எப்படி Belt (பெல்ட்) கட்டாமல் சேலை கட்டுகிறார்களென்றும் அது இடுப்பில் எவ்வாறு தங்கியிருக்கிறதென்றும், தலைக்கு ஊசி இல்லாமல் பெண்கள் எவ்வாறு மயிர்களை சேர்த்து முடிந்துகொள்ளுகிறார்களென்றும், நாம் சாப்பாட்டுக்கு தினம் ஒரு இலை (Plate) எப்படி செலவு செய்கின்றோம், என்ன மகத்தான நஷ்டமென்றும், மேனாட்டார் ஆச்சரியப்பட்டு நம்மவர்களை கேட்பவரையும் கேட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் அவர்களின் செய்கையை சரியாக உணராததினால் சிலதை ஆச்சரியமாக கருத நேரிடுகிறது.

நம்மிடையேயுள்ளசாதி அபிமானம் சொந்தகார அபிமானம், பாஷா அபிமானம், தேசாபிமானம் எல்லாம் தொலையவேண்டும் இல்லாவிட்டால் எந்தநல்ல விஷயத்திலும் நாமமுடிவு காணுவது சரியாக ஆகிவிடாது.

காந்தியார் மேனாட்டில் முழங்கால் துண்டோடு—போதிய ஆடையின்றி போனபெருமையைப்பற்றி ஒரு நண்பர் குறிப்பிட்டார். இது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமானதாகும் சௌகரியத்திற்காகவும்-நன்மைக்காகவும் அங்கு அதிக ஆடைகளைபந்தோபஸ்தக்காக அணிந்துகொள்ளாமல் பிடிவாதத்தோடு— கேவலம் இந்திய தர்மம் என்ற வெறும் எண்ணத்திற்காக குளிரில் விரைத்து போக இங்கிலாந்து வாசம்செய்தது எவ்வளவு தூரம் நியாயமான செய்கையாகும்?

புதிய எண்ணங்களும் புதிய எழுச்சிகளும்-புதிய காரியங்களும் நிகழுகின்றன. நீங்களும் காலப்போக்கின் உயரிய பலனை வீணாக்காது பகுத்தறிவை மேற்போட்டுக்கொண்டு ஜன சமுதாய நன்மையை தேடி பாடுபட முன்வாருங்கள். உங்களுடைய முயற்சிக்கு எல்லாம் வெற்றியே உண்டு. வெறும் கடவுள் நம்பிக்கைகொண்டிருந்தவர்களும்கூட தங்களுடைய போக்கை மாற்றிக்கொண்டு முயற்சி மெய்வருந்தகூலி தரும் என்றுசொல்லிவருகிறார்கள். ஆகவே தோழர்களே! நீங்கள் தன் நம்பிக்கைகொண்டு—மக்களின் விடுதலைக்கு சரியான வழிகளில் பகுத்தறிவை அடிப்படையாகக்கொண்டு போராடவாருங்கள். என்று பேசிமுடித்தார். காரியதரிசியால் தலைவருக்கு வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிதுகலைவுற்றது.

பின்னர் ரெவரெண்டு தோழர். பாப்ளிதுரை அவர்கள் லண்டன் மிஷனரி பள்ளிக்கூட விளையாட்டு இடங்களையும் —சந்தோஷமாக காலங்கழிக்க உல்லாசமாக நிர்மாணித்திருக்கும் தோட்டங்களையும் தோழர். ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு காண்பித்தார்.

---

## ஏமாந்த கடவுள்.

நாகூர் பெருமாள் கோவிலில் 21-12-33 வெள்ளிக்கிழமை ராத்திரி 8மணி சுமாருக்கு பெருமாளுக்குபூஜைசெய்து விட்டு பின்புறம் இருக்கும் ஆஞ்சனேயர் (என்ற குரங்கு விக்கிரகத்திற்கு) பூஜை செய்து விட்டு வந்து பார்க்க பெருமாள்மேல் இருந்த நகைகளில் சிலதும் தலையில் வைத்து இருந்த கிரீடமும் காணோமாம். இனிமேலாகிலும் கல் சிலைகளாகிய கடவுளுக்கு நகைகளை போட்டு ஏமாறுதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

(ஒரு நிருபர்)

---

## விதவாவிவாகம்.

திசையன்விளை அறிவுவிளக்க நிலையத்தாரின் பெரும் முயற்சியால் 13-12-33 புதன்கிழமை பகல் 11 மணிக்கு சுமார் 4மையிலுக்கடுத்த மேலபண்டாரபுரம் மணமகள் இல்லத்தில் திருச்செந்தூர் தாலூகா புத்தன் தருவை தோழர் ஆ. முத்துமாலை ஆசாரி அவர்கள் புதல்வர் தோழர் ஆறுமுகம் அவர்களுக்கும் நான்குனேரித் தாலூகா மேலபண்டாரபுரம் தோழர் பிரமுத்து ஆசாரி அவர்கள் புதல்வி தோழர் கிருஷ்ணம்மாள் அவர்களுக்கும் திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம சமூக சீர்திருத்த சங்கம் காரியதரிசி தோழர் கே. என். தங்கவேலு அவர்கள் தலைமையில் மறுமண ஒப்பந்தம் மிக விமரிசையாக நடைபெற்றது.

கல்லிடைக்குறிச்சி கள்ளிகுளம் கொமட்டிக்கோட்டை புத்தன் தருவை திசையன் விளைமுதலிய பல ஊர்களிலிருந்து ஆண், பெண் தோழர்கள் அநேகர்விஜயம் செய்திருந்தார்கள். மணமகன் தோழர் எம். ஆறுமுகம் அவர்கள் இதற்குமுன் மணம் செய்துகொள்ளாத வாலிபர் என்பது குறிப்பிடதக்கது.

ரோஜா முத்தையா

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

## கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அறிய அந்நூல்கள்:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் ... ... ... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு ... ... ... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ... ... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... ... | 2 | 8 |
| என்கடன் பணி செய்து கிடப்பதே ... ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் ... ... ... | 0 | 8 |
| சைவத்திறவு ... ... ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானரும் ... ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... ... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... ... | 0 | 8 |
| நாயன்மார் ... ... ... | 0 | 3 |
| சைவ சமய சாரம் ... ... ... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் ... ... | 0 | 6 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் ... ... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் ... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் ... ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி [illegible] தமித்த வி[illegible] அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலித்தெரு [illegible], சென்னை.

---

## விற்பனைக்கு [illegible] நம்மிடம் உள்ள
## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்திரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| 5. | மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| 8. | ஆஸ்திக நாஸ்திக ச[illegible] ... | 0—6—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு [illegible] | [illegible]—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் [illegible] | [illegible] |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் [illegible] | [illegible] |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்பு[illegible]வர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறை[illegible] ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்க[illegible] பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---


## அமுத சுரபி.

### சிறந்த தாதுவிருத்தி இலேகியம்[illegible]

### உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் ஏ[illegible] களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குன்றிது, [illegible] கள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கழிவு, வெட்டைச்சூடு, [illegible] கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய [illegible] னால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு [illegible] தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், [illegible] தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், [illegible] பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி [illegible] மென்பதில் யாதொரு ஐயமுமில்லை. [illegible]

40-நாள் மருந்து ரூ. 3—8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை[illegible]

221, தங்கசாலை வீதி, சென்னை.

சகவழ் கேட்லாக் இனாம்.



[illegible] பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்த வரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்மம குஷ்ட ரோகங்களுக்கு அனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் 12—8—0.

[illegible]யணசாமி,
[illegible] தன்மவைத்திய[illegible]சாலை பழனி.S.I


"குடி அரசு" பு[illegible]
வால்யூம்,

நமது "குடி அரசு" [illegible] யின் 8வது [illegible] ஒன் றசேர்க்கப்பட்டு [illegible] நூம் மிக்க அழகாக [illegible] பப்பட்டிருக்கிறது.

உடனே முந்[illegible]
விலை ரூபாய் நான்கு.
"புரட்சி" [illegible]
விலை ரூபாய் மூன்று.

பணம் முன்பணமாக [illegible] விடவேண்டும். [illegible] டால் கவனிக்கப்படமாட்[illegible]

மானேஜர்,
குடி அரசு பதிப்[illegible]

---


[illegible]க வெட்டை நோய்[illegible]
[illegible]பிரவாதம்[illegible]

11-நாட்[illegible]
ர்து பாட்டில் 1-க்கு [illegible]
கம்) எவ்வித பத்தியமும் [illegible]
விலாசம்:— டா. [illegible]
[illegible]

# குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

**மதமும், லெனினும்.**
விலை அணா 0—4—0

**கைவல்யம் அல்லது கலைக்கியானம்.**

**பொதுவுடமைத்தத்துவங்கள்.**
விலை அணா 0—3—0.

**இராமாயண ஆராய்ச்சி.**
முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

**ஞானசூரியன்.**
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

**ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.**
இதன் விலை அணா. 0—2—0.

**தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.**
இதன் விலை அணா 0—3—0

**பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.**
இதன் விலை அணா 0—4—0

**மேயோகூற்று மெய்யா? பொய்யா?**
இதன் விலை அணா 0—3—0

**அகத்தியர் ஆராய்ச்சி.**
இதன் விலை அணா 0—2—0

**ருஷ்யாவைப் பற்றி பெர்னுட்ஷா.**
விலை அணா 0—1—0.

**கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?**
இதன் விலை அணா 0 2—0

**கடவுளும், பிரபஞ்சமும்.**
இதன் விலை அணா 0—4—0.

**சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?**
விலை பை. 0—0—3

**இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.**
விலை பை. 0—0—6

**இந்தியாவின் குறைபாடுகள்.**
டாக்டர் பரஞ்சிபை எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

**இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.**
விலை அணா. 0—2—0

**சுயமரியாதைப்பாடல்.**
விலை அணா 0—2—0.

**கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணா 0—2—0

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

**பெண் ஏன் அடிமையானாள்?**

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணா 5.

**முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.**

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 5.

**நான் ஏன் கிறிஸ்தவனல்ல?**

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணா 3.

**மதம் என்றால் என்ன?**

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 2.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

## முன்னேற்றம்.

பிரிட்டிஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா வெள்ளிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

## 'பிரசண்ட மாருதம்'

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை

உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு ......... ரூ. 1—8—0
தனிப்பிரதி 1½ அணா

விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.


விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.